32°c
கூடிய வெப்பநிலை 39 c
குறைந்த வெப்பநிலை 26 c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சாரதி பயிற்சியில் நம்பிக்கையை வென்ற நிறுவனம்
216, கண்டி வீதி ,வவுனியா.
(வசந்தம் திரை)
024 2227777, 077 7100444

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/= ■ சுடர்: 29 ■ கதிர்: 143 ■ வள்ளுவர் ஆண்டு: 2045 சித்திரை 05, வெள்ளி 18.04.2014

# இன்ரபோல் உதவியுடன் புலிகளுக்கு வலைவீச்சு

## 40 விடுதலைப் புலி சந்தேகநபர்கள் உட்பட 96 பேருக்கு சிவப்பு முன்னறிவிப்பு

### பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தகவல்

கொழும்பு, ஏப்ரல் 18
விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் 40 பேர் உட்பட 96 இலங்கையர்களுக்கு எதிராக சர்வதேசப் பொலிஸார் ஊடாகச் சிவப்பு முன்னறிவிப்பு (பிடிவிறாந்து) பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண வெளியிட்டுள்ளார்.
சிவப்பு முன்னறிவிப்பு பிறப்பிக்கப்பட்டவர்களில் 40 பேர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் ஏனைய 56 பேர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச ஆயுத விநியோகஸ்தரான கே.பி. என்று கூறப்படும் குமரன் பத்மநாதனுக்கு எதிராக சர்வதேசப் பொலிஸார் ஊடாகப் பிறப்பிக்கப்பட்டிருந்த சிவப்பு முன்னறிவிப்பு நீக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவர் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடாத காரணத்தாலேயே அவர் மீதான சிவப்பு முன்னறிவிப்பு நீக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் பேச்சாளர் விளக்கமளித்துள்ளார்.
இதுகுறித்து விளக்கமளித்த பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண.
96 இலங்கையர்களுக்கு சர்வதேசப் பொலிஸார் ஊடாக சிவப்பு முன்னறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 40 பேர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள். இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் ஒன்றிணைவதைத் தடுப்பதற்காகவே இந்தப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. சர்வதேச வலைப்பின்னலை இயக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரான நெடியவன் மற்றும் விநாயகம் ஆகியோருக்கு எதிராகவும் இந்த சிவப்பு முன்னறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 190 நாடுகளுக்கு சர்வதேசப் பொலிஸார் இந்தசிவப்பு

21ஆம் பக்கம் பார்க்க

## இறுதிப் போரில் இந்தியப் படைகள்: விசாரிக்க கோரும் மனு தள்ளுபடி

டில்லி, ஏப்.18
இலங்கையில் நடந்த இறுதிப் போரில் இந்தியப் படைகள் பங்கேற்றமை தொடர்பாக சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்று கோரி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை இந்திய உயர்நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.
டில்லி நீதிமன்றின் தமிழக

— 21ஆம் பக்கம் பார்க்க

கச்சதீவும் அது எதிர்நோக்கும் சவால்களும்
பக்கம் 12

## வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் பதவி இழுபறியில்

யாழ்ப்பாணம்,ஏப்.18
வடக்கு மாகாண சபையின் எதிர்கட்சித் தலைவர் தெரிவில் இழுபறி நிலவுகின்றது என்று தெரியவருகின்றது.
எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்த கமலேந்திரன் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருக்கும் நிலையில், அவரின் வெற்றிடத்துக்கு தவராசா நியமிக்கப்பட்டுள்ள போதும் எதிர்கட்சித் தலைவர் தொடர்பில் வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்கு இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

— 21ஆம் பக்கம் பார்க்க

## ஐ.தே.கவினர் மீது முட்டை வீச்சு



கொழும்பு.ஏப்.18
ஜனாதிபதியின் சொந்த ஊரான அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச துறைமுகம் மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றை நேரில் பார்ப்பதற்காக பஸ் ஒன்றில் அங்கு சென்றிருந்த ஐ.தே.கட்சியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், அங்கு திரண்டவர்களால் தூஷிக்கப்பட்டதுடன் முட்டை வீச்சுத் தாக்குதலுக்கும் இலக்காகினர். இந்தச் சம்பவம் பொலிஸார் பார்த்திருக்கவே நடந்துள்ளது என்று

21ஆம் பக்கம் பார்க்க

## இந்திய அரசின் பலவீனமே மீனவர் தாக்கப்பட காரணம்

### நரேந்திர மோடி காட்டம்

இராமநாதபுரம், ஏப்.18
இந்திய மத்திய அரசின் பலவீனம் காரணமாகவே தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுகின்றனர் என்று காட்டமாகத் தெரிவித்துள்ளார் பா.ஜ.கவின் பிரதம வேட்பாளர் நரேந்திர மோடி.
இராமநாதபுரத்தில் நேற்று இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் அங்கு மேலும் கூறியதாவது:
"மத்தியில் ஆட்சி செய்யும் காங்கிரஸ் கட்சி பலவீனமாக இருப்பதாலே இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குகின்றனர். தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையும், குஜராத் மீனவர்களை பாகிஸ்தானும், கேரள மீனவர்களை இத்தாலியக் கடற்படையும் தொடர்ந்து சித்திரவதை செய்வதுடன் சிறைப்பிடித்தும் வருகிறன.
தற்போதுள்ள தொழில் நுட்பத்தில் செய்மதி மூலம் மீன்பிடி இடம்பெற்று வருகிறது. இதனை நவீன தொழில் நுட்ப வளர்ச்சியுடன் மேலும் அபிவிருத்தி செய்து வெளிநாட்டுக்கு ஏற்று

21ஆம் பக்கம் பார்க்க

எம்மைப் பின்தொடருங்கள்...
முகநூல் www.facebook.com/uthayan.print
டுவிற்றர் https://twitter.com/UthayanPrint

## சரணடைந்த போராளிகள் இன்னமும் புனர்வாழ்வில்

### இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.18
சரணடைந்த போராளிகள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. அவர்களுக்கு இன்னமும் புனர்வாழ்வு வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களும் விரைவில் சமூகத்தோடு இணைக்கப்படுவர் என்று கூறியுள்ளார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய.
போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் முடிவுறுகின்றநிலையில், கொழும்பில் நேற்று

21ஆம் பக்கம் பார்க்க

## நாய்களுக்கு கருத்தடை செய்ய கிளம்பி வருகிறது விசேட குழு

யாழ்ப்பாணம், ஏப்.18
குடாநாட்டில் கட்டாக்காலி நாய்களுக்கு தடுப்பூசி மூலம் கருத்தடை செய்வதற்கு அடுத்த மாதம் கொழும்பில் இருந்து விசேட குழு ஒன்று வரவுள்ளது. ஒவ்வாரு நாய்க்கும் 2ஆயிரத்து 500 ரூபா செலவில் கருத்தடை செய்யப்படவுள்ளது - இவ்வாறு யாழ்.பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நேற்றுக் கூறப்பட்டது.
யாழ்.நகருக்குள் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளமை தொடர்பாக பொது மக்களால் கூட்டத்தில்

21ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழு என்பது தேவையற்ற ஒன்று

### சர்வதேச அனுசரணையே தேவை என்கிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.18
இலங்கையில் காணப்படும் இனப்பிரச்சினை தொடர்பில் தீர்வு காண்பதற்கு சர்வதேச அனுசரணையுடன் பேசுவதற்கு நாம் எப்போதும் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் அரசு நியமித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கெடுக்க மாட்டோம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது கூட்டமைப்பு.
"தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாட தயாராக இருக்கின்றோம். எனினும் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசு நியமித்துள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைய வேண்டும்" என்று தெரிவித்திருந் தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இலங்கை அர சுக்கும் இடையிலான பேச் சின்போது தலைமை தாங்கிய வரும், கடந்த பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்காவுக்குச் சென்ற அரச தரப்புக் குழுவுக்குத் தலைமை தாங்கியவருமான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா. இலங்கை அரசின் மூத்த அமைச்சரான டியூ குணசேகரவும் அதே கருத்

21ஆம் பக்கம் பார்க்க

## துன்பங்கள் துளைத்தும் துவளாத மக்கள்

### 'எம்மால் முடியும்' என்ற வைராக்கியத்துடன் உள்ளனர்

### 'மாற்றத்துக்கான சாதனையாளர்' சிவானந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.18
முப்பத்திரண்டு ஆண்டுகள் கழித்து நான் இங்கு வரும் போது சந்தேகத்துடனேயே வந்தேன். 'மக்களின் மனநிலை எவ்வாறிருக்கும்?', 'மனதளவில் அவர்கள் உடைந்திருப்பார்களா?' என்று சிந்தித்துக் கொண்டே வந்தேன். ஆனால் இங்கே வந்து பார்த்தபோது என்னால் நம்பமுடியவில்லை. மக்கள் 'எம்மால் முடியும்' என்ற வைராக்கியத்தோடு பேசுவதை பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கின்றது - இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்கப் பேராசிரியரும் - அமெரிக்க அரசின் அதியுயர் விருது பெற்ற தமிழருமான சிவா சிவானந்தன்.
நேற்று கிறீன் கிறாஸ் விடுதி

21ஆம் பக்கம் பார்க்க



உள்நாட்டு விவகாரம் என்று எந்த நாடும் பேசக்கூடாது
பக்கம் 13

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இராணுவத் தொடர்பை மேம்படுத்த நல்லிணக்கத்தில் முன்னேற்றம் தேவை

## இலங்கைக்கு கூறுகின்றது அமெரிக்கா

ஹவார்ட், ஏப்.18
இலங்கை அரசுடன் அமெரிக்கா இராணுவ ரீதியிலான தொடர்புகளைப் பேணி வருகின்றது. அந்தத் தொடர்புகளை மேம்படுத்த வேண்டும் என்று இலங்கை விரும்பினால், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் நல்லதொரு முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், "நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் நல்ல முன்னேற்றத்தை எட்டியதும், இலங்கை அரசுடன் இன்னும் விரிவான இராணுவ உறவுகளை மீண்டும் ஒருமுறை ஏற்படுத்திக் கொள்வதற்கு நாம் எதிர்பார்த்திருக்கிறோம்"-என்று கூறியுள்ளார்.

'தெற்காசியாவில் அமெரிக்காவின் பாதுகாப்புக் கொள்கை: செழிப்பு மற்றும் பாதுகாப்புக்கான ஒரு பார்வை' என்ற தொனிப்பொருளில், ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"இலங்கை அதிர்ஷ்டவசமாக தனது உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்திருந்த போதிலும், நல்லிணக்கம் என்பது சவாலானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இலங்கை தொடர்பாக கடந்த மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடுத்து, பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதிப்படுத்துவதற்கான நம்பகமான முயற்சிகளை மேற்கொள்ளும்படி தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வருகிறோம்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் நல்ல முன்னேற்றத்தை எட்டியதும், இலங்கை அரசுடன் இன்னும் விரிவான இராணுவ உறவுகளை மீண்டும் ஒருமுறை ஏற்படுத்திக் கொள்வதற்கு நாம் எதிர்பார்த்திருக்கிறோம். அத்துடன், அரசியல் உறுதிப்பாட்டையும், பிராந்தியப் பாதுகாப்பையும் அதிகரிப்பதற்கு, தெற்காசியாவில் செழிப்பு நிகழ்ச்சித் திட்டம் மிகவும் முக்கியமானது.

கடுமையானதும், அபாயம் மிக்கதாகவும் இருந்த போதிலும் கூட, தெற்காசியாவில் உறுதிப்பாட்டையும் பாதுகாப்பையும் பலப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் அமெரிக்காவினது வெளிவிவகாரக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது"- என்று அந்த உரையில் அவர் மேலும் கூறியுள்ளார்.

(ற-5)

### சுற்றுலா ஆலோசனையை மீளமைத்தது பிரிட்டன்

லண்டன், ஏப்.18
பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் எனக்கூறி 16 நிறுவனங்களையும் 424 தனியாட்களையும் இலங்கை அரசு கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திக்தி பெயர் குறிப்பிட்டதன் பின்னர் பிரிட்டன் அரசு நேற்று அதன் இலங்கைக்கான பயண எச்சரிக்கையை புதுப்பித்தது.

நேற்று வெளியிடப்பட்டுள்ள இந்த ஆலோசனையின்படி ஊடகவியலாளர்கள் தவிர்ந்த ஏனைய வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வடக்குகிழக்குக்கு செல்ல இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையில்லை.

இலங்கையில் அரசியல் கூட்டங்கள் சில வேளைகளில் வன்முறைக்கு இட்டுசெல்கின்றன. எனவே பொதுக்கூட்டங்கள் இடம்பெறும் இடங்களை தவிர்க்குமாறு பிரிட்டனின் சுற்றுலா ஆலோசனையில் கோரப்பட்டுள்ளது. (ற)

### 18 இராணுவத்தினர் விபத்தில் காயம்

கிளிநொச்சி, ஏப்.18
ஏ9 வீதியில் கிளிநொச்சி, திருமுருகண்டியில் வேகக்கட்டுப்பாட்டினை இழந்த இராணுவ வாகனமொன்று குடைசாய்ந்ததில் அதில் பயணித்த இராணுவத்தினர் 13 பேர் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வளைவில் இரா ணுவ வாகனத்தை திருப்பும் வேளையில் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து குடைசாய்ந்ததிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இராணுவப்பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

(ற-18-55-426)



புத்தாண்டையொட்டிய எண்ணெய் தேய்க்கும் தேசிய வைபவம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையில் கணேமுல்ல, யட்டவத்த, ரஜ மஹா விகாரை யில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றபோது ஜனாதிபதிக்கு எண்ணெய் தேய்க்கப்படுகிறது.

## திடீரென வழங்கப்பட்ட வேலை வாய்ப்புக்கள்

### நெல்லியடி மத்திய கல்லூரியில் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், ஏப்.18
பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.மாவட்டத்தில் உள்ள பட்டதாரிகள், இளைஞர், யுவதிகள் என ஆயிரத்து 350 பேருக்கு வேலை வாய்ப்புகள்வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நெல்லியடி மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் 2000 ற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் வந்திருந்தனர் என்றும் அதில் கல்வித்தகைமைஅடிப்படையில்வேலை வாய்ப்புக்கள்வழங்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் திடீரென அறிவிக்கப்பட்டு நேற்றைய தினம் இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டது என்று தெரிய வருகின்றது. கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வேலைவாய்ப்பு வழங்கும் நிகழ்வு நடைபெற்றிருந்த போதும், அது குறித்து பிரதேச செயலருக்கு எந்தவிதான அறிவுறுத்தல்களோ, அறிவிப்போ விடுக்கப்படவில்லை.

அதேவேளை இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள நல்லிணக்கமைய ஆணையாளர், "வேலையின்மையே பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படக் காரணமாக இருக்கின்றது இதனை ஒழுங்கு முறைக்கு கொண்டுவருவதற்காகப் பாதுகாப்பு அமைச்சினால் இளைஞர் யுவதிகளுக் கான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றது. அதனை இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு என நினைக்க வேண்டாம்"- என்று தெரிவித்தார்.

"பதிவு செய்யப்பட்டவர்களில் முழுமையான படிவங்களை பூர்த்தி செய்து கொடுத்தவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிகள் நடைபெறவுள்ளன. அவர்ளுக்கு 30,000 ரூபா மாதாந்த சம்பளமாகவும் வழங்கப்படும். பல்வேறுபட்ட வேலைகளுக்கான ஆட்சேர்ப்பு நடத்தப்பட்டுள்ளது" என்றும் அவர் மேலும் கூறினார்.

அதேவேளை, இந்த வேலை வாய்ப்பு வழங்கப்பட்ட நிகழ்வு தொடர்பில் இளைஞர், யுவதிகளிடையே சந்தேகம் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. குறித்த நிகழ்வு பாதுகாப்புக் குழுவால் மேற்கொள்வதால் இது இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பாக இருக்குமோ என்று அவர்கள் சந்தேகத்துடன் பேசிக்கொண்டனர். அத்துடன் தாம் கொடுக்கும் ஆவணங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாமற் போகலாம் என்றும் அவர்கள் அச்சமடைந்து காணப்பட்டனர்.

(ற-422)

### மாத்தறைப் பெண் கொலை; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, ஏப். 18
கிளிநொச்சி, பிரமந்தனாறு பகுதியில் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட மாத்தறைப் பெண் கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அடுத்துவரும் 24 மணித்தியாலங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

சிவில் பாதுகாப்பு படைமுகாமில் பணிபுரியும் குறித்த சந்தேக நபரிடம் இருந்து கொலைசெய்யப்பட்ட பெண்ணின் கைத்தொலைபேசி , கொலைக்குப் பயன்படுத்திய கூரிய கத்தி ஆகிய வற்றை கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதையடுத்தே கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றின் நீதவான் எம்.ஐ.வஹாப்தீன், குறித்த சந்தேநபரை 24 மணிநேரம் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கெண்டு மீண்டும் இன்றையதினம் நீதிமன்றில் முற்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

(ற-55)

## திரிபுபடுத்தல் இன்றைய யதார்த்தம் குழப்பமடையாது ஆய்ந்தறியுங்கள்

### குருநகர் யுவதிஉயிரிழந்தமை தொடர்பாக யாழ். ஆயர் இல்லம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.18
குருநகர் பகுதியில் கடந்த 14ஆம் திகதி உயிரிழந்த ஜெறோமி கொன்சலிற்றா அவர்களுக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரின் சாவு தொடர்பாக பேராலய உதவிப் பங்குத் தந்தையர்கள் இருவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த விசாரணைக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றோம் என்று தெரிவித்துள்ள யாழ். ஆயர் இல்லம், குறித்த உதவிப் பங்குத் தந்தையர்களின் தவறான செயற்பாடுகளாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குறித்த யுவதியின் சாவுக்கு முன்னான காலப்பகுதியிலோ அல்லது அதற்குப் பின்னரான காலப் பகுதியிலோ பேராலயப் பங்குத் தந்தையிடமோ அல்லது ஆயர் இல்லத்திலோ எவராலும் எவ்வித முறைப்பாடுகளும் செய்யப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று தெரிவித்துள்ளது.

குருநகர் பகுதியில் 14ஆம் திகதி கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார் ஜெறோமி கொன்சலிற்றா என்ற யுவதி. அவரின் சாவுக்கு இரு குருமார்களே காரணம் என்று குறித்த யுவதியின் உறவினர்கள் கூறுகின்றனர். அந்தச் சம்பவம் குறித்து ஆயர் இல்லம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

"குறித்த யுவதி நவம்பர் 2013 தொடக்கம் பெப்ரவரி 2014 வரையில் மறையாசிரியராகக் கடமையாற்றி இருந்தார். நாம் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின்படி கடந்த ஒன்றரை மாத காலமாக குறிப்பிட்ட யுவதி எதுவித வெளித் தொடர்புகளும் அற்ற நிலையில் வீட்டுக்குள்ளேயே வைக்கப்பட்டிருந்தார் என்பது தெரியவந்துள்ளது. இந்தநிலையில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான உண்மைத் தன்மை, பாரதூரத் தன்மை என்பவற்றை ஆய்ந்தறிவதற்கு உதவியாக,தொடர்பானவர்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தவறுகள் மறைக்கப்படக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். எனினும் வெளியாகும் அனைத்துத் தகவல்களும் உண்மையானவை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. மிகைப்படுத்தல், திரிபுபடுத்தல் இன்றைய சூழலின் யாதார்த்தம் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். விடயங்களை சீர்தூக்கி ஆராய்ந்து அறிய வேண்டும்.

மேற்படி நிகழ்வுகளால் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ள அனைத்து கிறிஸ்தவ மற்றும் பிறமத சகோதரர்களுக்கு எமது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்தும் திருச்சபை கிறிஸ்தவ நன்னெறி வழி நின்று எமது பணியை முன்னெடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கின்றோம்- என்றுள்ளது.

(ற)

மீ ஒலி (Supersonic) வேகத்தில்
புத்தம் புதிய
விசா ஆலோசனை வரவுகள்

★ஆஸ்திரேலியா குடும்ப விசா
எண்ணி 180 நாள்களில் விரையலாம்.
★கனடாவில் படிக்க உழைக்க 90 நாள்கள் போதும்.
★இத்தாலி 2 வாரங்களில் நாட்டை விட்டுப்
பறக்கலாம்.

இச்சலுகை இன்னும் சில தினங்களுக்கு மாத்திரமே!

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
www.thisaivisa.com
021 221 9016/021 499 3502
(சி/13655) (4.3.6)



# விவசாயிகள்- ஆய்வாளர் இடையே நெருங்கிய தொடர்புகள் அவசியம்

## வட மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

விவசாயிகளுக்கும் ஆய்வாளர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருக்க வேண்டியது அவசியமாகும். விவசாயிகளிடம் அனுபவ அறிவும், தலைமுறையான பாரம்பரிய அறிவும் உள்ளது. அவர்களின் இந்த அறிவு, பல்கலைக்கழக ஆய்வாளர்களின் அறிவை விட குறைந்தது இல்லை - என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானக் கற்கைகள் நிறுவனம், யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாயபீடம் மற்றும் வட மாகாண விவசாய அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடத்திய விவசாயிகளுடன் தொடர்பாடல் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்.

"ஆராய்ச்சியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் தொடர்பாடல் இன்றியமையாதது. இந்தத் தொடர்பாடல் வெறுமனே ஆராய்ச்சியாளர் விவசாயிகளுக்கு தங்கள் கருத்துக்களை தெரிவித்து விட்டுப் போகும் ஒருவழித் தொடர்பாடலாக இருந்துவிட முடியாது.

இது ஆய்வாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையான இருவழித் தொடர்பாடலாக இருப்பது அவசியம். ஏனெனில் இரு தரப்பினரின் அறிவு விடயத்தில் ஒருதரப்பினரின் அறிவிலிருந்து மற்றைய தரப்பினர் சற்றும் குறைந்தவர்கள் அல்லர். எமது பரம்பரை விவசாயிகள் அறிவு மிக்கவர்கள். காலங்காலமாக அவர்கள் பயிர் செய்து வரும் தோட்ட நிலம் அல்லது வயல் அவர்களுக்கு ஒரு களப் பரிசோதனைச் சாலை.

அங்கு அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவ அறிவின் மூலமும் அவர்களின் மூதாதையர்களிடம் இருந்து தலைமுறை தலை முறையாக திரட்டிய அறிவின் மூலமும் விவசாயிகளிடம் விவசாயம் பற்றிய போதிய ஞானம் இருக்கின்றது.

எமது விவசாயிகளுக்கு எந்தப் பயிரை எந்த நிலத்தில் எந்தக் காலகட்டத்தில் பயிரிட வேண்டும் என்று தெரியும். எந்தப் பயிரை ஊடு பயிராக வளர்த்தால் பீடைகளைக் கட்டுப்படுத்தலாம் என்று தெரியும்.

சுதேசிய மருத்துவ அறிவைப் பயன்படுத்தியே ஆங்கில மருந்துகள் கண்டுபிடிக்கப்படுவதைப் போன்றே, விவசாயிகளின் சுதேசிய அறிவை ஆதாரமாகக் கொண்டுதான் விவசாய விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புக்களை நிகழ்த்துகிறார்கள்.



அமைச்சர் ஐங்கரநேசன்

இதனால்தான் இரு தரப்பினரது அறிவையும் ஒப்பிட்டு எவருடையது கூடியது அல்லது குறைந்தது என்று சொல்ல முடியாது என்று குறிப்பிட்டேன். அப்படி ஒப்பிட முடியும் என்று யாராவது சொன்னால் சில விடயங்களில் ஆராய்ச்சியாளர்களின் ஒரு சில வருட ஆய்வு அறிவைவிட, விவசாயிகளின் பன்னெடுங்காலப் பட்டறிவு மேலானது என்று தான் நான் சொல்வேன்.

ஆனால் விவசாயிகளும் ஆராய்சியாள்ர்களும் தங்கள் அறிவை மேன்மேலும் வளர்த்துக் கொள்வதற்கு இரு தரப்பினரும் தங்கள் கருத்துக்களை பரிமாறிக்கொள்வது அவசியம். பழையன கழிதலும் புதியன புகுதலும் பரிணாம வளர்ச்சியில் தவிர்க்க முடியாதது. கால மாற்றங்களுக்கு ஒவ்வாத பழைய விவசாய முறைகளுக்கு மாற்றாக சர்வதேச அளவில் அறிமுகமாகும் விவசாய முறைகளை, புதிய தொழில்நுட்பங்களை எமது விவசாயிகள் ஆய்வாளர்களிடம் இருந்து தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

அறிவை ஜனநாயகமயப்படுத்தும் இந்த இருவழித் தொடர்பாடல் எப்போதாவது ஒரு நாள் என்றில்லாமல் அவ்வப்போது தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். எமது விவசாயப் பொருளாதாரம் நிலையான வளர்ச்சி பெறு வதற்கு இது அவசியமாகும்" - என்றார்.

விவசாயிகளுடனான கலந்துரையாடல், குழுச்செயற்பாடு, வெளிப்படுத்துகை ஆகியவற்றை உள்ளடக்கிய இரு நாள் அமர்வுகளைக் கொண்ட இந்நிகழ்வில் நாளை விவசாய பீடத்தின் ஒன்றுகூடலும் விவசாய நிலங்களைப் பார்வையிடச் செல்லும் நிகழ்வும் நடைபெறவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(வ-10-14)

# குழந்தைகள் அதிதீவிர சிகிச்சை பிரிவுக்கு சி.பி.ஏ.பி. இயந்திரம்

## கொழும்பு லயன்ஸ் கழகத்தால் கையளிப்பு



இயந்திரத்தைக் கையளிக்கும் லயன்ஸ் கழகத்தவர்கள்.

யாழ்ப்பாணம்.ஏப்.18

யாழ்.போதனா மருத்துவமனையில் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கான அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு 3 மில்லியன் ரூபா பெறுமதியான சி.பி.ஏ.பி. என்ற இயந்திரம் கொழும்பு லயன்ஸ் கழகத்தால் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

குறை மாதத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் மூச்சுத் திணறல் மற்றும் சளி யடைப்பில் இருந்து பாதுகாக்கும் இயந்திரமான சி.பி.ஏ.பி இயந்திரமே இவ்விதம் வழங்கப்பட்டுள்ளது.

லயன்ஸ் கழகத்தின் 306 டி 1 யாழ். மாவட்ட முன்னாள் ஆளுநர், இராகவன் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 306 டி1 யாழ். மாவட்ட ஆளுநர் ரஞ்சித் பெர்னாண்டோ இந்த இயந்திரத்தைக் கையளித்திருந்தார்.

கடந்த 30 வருட காலமாக யாழ். போதனா மருத்துவமனைக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வரும் கொழும்பு லயன்ஸ் கழகம், தனது இன்னொரு சேவையாக குழந்தைகள் பிரிவுக்கு இந்த உதவியை வழங்கியுள்ளது. அத்துடன் ஏற்கனவே கண் சத்திர சிகிச்சை கூடம் ஒன்றை அமைத்துக் கொடுத்ததுடன் அம்புலன்ஸ் ஒன்றையும் வழங்கியிருந்தது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக லயன்ஸ் கழக ஆளுநர் ரஞ்சித் பெர்னாண்டோ, திருமதி டில்ஹானி பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். போதனா மருத்துவ மனை பிரதிப்பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், வைத்திய அதிகாரிகள், மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (வ-14)



விபத்தில் மோசமாகச் சேதமடைந்த ஹைஏஸ் வாகனம்.

# நேருக்கு நேர் மோதின ஹைஏஸ் வாகனங்கள்

## 3 வயதுச் சிறுமியும் வாகனங்களின் சாரதிகளும் காயம்

தென்மராட்சி, ஏப்.18

ஏ-9 வீதியில் இரண்டு ஹைஏஸ் வாகனங்கள் நேருக்கு நேர் மோதி தடம் புரண்டன. வாகனங்கள் மோசமாகச் சேதமடைந்த போதிலும் தெய் வாதீனமாக 3 வயதுச் சிறுமியொருத்தியும் இரு வாகனங்களின் சாரதிகளுமே காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மு.ப.10.30 மணியளவில் கொடிகாமம் இராமாவிலில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து 12 பேருடன் கொழும்பு சென்ற வாகனமும் கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரிக்கு சென்ற வாகனமுமே இவ்விதம் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன.

விபத்தில் அவ்விரு வாகனங்களின் சாரதிகளான கொழும்பு கிரிபத் கொடவைச் சேர்ந்த ரவி சுரேந்திர லிப்கே (வயது-31), தர்கா நகரைச் சேர்ந்த அப்துல் காதர் முகமட் (வயது-37), பேருவளை தர்கா நகரைச் சேர்ந்த நக்க்ர் அல் பாத்திமா(வயது-3) ஆகியோர் கையில் காயம் ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் பொலிஸார் விபத்துக் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(வ-9)

# அல்லிப்பளை வீதியை பாவனைக்குத் திறந்து விடுங்கள்

வலி.தென்மேற்கு, ஏப்.18

பாதுகாப்புப் படையினரால் மூடப்பட்டுள்ள கிளாலியிலிருந்து பளைக்குச் செல்லும் அல்லிப்பளை வீதியை மக்களின் பாவனைக்குத் திறந்து விட நடவடிக்கை எடுக்குமாறு பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலரைக் கோரியுள்ள கிளாலி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மேற்படி வீதி மூடப்பட்டுள்ளதால் அப் பகுதி மக்கள் மேலதிகமாக நான்கு கிலோ மீற்றர் தூரத்தைச் சுற்றிப் பயணிக்க வேண்டியுள்ளதுடன் அதற்கான நேரமும் விரயமாகின்றது என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன் பச்சிலைப்பள்ளிப் பிர தேசத்தில் கிளாலிப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மினிமுகாம்கள் மூடப்பட்டதுடன் கிளாலியிலிருந்து அல்லிப்பளைஊடாக பளைக்குச் செல்லும் வீதியும் மக்களின் பாவனைக்குத் திறந்து விடப் பட்டிருந்து.

மக்கள் பயன்படுத்தி வந்த குறித்த வீதியை சில தினங்களுக்குப் பின் பாதுகாப்புப்படையினர் மீண்டும் மூடியதால் மக்கள் பெரும் சிரமங்களுக் குள்ளாகின்றனர். ஏ - 9 வீதியால் பளைக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். அல்லிப்பளை வீதி ஊடாக 4 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பளைக் குச் செல்ல வேண்டிய மக்கள் தற்போது ஏ - 9 வீதியால் ஏழு கிலோமீற்றர் தூரம் சென்று பளையை அடைய வேண்டியுள்ளது. (வ-115)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



எமது சகமாணவன் **துஷீந்திரா (துஷி)** அவர்களின் அன்புத்தந்தை

### அப்பாத்துரை இரத்தினசிங்கம்

காலமானதையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

B.Com முதலாம் வருடமாணவ, மாணவிகள்
காமராஜர் பல்கலைக்கழகம்,
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கணபதிப்பிள்ளை



மருதங்கேணி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கணபதிப்பிள்ளை அவர்கள் 17.04.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்துரை-தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற திரு.திருமதி வேலுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மா வின் அன்புக்கணவரும். பாலசுப்பிரமணியம் (மருதங்கேணி), காலஞ்சன்றவர் களான இந்திராணி, அம்பிகாவதி, பசுபதியம்மா, மற்றும் பாலசந்திரன் (நோர்வே), திருஞானசம்பந்தன் (நோர்வே), பாலசுந்தரம் (டென்மார்க்), மகேஸ்வரி (ஜெர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லாச்சி, பாக்கியம், இராசரத்தினம், கந்தசாமி, மற்றும் அரியராசா ஆகியோர் அன்புச் சகோதரரும்.

சிவலட்சுமி, குணபாலசிங்கம், இராசசூரி, காலஞ்சென்ற வன்னியசிங்கம், கிரிஸ்ரின்மலர், செல்வதி ஜெயந்தினி, தவராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும். துஷ்யந்தி,சிவாஜினி, துஷ்யந்தன், செல்வச் சந்திரன், நந்தினி, சுகந்தினி, பிரபாகரன், வினோதன், பிலிப் அன்ரனி, குமுதினி, சாள்ஸ், சாளினி, சாந்தீபன், அருனிதா, மேர்ஷியா, நிலானி, நிதர்சன், நிரோஜினி, தினேந்திரன், ஜெனோசன், சங்கவி, ரஜித்காந்த், பிரசாத், தினேஷ், ஆகியோரின் அன்புப் பேரனும். சந்தியா, கிரியா,டிலக்சனா, சஜீவன், சதுர்சன், சானுஜா, மரியோதொம்சன், அசாந்த், அஷ்ணா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேந்று வியாழக்கிழமை மருதங்கேணியில் நடைபெற்றது இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருதங்கேணி தெற்கு, — தகவல்: குடும்பத்தினர்

# ஆபத்தான ஆயுதங்களுடன் 4 இளைஞர்கள் கைது

*விசாரணைகளை மேற்கொள்கின்றனர் நெல்லியடிப் பொலிஸார்*



கைப்பற்றபட்ட ஆயுதங்களுடன் பொலிஸ் அதிகாரி

மாங்குளம், ஏப்.18

கூரிய கத்தி மற்றும் கராத்தே வீரர்கள் பயன் படுத்தும் நெஞ்சாக் ஆகியவற்றுடன் அதிகாலை 2 மணியளவில் வீதியில் நின்றிருந்த இளை ஞர்கள் நால்வர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை கிராமத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்குடன் ரோந்துப் பணி களில் ஈடுபட்ட பொலிஸாரே இவர்களைக் கைது செய்தனர். வதிரி வீதியில் அல்வாய்ப் பகுதியில் வீதியோரம் நின்றிருந்த இளைஞர்களை பொலிஸார் விசாரணை செய்ய முற் பட்டபோது அவர்களில் இருவரிடம் இருந்து கூரிய கத்தி மற்றும் நெஞ் சாக் ஆகியவை கைப்பற்றப்பட்டன. அதையடுத்து அவர்களின் அடை யாள அட்டைகளைச் சோதனை செய்தபோது அவர்கள் வெவ்வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெரியவந்தது.

அதையடுத்து அவர்கள் நால்வரையும் கைது செய்த பொலிஸார் அவர்களை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் சுப்ர மணியம் முன்னிலையில் முற்படுத்தினர். விசாரணகளை அடுத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரை ஆள் பிணையிலும், கூரிய கத்தி மற்றும் நெஞ்சாக் வைத்திருந்த இருவரையும் 8 நாள்கள் விளக்கமறியலில் கைக்குமாறும் நீதிவான் உத் தரவிட்டார். நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் பெரிய குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி மாவத்தை தலைமையிலான குழுவே இவர்களைக் கைது செய்தது. தற்போது இது குறித்து மேல திக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-422)

## கார் விற்பனைக்கு

KB - xxxx இலக்க Suzuki Swift Import s.l 2004 Silver Colour, 58000km ஓடியது

**T.P: 077 8210166**

## தவறிவிட்டது

சுதுமலை கிழக்கு அரசடி லேன், மானிப்பாயைச் சேர்ந்த சிவபாலன் புஸ்பராசன் ஆகிய எனது (862631307V) இலக்க NIC மற்றும் முக்கிய ஆவணங்களுடன் கொக்குவிலுக்கும், சுன்னாகத் துக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்.

**தொடர்பு 077 7991042**

## மதத்துக்கான ஆதரவு உலகில் அதிகமாம்

மதம், சமூகத்தில் ஒரு பயனுள்ள பங்காற்றுவ தாக உலகில் 65 நாடுகளில் உள்ள பெரும் பாலான மக்கள் கருதுவதாக அந்தப்பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று கூறுகிறது.

'வின்' மற்றும் 'கேலப்' ஆகிய இரு நிறுவனங்கள் சேர்ந்து நடத்திய ஆய்வில், சுமார் 66 ஆயிரம் பேரிடம் கருத்து கேட்கப்பட்டது.

இந்த ஆய்வில், நாடு என்ற அளவில் இந்தோ னேசியாவில்தான் மதத்துக்கு ஆதரவு அதிகம் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. பிரதேசம் என்ற அளவில் பார்த்தால், ஆபிரிக்காதான் மதத் துக்கு ஆதரவு அதிகம் தரும் பிரதேசமாகக் கண்ட றியப்பட்டிருக்கிறது.

வளர்ந்த நாடுகளில் அமெரிக்காவில்தான் மதத்துக்கு ஆதரவு அதிகம் இருக்கிறது.

சில மேற்கு ஐரோப்பிய நாடுகள் இந்தப் பட்டியிலில் மிகவும் கீழே இருந்தன. அதா வது இந்த நாடுகளில் மதத்துக்கு ஆதரவு மிகவும் குறைவு.

இந்த ஆய்வில் கலந்து கொண்டவர்கள் மத்தி யில், கல்வியறிவு அதி கமாக இருந்தால், அவர்கள் மதத்தைப் பற்றி அவ்வளவு சாத கமாக இல்லை என் றும் கண்டறி யப்பட்டி ருக்கிறது.

அதே சமயத்தில், கடவுள் மறுப்பாளர் களில் கூட, பத்தில் நான்கு பேர், மதம் தங்கள் நாடுகளில் ஒரு ஆக்கபூர் வமான பங்கையே ஆற்றுவ தாகக் கூறினர் என்று அந்த ஆய்வு தெரி விக்கின்றது. (வ)

## கண்ணீர் அஞ்சலி

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

### செல்வி வாமனா ஜெயகாந்தன்

(யாழ். இந்து மகளிர் கல்லூரி)



(17.04.2014) அன்று சிவபதமடைந்த எமது சகோதரி **செல்வி வாமனா ஜெயகாந்தன்** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

52/5 நாவலர் றோட், யாழ்ப்பாணம். — ஜெ.முரளிதரன் குடும்பம், கு.கண்ணன் குடும்பம்

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் தேவிகா

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட செல்வி . நவரத்தினம் தேவிகா நேற்று (17.04.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2014) வெள்ளிக் கிழமை அவரின் இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி மேற்கு, வட்டுக்கோட்டை* — தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அகிலாம்பிகை கணேஷன் (ரங்கூன் அக்கா)



பர்மா ரங்கூனைப் பிறப்பிட மாகவும், யாழ். அளவெட்டி பள்ளியவத்தையை வசிப்பிட மாகவும் கனடா Scarborough ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அகிலாம்பிகை கணேஷன் (15.04.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்ற வர்களான சரவணமுத்து - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட் புதல்வியும் காலஞ் சென்றவர்களான சிந்தாமணி - ராஜாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற கணேஷனின் அன்பு மனைவியும் திரிபுரசுந்தரி (சந்திரா - கனடா) அவர்களின் பாசமிகு தாயும் சாவித்திரி (கொழும்பு) காலஞ்சென்றவர்களான கணேஷமூர்த்தி, புஸ்பவதி (பாப்பா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ரவீந்திரனின் அன்பு மாமியும் நாகலிங்கம் (கொழும்பு), ஈஸ்வரி (ஆஸ்திரேலியா), பஞ்சலிங்கம் (கொழும்பு), சொக்கநாதன் (பிரான்ஸ்), சந்தானலட்சுமி (இந்தியா) காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சுந்தரராஜன் ஆகியோரின் அன்புமைத்துனியும் வரதனின் அன்புப்பெரியதாயும் ஸ்ரீவிக்கினேஸ்வரன், கலைமகள், திருமகள் ஆகியோரின் அன்புமாமியும் அபிராமி, அசோக், அர்ஜூனா, கிருஷ்ணா, சரண்யா, மயூரன், சிந்தூரி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நிகழ்வு (20.04.2014) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி முதல் Link http://ustre.am/12ke7 நேரடி ஒளிபரப்பு செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் குடும்பத்தினர்
திரிபுரசுந்தரி (சந்திரா - மகள் - கனடா)
+14164496345
ரவீந்திரன் (மருமகன் - கனடா)
+14165809046

## காசநோயால் 10 லட்சம் குழந்தைகள் பாதிப்பு

ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் சுமார் 10 லட்சம் குழந்தை கள் காசநோயால் பாதிக்கப்படுவதாக ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கின்றது. முன் னதாக அறியப்பட்ட எண்ணிக்கையை விட இது இரு மடங் காகும். உலக காச நோய் தினத்தை முன் னிட்டு, 'தி லான்செட்' என்ற இதழில் வெளி யிடப்பட்டுள்ள ஆய் விலேயே இந்த தக வல் தெரிவிக்கப்பட் டுள்ளது.

## மரண அறிவித்தல்

### றோமன் பிலிப்பையா



(ஓய்வு பெற்ற ஆசிரியரும், சமாதான நீதவானும்)

பலாலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாவும் கொண்டிருந்த றோமன் பிலிப்பையா 16.04.2014 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றோமன் எலிசெபெத் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான அல்பிரேட் - ஞானப்பு தம்பதியரின் அன்புமருமகனும் ராஜேந்திரம் காலஞ்சென்றவர்களான வேதநாயகம், ஹென்றி, ராசநாயகம் மற்றும் றூபி, லிற்னா, ஜேம்ஸ் காலஞ்சென்ற சாள்ஸ் ஆகியோரின் அன்புச்சகோதரும் ஞானமலரின் அன்புக்கணவரும் சேக்ஸ்பியர் (கனடா), பாபு (கனடா), சேகரன் (ஜேர்மனி), ஸ்ரான்லி (தமிழ்ப்பிரிவு உதவி அதிபர் புனித அந்தோனியார் கல்லூரி வத்தளை), சாந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் மஞ்சு, சித்திரா, பத்மா சந்திரன் ஆகியோரின் அன்புமாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home 8911 Woodbine Avenue Markham Ontario Canada வில் வைக்கப்பட்டு 19.04.2014 அன்று நண்பகல் 12 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : ஸ்ரான்லி (மகன்),
சேக்ஸ்பியர் (0014167501792) பாபு (0014584585261),
சேகரன் (004920560126655),
ஸ்ரான்லி (0777979276) சாந்தினி (0014162648942)

12/1 சேச் றோட் நாயக்கந்த,
ஹெந்தளை, வத்தளை

## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையற்கரசி ஞானசேகரம்



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி ஞானசேகரம் நேற்று (17.04.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் இளையதம்பி - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற ஞானசேகரத்தின் (தொலை பேசி இயக்குநர் பலாலி) அன்புமனைவியும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் வசந்தி (ஓய்வு பெற்ற ஆசிரியை சுதுமலை சிந்மய பாரதி) சத்தியபாமா, கௌரியம்மா, நகுலேஸ் வரி, திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர் யாழ்.மானிப்பாய் இந்துக்கல்லூரி) ஆகி யோரின் அன்புத்தாயும் காலஞ் சென்றவர்களான இராமநாதன், தவராஜா, மற்றும் தாட்சாயினி ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்ற தேன்மொழி மற்றும் வதனமொழி (இத்தாலி), அனுசன் (இத்தாலி), வசந்தன் (ஆசிரியர் யாழ்.மத்திய கல்லூரி), கனிமொழி, தாரணி, கபிலன் (யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை) ,தேனுகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் .இன்று (18.04.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இநது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
ஞான திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர் யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி)
த. வசந்தன் (ஆசிரியர யாழ். மத்திய கல்லூரி) 021 3210530

# மாநகர சுத்திகரிப்புப் பணிகள் பாதிப்பு

## சபையின் தற்காலிக தொழிலாளரின் பணிப்புறக்கணிப்பால்

யாழ்ப்பாணம், ஏப்.18
யாழ்.மாநகர சபையின் தற்காலிக தொழிலாளர்கள் நிரந்தர நியமனம் கோரி மேற்கொள்ளும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் மாநகர சுத்திகரிப்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நகரில் மக்கள் நெரிசல் அதிகரித்த பகுதிகளின் சுத்திகரிப்புப் பணிகள் யாவும் பாதிக்கப்பட்டமையால் கழிவுப் பொருள்கள் தேங்கி காணப்படுகின்றன. அநேகமான இடங்களில் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அகற்றப்படாததால் பறவைகள் அவற்றை இழுத்துச் செல்கின்றன.


அத்துடன் அவற்றிலிருந்து துர்நாற்றமும் வீசுகின்றது.

சேகரிக்கப்புட்ட , அதாவது பல்வேறு இடங்களிலும் கொட்டப்பட்ட கழிவுகள் நிரம்பி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது.

இது இவ்வாறிருக்க நகரில் வாகனங்களில் சிக்கி இரண்டு நாய்கள் நேற்று முன்தினம் கொல்லப்பட்டன. கொல்லப்பட்ட அந்த நாய்கள் வீதியோரத்தில் போடப்பட்ட தால் அவற்றில் இருந்து துர்நாற்றம் வீசுவதால் மக்கள் மூக்கைப் பொத்தியவாறு செல்கின்றனர்.

யாழ்.புல்லுக்குளம் வீதி மற்றும் ராஜா தியேட்டர் சந்தியிலும் அந்த நாய்கள் இறந்த நிலையில் நேற்று வரை கிடந்தன.

வீதியோரத்தில் கிடந்த இறந்த நாய்களை அந்தப் பகுதி மக்கள் மற்றும் வர்த்தகர்கள் கூட மனிதாபிமானத்துடன் அகற்ற முன்வராதமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர். (வ-17)


புல்லுக்குளம் வீதியில் இறந்த நாயின் சடலம்

## திருநெல்வேலி சந்தையில் கழிவுகள் அகற்றல்


கோப்புப்படம்

யாழ்ப்பாணம், ஏப்.18
திருநெல்வேலி மரக்கறி சந்தைச் சுற்றாடலில் தேங்கும் கழிவு பொருள்களை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நல் லூர் பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

பிரதேச சபையின் பொது சுகாதார பரிசோதகர்களின் தொடர்ச்சியான வெளிக்கள பணிப் புறக்கணிப்பு போராட்டத்தால் சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கான சுத்திகரிப்புப் பணிகள் பாதிக்கப்பட்டு முடங்கியிருந்தன.

தற்போது திருநெல்வேலி சந்தைக்கு வருகை தரும் மக்களின் சுகாதார வசதி கருதி விசேட ஏற்பாடு மூலமாக சபைத் தொழிலாளர்களின் உதவியுடன் அங்கு தேங்கிக் காணப்படும் கழிவு பொருள்கள் தற்போது அகற்றப்பட்டு வருவதாக சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை பிரதேச சபைக்கு உட்பட்ட ஏனைய பிரதேசங்களில் கழிவுப் பொருள்கள் அகற்றப்படாது தேங்கிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-17)

# பஸ்ஸிலிருந்து தவறி வீழ்ந்த மாணவனை மீண்டும் பஸ்ஸில் ஏற்றிச் சென்ற சம்பவம்

## பயணிகளிடையே பலத்த விமர்சனம்

வலி. வடக்கு, ஏப்.18
ஓடும் பஸ்ஸில் இருந்து தவறி வீழ்ந்த மாணவனை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லாது மீண்டும் பஸ்ஸில் ஏற்றி சென்று உரும்பிராயில் மாணவனை இறக்கிய சம்பவம் பஸ் பயணிகளிடத்தே பலத்த விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

புதன்கிழமை மாலை 6 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட மினிபஸ் அதிக எண்ணிக்கையான பயணிகளுடன் புன்னாலைக் கட்டுவன் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ஆரிய குளம் சந்தியிலும் பயணிகளை ஏற்றிய நிலையில் பயணிகள் நிற்க முடியாது பெண்களும் கூட மிதிபலகையில் (புட்போட்டில்)தொங்கிக் கொண்டு நின்றனர். இந்த நிலையில் குறிப்பிட்ட மாணவனும் பஸ்ஸின் மிதி பலகையில் தொங்கியபடி அந்தரத்தில் பயணித்த நிலையில் பருத்தித்துறை நல்லூர் வீதிக்குத் திரும்பும் முடக்கில் மினி பஸ் திரும்ப முற்பட்ட வேளை அதில் பயணித்த குறிப்பிட்ட அந்த மாணவன் தவறி வீழ்ந்துள்ளான்.

உடனடியாக பஸ்ஸை நிறுத்திய சாரதி மீண்டும் தவறி வீழ்ந்த மாணவனையும் ஏற்றிக் கொண்டு தனது பயணத்தை தொடர்ந்தார்.

மாணவன் வீழ்ந்ததில் எங்கு காயம் ஏற்பட்டது என்று கூட விசாரித்துப் பார்க்காது மினி பஸ் சாரதியும் நடத்துநரும் பெரிதாக ஒன்றும் இல்லையென்று கூறி குறிப்பிட்ட மாணவனை அதே 'மினி பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு சென்ற சம்பவம் பஸ் பயணிகளிடத்தே பலத்த விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. (வ-86)

# வாய்த் தர்க்கம் முற்றி வாள்வெட்டாக மாறியது


வாள்வெட்டுக் காயமுற்ற இளைஞன்

இரு நபர்கள் மத்தியில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வளர்ந்து கடைசியில் வாள் வெட்டில் முடிந்த சம்பவம் ஒன்று புதுவருடப் பிறப்பன்று கரணவாய் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தொல்புரம் கரணவாய் தெற்கு கரணவாயைச் சேர்ந்த 21 வயதான இந்திரன் நிமல்சன் என்பவரே வாள் வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-
சம்பவம் நடந்த இரவு கரவெட்டி கிருஷ்ணா விளையாட்டு கழகத்தில் விளையாடிவிட்டு ஓய்வெடுக்கும் போது பாடல் கேட்பதில் இருவருக்கிடையில் ஏற்பட்ட போட்டி, வாய்த் தர்க்கத்தில் ஆரம்பித்து வாள் வெட்டில் முடிவடைந்துள்ளது. இது குறித்து நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(வ-21)

# கசிப்புத் தொழிலை கைவிட முன்வந்த 6 குடும்பங்கள்


கலந்துரையாடலில் கலந்து கொண்டோர் சிலர்

தென்மராட்சி, ஏப்.18
மீசாலையில் காலாதிகாலமாக கசிப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு வந்த ஆறு குடும்பங்கள் தமது தொழிலைக் கைவிட்டுள்ளனர்.

சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் பாலமயூரனின் முயற்சியால் வாழ்வாதார தேவைக்காக தாம் மேற்கொண்டு வந்த கசிப்பு உற்பத்தித் தொழிலை கைவிடுவதாக மீசாலை மேற்கு கொட்டாம் பிட்டியைச் சேர்ந்த ஆறு குடும்பங்கள் வாக்குறுதி அளித்ததுடன் தமது பிரிவு கிராம அலுவலரிடம் எழுத்து மூல மாகவும் உறுதிப்படுத்திக் கையொப்பமிட்டு வழங்கியுள்ளனர்.

குறித்த பகுதியில் வசிப்போரில் சிலர் நீண்டகாலமாக பொலிஸார் மற்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் சுற்றி வளைக்கப்பட்டு பல தடவைகள் உற்பத்தி செய்யப்பட்ட கசிப்புக்கள் கைப்பற்றப்பட்டிருப்பதுடன் நீதிமன்றில் பல மில்லியன் ரூபாவை அபராதமாகவும் செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில் நகர சபை உறுப்பினர் அ.பாலமயூரன், அந்தப் பிரிவு பிரிவு (ஜே/319) கிராம அலுவலர் கே.கார்த்திகேயனுடன் பிரிவு மக்களுடன் கலந்துரையாடி கசிப்பு உற்பத்தியால் அந்தக் குடும்பத்தினரின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதுடன் கசிப்பு பருகுவோருக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியதன் பயனாக அங்குள்ள 6 குடும்பங்கள் தாமாகவே முன்வந்து நேற்று முன்தினம் முதல் இந்தத் தொழிலைக் கைவிடுவதாக வாக்குறுதியளித்தனர்.

அந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு நகர சபையால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் குறித்த ஆறு குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர் வீதம் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என வாக்குறுதியளிக்கப்பட்டது. (வ-9)

# சங்கிலியன் மன்றத்தால் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஏப்.18
நல்லூர் சங்கிலியன் மன்றம் தனது 69 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாதந்தோறும் தான் நடத்தும் மக்கள் நலத் திட்டத்தின் ஒரு பகுதியாக இலவசமருத்துவமுகாம்ஒன்றை இந்த மாதம் நடத்தவுள்ளது.

சங்கிலியன் மன்றத்தில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் பி.ப 3 மணி வரை நடைபெறவுள்ள இந்த இலவச மருத்துவ முகாமில் நீரிழிவு, குருதி, சிறுநீர் பரிசோதனைகளுடன் பதிவு செய்தவர்களுக்கு இதய அதிர்வு . கொலஸ்ரோல் பரிசோதனைகளும் ஏனைய பொது மருத்துவப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். மருத்துவப் பரிசோதனைகளின் பின்னர் அதற்கான மருந்துகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

துறை சார்ந்த மருத்துவ நிபுணர்கள், பொது வைத்திய நிபுணர்கள் இந்த நிகழ்வில் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ-7)

# சீதனம் கேட்டு கர்ப்பிணிப் பெண்ணைத் தாக்கியவருக்கு மறியல்


தென்மராட்சி, ஏப்.18
சீதனம் கேட்டு நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணைத் தாக்கிய தாயையும் மகனையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.

பாலாவி வடக்கைச் சேர்ந்த இளைஞனுக்குக் குடத்தனையைச் சேர்ந்த பெண்ணுக்கும் பத்து மாதங்களுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றது. பெண்ணுக்கு பெற்றோர் இல்லாததால் கணவன் வீட்டில் வசித்து வந்ததாகவும், நிறைமாதக் கர்ப்பிணியான பெண்ணிடம் சீதனம் கேட்டு கடந்த செவ்வாய்க்கிழமை அவரது கணவரும் மாமியாரும் தாக்கியுள்ளனர்.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பெண்ணின் கணவரையும் மாமியாரையும் கைது செய்த பொலிஸார் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இருவரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளையில் தாக்கப்பட்ட பெண் தனது கணவரையும் மாமியையும் பிணையில் விடுமாறு கோரி நீதிமன்றில் அழுத வண்ணம் நின்றதைக் காணமுடிந்தது. (வ-9)



மத்திய அசாமில் திமாபூர் காமாக்யா எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்ட விபத்தில் 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் 19 பேர் படுகாயமடைந்தனர். அசாம் மாநிலத்தின் மோரிகா வோன் மாவட்டம், ஜகிரோடு என்ற இடத்துக்கு அருகே கடந்த புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில் இவ்விபத்து நேரிட்டது. ரயில் இன்ஜின் மற்றும் 10 பெட்டிகள் தடம் புரண்டன. சுமார் 100 மீற்றர் அளவுக்கு ரயில் பாதை சேதமடைந்தது. விபத்தைத் தொடர்ந்து அவ்வழியே செல்லும் 8 ரயில்கள் ரத்து செய்யப்பட்டன

## இந்திய கடற்படைக்கு புதிய தளபதி

புதுடில்லி, ஏப்.18

இந்தியக் கடற்படையின் புதிய தளபதியாக அட்மிரல் ராபின் தோவன் நேற்றுப் பொறுப் பேற்றுக் கொண்டார்.

59 வயதாகும் ராபின் தோவன், இந்தியாவின் 22ஆவது கடற்படைத் தளபதி ஆவார்.

அவர் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு மே மாதம் வரை கடற்படைத் தளபதியாக பதவி வகிப்பார். கடற்படை யில் தொடர்ந்து விபத்துகள் நிகழ்ந்ததன் எதிரொலியாக, கடற்படைத் தளபதியாக இருந்த டி.கே. ஜோஷி கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி பதவி விலகினார்.

அதனையடுத்து, துணைத் தலைமைத் தளபதியாக இருந்த ராபின் தோவன், பொறுப்பு தலைமைத் தளபதியாக பதவி ஏற்றார். இந்நிலையில், புதிய கடற்படைத் தளபதியாக அட்மிரல் ராபின் தோவன் நேற்று முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். (ந)

# மக்களை முட்டாளாக்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்

## மோடிக்கு எதிராக ராகுல் காட்டம்

புதுடில்லி, ஏப்.18

மக்களை முட்டாளாக்குவதை முதலில் நிறுத்திக் கொள்ளுங்கள் என்று பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிக்கு எதிராக காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி காட்டமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பிஹார் மாநிலம், கிசான்கன்ஞ் நகரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ராகுல் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:



ராகுல்காந்தி

குஜராத் வளர்ச்சி மொடல் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பொருந்தாது. மக்களை முட்டாளாக்குவதை நிறுத்துங்கள். குஜராத் வளர்ச்சி மொடலை மிட்டாய் மொடல் அல்லது பலூன் மொடல் என்றும் அழைக்கலாம். டாடா, அதானி போன்ற பணக்காரர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பொதுப் பணத்தை சூறையாடுவதே இந்த மொடல். மோடி அடுத்த பிரதமராக வருவதற்காக பா.ஜ.க. இந்த கருத்தை விற்பனை செய்து வருகிறது.

ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமான 45 ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஒரு சதுர மீற்றர் ரூ.1 விலைக்கு தொழிலதிபர் அதானிக்கு நரேந்திர மோடி கொடுத்துள்ளார். டாடா மோட்டர்ஸ் நிறுவனம், நானோ கார் தொழிற்சாலை தொடங்குவதற்கு மோடி ரூ.10 ஆயிரம் கோடி கடன் அளித்துள்ளார். வங்கியில் 12 சதவீத வட்டிக்கு சாதாரண மனிதர்கள் கடன் பெற்றுவரும் நிலையில் இந்தத் தொகையை அவர் ஒரு சதவீத வட்டிக்குக் கொடுத்துள்ளார்.

ஒவ்வொரு நானோ காருக்கும் குஜராத் அரசு ரூ.40 ஆயிரம் உதவி அளிக்கிறது. கல்வி, சுகாதாரம் மற்றும் பிற நலத் திட்டங்களுக்கு குஜராத் அரசின் செலவு இந்த ரூ.10 ஆயிரம் கோடியை விட குறைவு. குஜராத்தில் 40 லட்சம் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளனர். அவர்களின் ஒரு நாள் வருமானம் 11 ரூபாயை விடக் குறைவு. குஜராத் வளர்ச்சியில் தன்னைத் தவிர வேறு எவரதும் பங்களிப்பும் இல்லை என்று மோடி கூறுகிறார். நாட்டின் எல்லாப் பகுதிகளின் வளர்ச்சிக்கும் மோடி இனி இதையே கூறுவார்"- என்று தெரிவித்துள்ளார். (ந)

## போடும் கணக்குகள் பிழைக்கும்

சென்னை, ஏப்.18

தேர்தலில் இந்தக் கட்சிக்கு இவ்வளவு இடம் கிடைக்கும் என்று பலர் கணக்கு போட்டு வருகின்றனர். ஆனால், இந்தக் கணக்குகள் அனைத்துமே தவறாக போய்விடும் என்று தெரிவித்துள்ளார் நரேந்திர மோடி.

ராமநாதபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். எதிர்வரும் தேர்தலில் தமிழகம் புதிய சரித்திரத்தை படைக்கும்- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

## வாக்குச் சாவடியில் இளைஞர் தீக்குளிப்பு

பரெய்லி, ஏப்.18

உத்தரபிரதேசத்தில் நேற்று வாக்குச்சாவடியொன்றில் வைத்து இளைஞர் ஒருவர் திடீரென தீக்குளித்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஐந்தாம் கட்ட வாக்குப் பதிவு உத்தரபிரதேசம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் உள்ள 121 தொகுதிகளில் நேற்று நடைபெற்றது.

இதில் உத்தரபிரதேசத்தின் ஆவோன்லா நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட தேவ்சராராம் பரோஸ்லால் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடிக்கு ஹரிசிங் (25) என்ற இளைஞர் வாக்களிக்க வந்தார். குடிபோதையில் இருந்த அவர், திடீரெனத் தனது உடலில் மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைத்துக் கொண்டதை அடுத்து உயிரிழந்தார். (ந)

# குஜராத் மாநிலத்தின் வளர்ச்சி உருவாக்கப்பட்ட மாயையே

## ஜெயலலிதா கூறுகின்றார்

குஜராத் மாநிலம்தான் வளர்ச்சியில் முதல் மாநிலம் என்ற மாயை உருவாக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா. கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதியில் தமிழக முதலமைச்சரும் அ.தி.மு.க. வின் பொதுச்செயலாளருமான ஜெயலலிதா பரப்புரை மேற்கொண்டார். அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது.

"குஜராத் மாநிலம்தான் வளர்ச்சியில் முதல் மாநிலம் என்ற மாயை உருவாக்கப்பட்டுள்ளது. குஜராத்தைவிட அனைத்துத் துறைகளிலும் அதிக வளர்ச்சி கண்டுள்ளது தமிழகம். வாஜ்பாய் ஆட்சியில் நதிகளை இணைக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. தமிழகத்தில் தாமிரபரணி உள்ளிட்ட நதிகளை இணைக்க அரசு 100.97 கோடி ரூபாய் ஒதுக்கியது. அவிநாசி-அத்திக்கடவு திட்டத்தை காங்கிரஸ் அரசு நிராகரித்துவிட்டது.

நதிகள் இணைப்புக்கு தேவையான 6,500 கோடி ரூபாவை வழங்க தயார் என பா.ஜ.க. கூறுமா? மகாநதி கோதாவரி-காவிரியை இணைக்க பா.ஜ.க. உத்தரவாதம் அளிக்குமா? காவிரியில் தமிழகத்திற்கான நீரை பெற்றுத்தர பா.ஜ.க. உறுதிமொழி தருமா?"- என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ந)

# குஜராத் கலவரம் குறித்து மௌனம் காக்கவில்லை

## நரேந்திர மோடி தெரிவிப்பு

புதுடில்லி, ஏப்.18

2002 குஜராத் கலவரம் தொடர்பாக நான் அமைதிகாக்கவில்லை. ஆனால் உண்மையை புரிந்து கொள்வதற்கு யாரும் முயற்சி செய்யவில்லை என்று கூறியுள்ளார் குஜராத் முதல்வரும் பாஜக பிரதமர் வேட்பாளருமான நரேந்திர மோடி. "குஜராத் கலவரம் தொடர்பாக நான் அமைதி காக்கவில்லை. கலவரத்தின்போது நான் என்ன செய்தேன் என்பதைக் கூறியுள்ளேன். 2002 முதல் 2007 வரை நாட்டின் மூத்த பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் நான் பதில் அளித்துள்ளேன். ஆனால் உண்மையைப் புரிந்துகொள்வதற்கு யாரும் முயற்சி செய்யவில்லை. இந்தச் சதிச் செயல்களுக்கு அடையாளம் தெரியாத ஒரு சக்தியே காரணம்" - என்று அவர் தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் 12 ஆண்டுகளுக்கு முன் நடந்த வகுப்புக் கலவரத்துக்கு மோடி வருத்தம் தெரிவித்துள்ளார்: ஆனால் அவர் ஒரு போதும் மன்னிப்பு கேட்டதில்லை. (ந)



தென் கொரியாவின் தென்மேற்கு கடல் பகுதியில் கடந்த புதன்கிழமை காலை கப்பலொன்று கவிழ்ந்ததால் கடலுக்குள் மூழ்கிய பயணிகளை மீட்புக் குழுவினர் தேடி வருகின்ற நிலையில் நூற்றுக்கும் மேற்பட்டோரின் நிலைமை குறித்து இதுவரை எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. சியோல் அருகே உள்ள இன்சியோன் துறைமுகத்திலிருந்து சீவொல் கப்பல் செவ்வாய்க்கிழமை புறப்பட்டது. 480 அடி நீளமும், 6,586 தொன் எடையும் கொண்ட இந்தப் கப்பல் 1994ஆம் ஆண்டு ஜப்பானில் கட்டப்பட்டது. இதில் அதிகபட்சமாக 900 பேர் பயணிக்கலாம். சம்பவ தினத்தன்று இந்தப் கப்பலில் 477 பயணிகள் இருந்தனர். தவிர 150 வாகனங்களும் ஏற்றப்பட்டிருந்தன. தென்மேற்குக் கடற்கரையில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் ஜெஜு தீவை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, திடீரென்று கப்பல் ஒரு பக்கமாகச் சாய்ந்தது. அடுத்த சில நிமிடங்களில் தலைகீழாகக் கவிழ்ந்தது. (ற)

## எபோலாவை கட்டுப்படுத்தியது கினியா

லண்டன், ஏப்.18

ஆபிரிக்க நாடான கினியாவில் எபோலா வைரஸின் பரவல் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று அந்நாட்டின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.


இதுவரை 106 பேர் எபோலா வைரஸ் காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர் என்றும், 159 பேருக்கு வைரஸின் தாக்கம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனினும் கடந்த சில தினங்களாக காய்ச்சலினால் எந்த நபரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை எனவும் அந்நாட்டு அரசு மேலும் தெரிவித்துள்ளது. பல இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு மக்களுக்கு சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை கினியா அரசு ஏற்படுத்தி வருகிறது. (ற)

# உக்ரைனில் மூளும் உள்நாட்டுப் போர்

## எச்சரிக்கின்றது ரஷ்யா

மொஸ்கோ, ஏப்.18

ரஷ்ய ஆதரவாளர்களுக்கு எதிராக இராணுவத்தை அனுப்பியுள்ள உக்ரைனின் செயல் அந்த நாட்டை உள்நாட்டுப் போரின் விளிம்புக்குத் தள்ளியிருக்கின்றது என்று எச்சரித்துள்ளார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்.



உக்ரைன் விவகாரம் தொடர்பாக அண்மையில் ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மொர்க்கெல்லுடன் அவர் தொலைபேசியில் உரையாடினார். அது குறித்து ரஷ்ய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

"உக்ரைனின் அதிரடி நடவடிக்கையால் அந்நாடு உள்நாட்டுப் போரின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளதாக ஜேர்மன் ஜனாதிபதி மொர்க்கெல்லிடம் ஜனாதிபதி புடின் தெரிவித்தார். ரஷ்யா, உக்ரைன், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகியவற்றின் தூதரக உயரதிகாரிகள் மேற்கொள்ளும் நான்கு தரப்புப் பேச்சின் முக்கியத்துவத்தை, தங்களது உரையாடலின் போது இரு தலைவர்களும் வலியுறுத்தினர்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்ய ஆதரவாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வரும் இஸியும் நகரை நோக்கி, உக்ரைனின் இராணுவம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த நடவடிக்கைக்கு ரஷ்யா கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. (ற)

# 2, 300 சார்ஸ் கிருமிகள் கொண்ட குப்பிகள் மாயம்

## பிரான்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் தகவல்

பாரிஸ், ஏப்.18

பிரான்ஸில் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் சேமித்து வைத்திருந்த 2 ஆயிரத்து 300 சார்ஸ் வைரஸ் கிருமிகள் கொண்ட குப்பிகள் காணாமல் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் மதிப்புமிக்க பிரான்ஸ் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் இது குறித்து கூறுகையில்,

"பாஸ்டர் ஆராய்ச்சி நிறுவனத்தின் கோப்புக்காக சேமிக்கப்பட்டு வைத்திருந்த 2 ஆயிரத்து 300 சார்ஸ் வைரஸ் கிருமிகளைக் கொண்ட 29 குப்பிகள் எங்கள் நிறுவன கிடங்கிலிருந்து காணாமல் போய்விட்டன.

இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு மருந்து மற்றும் சுகாதார பாதுகாப்புத்துறை ஆணையம் கடந்த நான்கு நாள்களாக குப்பிகளை தேடும் பணியை மேற்கொண்டது. எனினும் குப்பிகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை"-என்று கூறியுள்ளது.

காணாமல் போன குப்பிகளில் இருந்த சார்ஸ் வைரஸ் கிருமிகள் காலாவதி ஆனவை என்றும் அந்தக் கிருமிகளால் பாதிப்பு ஏதும் ஏற்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிருமிகளை ஆய்வாளர்கள் தவறுதலாக ஆதாரங்களை சமர்பிக்காமலே அழித்திருக்ககூடும்என்றகண்ணோட்டத்தில் விசாரணை .மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


பிரான்ஸ் நாட்டின் பாஸ்டர் ஆராய்ச்சி நிறுவனம், 1980களில் எச்.ஐ.வி கிருமிகளை தனிமைப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டமையும் இதில் குறிப்பிடதக்கது. (ற)

## சிலியில் ஏற்பட்ட காட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் வந்தது

வால்பரைசோ, ஏப்.18

சிலியின் வால்பரைசோ நகரில் கடந்த சில நாள்களாக ஏற்பட்ட காட்டுத்தீ அணைக்கப்பட்டது. காட்டுத் தீயில் சிக்கி 13 பேர் உயிரிழந்துள்ளனர், 2 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன.

திடீரென ஏற்பட்ட வெப்பநிலை மாற்றமே தீ அணையக் காரணமாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் அரசு முகாம்களில் தங்கி இருந்த மக்கள் அனைவரும் வீடுகளுக்குத் திரும்பி வருகின்றனர். எனினும் இதுவரை தீ ஏற்பட்டதற்கான காரணங்கள் கண்டறியப்படவில்லை என சிலி உள்துறை அமைச்சர் ரோட்ரிகோ தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை லா குரூஸ் பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீ வேகமாக, வால்பரைசோ நகருக்கு பரவியது. அங்குள்ள வீடுகள் அனைத்தும் மரத்தால் ஆனவை என்பதால் தீ அனைத்து வீடுகளுக்கும் பரவியதாகக் கூறப்படுகிறது. (ற)



## விமானத்தை தேடும் பணியை முடித்தது நீர் மூழ்கி ரோபோ

கோலாலம்பூர், ஏப்.18

இந்தியப் பெருங்கடல் பகுதியில் மலேசிய விமானத்தின் பாகங்களைத் தேடும் பணியின் முதல் கட்டத்தை ப்ளூபின் - 21 என்ற நீர் மூழ்கி ரோபோ முடித்துள்ளது. அதில் கிடைத்துள்ள தகவல்கள் பதிவிறக்கம் செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. 90 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்கு இந்த ரோபோ சென்று அங்கு கிடைத்த காட்சிகளைப் பதிவு செய்துள்ளது.

எனினும், 4 ஆயிரம் மீற்றர்கள்வரை மட்டுமே இந்த நீர்மூழ்கி ரோபோ செல்ல முடியும் என்பதால் அதிகமான ஆழத்தில் சென்று தேட மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் என தேடுதல் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய தேடுதல் பரப்பு முழுவதும் சென்று இந்த ரோபோ தேடுதலை நடத்த இரண்டு மாதங்கள் வரை ஆகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று தேடுதல் பணிக்காக 12 விமானங்களும், 11 கப்பல்களும் புறப்பட்டுச் சென்றுள்ளன. பெர்த்தில் இருந்து வடமேற்கு பகுதியில் 40 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பில் நேற்று தேடுதல்பணி ஆரம்பிக்கப்பட்டது. (ற)

# கேளிக்கை நிகழ்ச்சியில் மாணவர்கள் ஐவர் சாவு

## கனடாவில் சம்பவம்

றொற்றண்றோ, ஏப்.18

கனடாவில், கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற கேளிக்கை நிகழ்ச்சியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர்.

கால்கரி பகுதியில் வீடு ஒன்றில் கல்லூரி மாணவர்கள் கேளிக்கை நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். சுமார் 20 பேர் அதில் பங்கேற்றிருந்தபோது சக மாணவர் ஒருவர் திடீரென கத்தியால் குத்தி 5 பேரைக் கொலை செய்தார்.

**சுமார் 20 பேர் அதில் பங் கேற்றிருந்த போது சக மாணவர் ஒருவர் திடீரென கத்தியால் குத்தி 5 பேரைக் கொலை செய்தார்.**

இந்த நிலையில் குற்றவாளியை கைது செய்த பொலிஸார், 20 வயதான அந்த இளைஞர் பொலிஸ் அதிகாரி ஒருவரின் மகன் என அறிவித்துள்ளனர். தற்போது குற்றவாளியின் மனநிலை ம்ற்றும் அவர் மது அருந்தி இருந்தாரா என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01ஆம் திகதிமுதல் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08ஆம் திகதி NP/05/01/GE6/UNS/RQ இலக்க கடிதத்திற்கு அமைவாகவும், கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

| பதவிகள் | வெற்றிடம் |
|---|---|
| 1. காரியாலயகாரியசகாயர் | 01 |
| 2. காவலாளி | 01 |
| 3. நூலகபரிசாரகர் | 01 |
| 4. வேலைவெளிக்களத் தொழிலாளி | 12 |
| 5. வேலைவெளிக்கள மேற்பார்வையாளர் | 01 |
| 6. சந்தைமேற்பார்வையாளர் | 01 |
| 7. சுகாதாரத் தொழிலாளி | 02 |
| 8. நீர் இறைக்கும் இயந்திர இயக்குனர் | 01 |
| 9. நகரமண்டப பாதுகாவலர் | 01 |

கல்வித்தகைமை
கல்விப் பொதுத்தராதரசாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கும் மேற்படாத அமர்வுகளில் தமிழ்/ சிங்களம் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் மேலதிக தகைமைகள், அனுபவம் என்பன விஷேட தகைமைகளாக கருத்தில் கொள்ளப்படும்.

சம்பளம்
2007.08.24ஆம் திகதியஅரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 (IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (11730-120x10-130x10-145x10-160x12-17600) PL-1-2006-A ஆகும்.

| பதவிகள் | வெற்றிடம் |
|---|---|
| 10.இயந்திர இயக்குநர் பதவி | 01 |
| 11.மின்னிணைப்பாளர் பதவி | 01 |

கல்வித்தகைமை
கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கும் மேற்படாத அமர்வுகளில் தமிழ்/ சிங்களம் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொழில்சார் தகைமை
இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதித் திகதியன்று ஆறு மாதங்களுக்குக் குறையாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். தேவையேற்படின் தொழில் தகைமை பரிசீலிக்கப்படும்.

சம்பளம்
2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 (IV) இற்கமைய மாதாந்த சம்பளஅளவுத்திட்டம் (12210-130x10-145x10-160x10-170x12-18600) PL-2-2006-A ஆகும்.

12.சாரதி பதவி (வெற்றிடம்-03 )

கல்வித்தகைமை

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கும் மேற்படாத அமர்வுகளில் தமிழ்/ சிங்களம் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஏனைய தகைமைகள்
1. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று (03) வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
2. மோட்டார் வாகனச் சாரதியாக மூன்று (03) வருட அனுபவத்திற்கான சான்றிதழ்.
3. விண்ணப்பதாரிஆகக் குறைந்தது 5 அடி 2½ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி இரவு, பகல் எந்நேரமும் சேவையாற்றக் கூடிய உடல் உறுதியைக் கொண்டதுடன் சிறந்த கண் பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
5. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சம்பளம்
2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 (IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (12470-130x10-145x10-160x10-170x12-18860) PL-3-2006-A ஆகும்.

சேவை நிபந்தனைகள்
1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

அடிப்படைத் தகைமைகள்
1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவேஉள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர்வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிடசான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
5. தொழில்நுட்பம்சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் முறை
அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

பொய்யான தகவல் வழங்குதல்
இவ்வெற்றிடங்களை நிரப்புகையில் யாதேனுமொரு விண்ணப்பதாரருக்கு தகைமை இல்லை என்பது வெளிப்பட்டால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் ஏதேனுமொரு முக்கிய தகவலல அவரது அறிவிற்கு தெரிந்தவரை பிழையெனத் தெரிந்து கொண்டே சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனுமொரு முக்கிய தகவலைவேண்டுமென்றே மறைத்திருப்பது தென்பட்டாலோ அவரை அரச சேவையில் இருந்து நீக்க இடமுண்டு.

விண்ணப்பிக்கும் முறை
1. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா. ஐம்பத்தொன்றை செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி, அனுப் பிவைக்கப்படவேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,மானிப்பாய் என்றமுகவரிக்குஅனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
5. பதவிக்குஆட்சேர்ப்பு செய்வதற்கான சகல தகைமைகள் அனைத்தையும் விண்ணப்பத் திகதியன்றோ அல்லது அதற்குமுன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.
6. ஆட்சேர்ப்புத் திட்டவிதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை யற்றவரென நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்தின் பின்னராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

விண்ணப்ப முடிவுதிகதி.
2014.05.05. ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

நியமிக்கப்படுவோர் தொகையும் நியமனத் திகதியும் நியமன அலுவலரினால் தீர்மானிக்கப்படும். வெற் றிடங்கள் அனைத்தையும் அல்லது ஏதேனுமொரு எண்ணிக்கையை நிரப்பாமலிருக்க நியமன அலுவலருக்கு அதிகாரமுண்டு

செல்வி.கா.கேதீஸ்வரி,
செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

2014.04.16
திகதி (C/13642)(7.6.3)

## பரமானந்தா சுவாமியின் குருபூசை தின நிகழ்வு

வடமராட்சி, ஏப்.18
வதிரி பரமானந்தா சிறுவர், முதியோர் இல்ல நிறுவுநர் அமரர் ஸ்ரீபரமானந்தா சுவாமிகளின் குருபூசை தினத்தையொட்டிய நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல்லத் தலைவர் லயன் எஸ்.என்.கதிரவேலு தலைமையில் இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும், சிறப்புவிருந்தினர்களாக கரவெட்டி பிரதேசசெயலர்ச.சிவஸ்ரீ, பருத்தித்துறை பிரதேசசெயலர் இ.த.ஜெயசீலன், மருதங்கேணி பிரதேசசெயலர் ந.திருலிங்கநாதன், வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தி.விஸ்வரூபன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-173)

## கந்தபுராணப்படன பூர்த்திவிழா

யாழ்ப்பாணம், ஏப்.18
திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு கந்தபுராணப்படன பூர்த்தி விழா ஆரம்பமாகி பிற்பகல் நிறைவு பெறும். (த)

**உடனடி வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணத்திலுள்ள செரண்டிப் என்ர பிறைஸ் நிறுவனத்துக்கு விற்பனையாளர்கள் ஆண்/ பெண் இருபாலாரும் உடனடியாகத்தேவை.
தொடர்பு:071 664 7692 (46862) (4.6.3)

**பெயர்மாற்றம்**
பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் கிஸ்நானந்தன் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து செல்வரத்தினம் ஜனுசிகன் என பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(46861)(4.6.3) செ.ஜனுசிகன்

**விற்பனை பிரதிநிதிகள் தேவை**
பிரபல தொடர்பாடல்வலையமைப்பு நிறுவனத்துக்கு
விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
மாதாந்தம் ரூபா 45,000/= இற்கு மேல் வருமானம்.
சிங்களம் ஓரளவு தெரிந்திருத்தல் அவசியம்.
தொடர்புகளுக்கு :
078 505 6071, 078 504 8428
(46869) (4.6.3)



**அடகுப் பொருள்கள்**
HNB ஏலவிற்பனைக்கான அறிவித்தல்
**ஹற்றன் நஷனல் வங்கி**
யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, அச்சுவேலி, திருநெல்வேலி, சங்கானை, கொடிகாமம், நெல்லியடி, மானிப்பாய், சுன்னாகம்
ஆகிய கிளைகளில் 10.02.2013இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 21.04.2014 தொடக்கம் 28.04.2014 (திங்கள் - திங்கள்) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00 மணி வரை இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்.கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.
ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.
- ஹற்றன் நஷனல் வங்கி -
(சி13648)(12.3.6)

**சித்த மருத்துவ அலகு**
**2012/13 கல்வி ஆண்டுக்கான**
**கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்**
சித்த மருத்துவ பிரிவுக்கு 2012/13 கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு
**எதிர்வரும் 28.04.2014 திங்கட்கிழமை காலை 09.00** மணிக்கு
கைதடியிலுள்ள சித்த மருத்துவப் பிரிவு பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.
அனைத்து புதுமுக மாணவர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
பதிவாளர்:
யாழ்.பல்கலைக்கழகம்.
(சி13651) (12.3.6)

**Iyngaran Media Solution (Pvt) Ltd**
Fair Lovely யாழ் கோடைத்திருவிழா வழங்கும்
2014 ஏப்ரல் 19ம் 20ம் திகதிகளில்
காலை 9.00 மணி முதல் இரவு 11.00 மணிவரை
இடம்: Technical College மைதானம் யாழ்ப்பாணம்
முதன் முறையாக யாழ் மண்ணில் தென் இந்திய இசைக் குழுவினரின் பிரமாண்டமான இசை நிகழ்ச்சி
Mega Carnival
சித்திரைப் புத்தாண்டு போட்டிகள்
Fair Lovely வழங்கும் மங்கையருக்கான இலவச அழகு சிகிச்சை மற்றும் அறிவுரைகள்
யாழ் அழகுராணி போட்டி (யாழ் அழகு சிகிச்சை நிலைய நிபுணர்களின் பங்குபற்றலுடன்)
சைக்கிளோட்டப் போட்டி
மரதன் ஓட்டப் போட்டி
STALLS AVAILABLE 077 30 30 30 1
அனுமதி இலவசம்!
அனுசரணையாளர்கள்:
Liam FORME Fair Lovely Rainco Sharmila travels sunsilk
தொடர்புகளுக்கு:
வி. விஜேந்திரன்
077 30 30 30 1



# வாரத்தில் 3 தடவைகள் பழுதடையும் பஸ்கள்

## மன்னார் மக்கள் விசனம்



பழுதடைந்த போக்குவரத்துச் சபை பஸ்

மன்னார், ஏப்.18

ஆலங்குடாவில் இருந்து மன்னாருக்கு சேவையில் ஈடுபடும் அரச போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் வாரத்தில் மூன்று தடவைகள் காட்டுப் பகுதி மற்றும் பயணத்தின் இடை நடுவில் பழுதடைகின்றன என்று பயணிகள் விசனம் தெரிவித்தனர்.


இவ்வாறு பஸ்கள் பழுதடைவதால் குறித்த நேரத்துக்கு அலுவலகங்கள் மற்றும் ஏனைய இடங்களுக்குச் செல்ல முடிவதில்லை என்று பயணிகள் கவலை தெரிவித்தனர்.

மன்னாரில் இருந்து கற்பிட்டிக்கு தற்போது இலங்கை அரச போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. எனினும் தூரப் போக்குவரத்துக்கு ஏற்ப குறித்த பஸ் தரமானவையாக அமைய வில்லை என்று பயணிகள் கூறினர்.

**" வீதியில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் தரமானதாக இருக்க வேண்டும்**

கடந்த வாரம் ஓயாமடு வீதியின் ஊடாக பயணித்த வேளை இரண்டு தடவை பஸ் பழுதடைந்ததால் பயணிகள் சிரமத்தை எதிர்கொள்ள நேர்ந்தது.


எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த வீதியில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் தரமானதாக இருக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-56)



வவுனியாவில் கடும் காற்றுடன் கூடிய மழை நேற்றுமுன்தினம் புதன்கிழமை பெய்த போது செக்கட்டிப்புலவு, கற்பகபுரம், அரபாநகர் பகுதிகளில் உள்ள வீடுகள் சேதமடைந்துள்ளன. (ச-421)

# சீது விநாயகர்குளம் மக்களை சந்தித்தது பிரஜைகள் குழு

## பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மக்களுடன் கலந்துரையாடியபோது...

மன்னார், ஏப்.18

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சீது விநாயகர்குளம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மன்னார் பிரஜைகள் குழு நேரில் சென்று ஆராய்ந்துள்ளது.

இந்தக் கிராம மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி செபமாலை தலைமையில் நடைபெற்ற குறித்த் சந்திப்பில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

போருக்குப் பின்னரான காலப் பகுதியில் மீள்குடி யேற்றப்பட்ட குறித்த கிராமத்தின் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக மக்களுடன் கலந்துரையாடி அவை தொடர்பாக ஆராயப்பட்டது. இந்தச் சந்திப்பில் வீட்டுத் திட்டப் பிரச்சினை, பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், வாழ்வாதாரப் பிரச்சினைகள், போக்குவரத்துப் பிரச்சினைகள், குடிதண்ணீர்ப் பிரச்சினை உட்பட பல பிரச்சினைகள் மக்களால் முன்வைக்கப்பட்டன. இந்தப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பால் கிராம மக்கள் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (ச)

# புதிய நிர்வாகங்கள் தெரிவு

கிளிநொச்சி, ஏப்.18

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு கமநலசேவை நிலைய பிரிவில் உள்ள சகல கமக்கார அமைப்புக்களின் புதிய நிர்வாகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை மாந்தை கிழக்கு கமநலசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சிவப்பிரகாசம் தெரிவித் தார்.

17 கமக்கார அமைப்புகளினதும் புதிய நிர்வாகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச-18)

# அரச ஊழியர் வீட்டில் திருட்டு

வவுனியா, ஏப்.18

வவுனியா, ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டப் பகுதியில் வசிக்கும் ஊழியர் ஒருவரின் வீட்டில் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

வீட்டின் இரண்டு கதவுகள் உடைக்கப்பட்டு கட்டடப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. வீட்டில் யாரும் இருக்காத சமயத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை மற்றொரு வீட்டில் திருட்டு முயற்சி இடம்பெற்றவேளை அயலவர்கள் கூக்குரல் இட்டதையடுத்து திருடர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர். இந்தப் பகுதியில் இவ்வித திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க ஓமந்தைப் பொலிஸார் விழிப்புடன்செயற்படவேண்டும்என்று அரச ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

# பகலில் மோ.சைக்கிளின் முகப்பு லைற்றை ஒளிர வைத்துச் சென்றால் விபத்து குறைவு

## வவுனியா பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி தெரிவிப்பு

வவுனியா, ஏப்.18

பகல் வேளைகளில் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்யும் போது மோட்டார் சைக்கிளின் பிரதான முகப்பு லைற்றைப் போட்டுச் செல்வது சிறந்தது. இவ்வாறு வவுனியா பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சன்ன அபயரத்தின தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேல் மாகாணத்தில் வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் பகல் வேளையில் வீதியில் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்களின் பிரதான முகப்பு லைற்றை போட்டுச் செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் அவ்வாறு பணிக்கப்படாவிட்டாலும், பகல் வேளைகளில் மோட்டார் சைக்கிள்களை செலுத்தும் போது மோட்டார் சைக்கிளின் பிரதான முகப்பு லைற்றை ஒளிர வைத்துச் செலுத்துவதால் விபத்துக்கள் குறைக்கப்படுகின்றன.

இந்த நடைமுறை கடைப்பிடிக்க ஆரம்பித்த பின்னர் வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விபத்துக்கள் குறை வாகக் காணப்படுகின்றன.

எனவே பகல் வேளைகளில் மோட்டார் சைக்கிளை செலுத்தும் போது மோட்டார் சைக்கிளின் பிரதான முகப்பு லைற்றை ஒளிர விட்டுச் செல்ல வேண்டும்- என்றார். (ச-421)

# வவுனியாவில் ஞாயிறன்று கருத்தாடல் களம்

வவுனியா, ஏப்.18

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் 'கருத்தாடல் களம்' நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தலைமை உரையை வவுனியா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி.நாதனும், தொடக்க வுரையை சாமஸ்ரீ க.சிவபாலனும் நிகழ்த்துவார்கள். (ச-402)

# கிளி-முழங்காவில் வீதி படுமோசம்; ஆபத்தை எதிர்நோக்கும் பயணிகள்

## புனரமைத்துத் தருமாறு அவசர கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.18

மிக மோசமாகப் பாதிப்புற்றுக் காணப்படும் கிளிநொச்சி- முழங்காவில் வீதியைப் புனரமைக்க வட மாகாணப் போக்குவரத்துத்துறை அமைச்சர் கவனம் செலுத்தி விரைந்து உதவ வேண்டும் என இந்த வீதியால் தினமும் பயணிக்கும் ஆயிரக்கணக்கான பயணிகளும், அந்தப் பகுதி மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி- முழங்காவில் பிரதான வீதி நீண்ட காலமாக திருத்தியமைக்கப்படாது மிக மோசமான நிலையில் பழுதடைந்து குன்றும் குழியும் நிறைந்த வீதியாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியின் நடுப் பகுதியிலும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் குழிகள் காணப்படுகின்றன.

இந்த வீதியால் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களில் பயணிப்போர் மிகவும் அச்சத்துடனேயே பயணிக்கின்றார்கள்.

அண்மையில் இந்த வீதியால் பெருமளவு பயணிகளுடன் பயணித்த பஸ் ஒன்று, புதுமுறிப்புக் குளத்துக்கு அருகில் உள்ள பாலத்துக்கு அருகில் ஆழமான வாய்க்கால் குழியினுள் விழுந்து விபத்துக்குள்ளாக இருந்தது. எனினும் அதிர்ஷ்டவசமாக விபரீதம் ஏதும் ஏற்படவில்லை.

ஊற்றுப்புலம், கோணாவில், காந்திகிராமம், யூனியன் குளம், ஸ்கந்தபுரம், அக்கராயன், ஆனைவிழுந்தான், ஆரோக்கியபுரம், வன்னேரிக்குளம், கண்ணகைபுரம், முக்கொம்பன் போன்ற கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தினமும் இந்த வீதியால் பல்வேறுபட்ட சிரமங்களுடன் பயணிக்க நேர்ந்துள்ளது.

இந்த வீதியின் நிலைமை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்ட போதும் எவராலும் இவ்விடயம் கவனத்தில் எடுக்கப்படவில்லை. எனவே வடமாகாணப் போக்குவரத்து அமைச்சர் இந்த வீதியை நேரடியாக வந்து பார்த்து உரிய நடவடிக்கை எடுக்க உதவ வேண்டும் எனப் பலரும் கோருகின்றனர். (ஓ-426)

## முறைப்பாட்டை தெரிவிப்பதற்கு வசதிகள்

மட்டக்களப்பு,ஏப்.18
மட்டக்களப்பு மாவட்டத்தில் முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டுள்ள சமுர்த்திக் கொடுப்பனவு தொடர்பாக மக்கள் முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸினால் விடுக்கப்பட்டுள்ள பொதுமக்களின் கவனத்துக்கு என்ற தலைப்பிலான அறிவித்தல் ஒன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் சமுர்த்தி வலய அலுவலகங்கள், சமுர்த்தி வங்கிகள் போன்ற இடங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. (ச)



வாழைச்சேனை, கறுவாக்கேணியில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை ஐஸ் உற்பத்தி நிலையம் ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன மங்கல விளக்கை ஏற்றி வைத்தார்.

# அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை

### மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆரம்பம்

அம்பாறை,ஏப்.18
அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள டீ.எஸ். சேனநாயக்க சமுத்திரம் மற்றும் நீர்தாங்கு நிலைகளின் நீர் மட்டம் மிகவும் குறைந்துள்ளமையால் மாவட்டத்திலுள்ள சகல விவசாயக் காணிகளிலும் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

தற்போதுள்ள நீரின் அளவைக் கருத்தில் கொண்டு அவற்றில் குடிதண்ணீர், வனவிலங்குகளுக்குத் தேவையான குடிதண்ணீர் என்பவற்றைத்தேக்கி வைத்து விட்டு எஞ்சிய நீரின் அளவின் அடிப்படையில் சிறுபோகத்துக்காக சுமார் 40,000 ஏக்கர் அளவில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக அம்பாறை மாவட்டத்தின் சகல நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுகளிலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட விவசாயக் காணிகளின் விதைப்பு நடவடிக்கைகள் தற்போது தீவிரமாக நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



அனுமதிக்கப்பட்ட பகுதியில் சிறுபோக நெற்செய்கை

## கிராமங்களுக்குள் நுழையும் யானைகள்

அம்பாறை,ஏப்.18
அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் கடும் வறட்சியால் காட்டு யானைகள் மக்களின் குடியிருப்பு கிராமப் பகுதிகளுக்குள் நுழைய ஆரம்பித்துள்ளன.

கடந்த சில நாள்களாக நாவிதன் வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சொறிக்கல்முனை, 6ஆம் கிராமம் போன்ற பிரதேசங்களுக்குள் இரவுவேளைகளில் பிரவேசிக்கும் யானைகள் அந்தப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ள பயிர்வகைகளை துவம்சம் செய்து வருகின்றன என்று மக்கள் தெரிவித்தனர்.

தற்போது யானைகள் பகல் வேளைகளிலும் கூட்டமாக வருகைதர ஆரம்பித்துள்ளன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை 6 யானைகள் சொறிக்கல்முனை பிரதேசத்துக்குள் நுழைய முற்பட்ட வேளையில் மக்கள் விழிப்படைந்து தீவைத்தும், பட்டாசு கொளுத்தியும், கூக்குரலிட்டும் யானைகளை விரட்டியுள்ளனர். (ச)



குடியிருப்புக்களுக்குள் நுழையும் யானைகள்

## கல்முனையில் மே தினக் கூட்டம்

அம்பாறை, ஏப்.18
அகில இலங்கை அரச பொது ஊழியர்சங்கமும், அதன் இணை நிறுவனமான வடகிழக்குமாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனமும் இணைந்து நடத்தும் மே தினக் கூட்டம் கல்முனையில் நடைபெறவுள்ளது.


அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தினால் 20 ஆவது வருடமாக நடத்தப்படும் இந்த மே தினக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி கல்முனைமெதடிஸ்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த மே தினக் கூட்ட ஆரம்பத்தில் கல்முனை நகரூடாக மேதின ஊர்வலமொன்று இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் செயற்பாடுகள் தற்சமயம் வடக்குக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதால், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்தும்சங்க உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதேச கிளைகளின் முக்கியஸ்தர்கள் இந்த மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு, முஸ்லிம்கள் மீதான பொது பல சேனவின் அடாவடி, அராஜக செயற்பாடுகள், அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு, கல்முனை தமிழ் பிரதேச செயலக தரமுயர்வு தொடர்பிலான பல தீர்மானங்கள் மே தினத் தீர்மானங்களாக கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

எண்பதாவது அகவையில்
எங்கள் தாத்தா
கார்த்திகேசு சண்முகநாதன்
அன்பால் எம்மை அரவணைத்து
அறிவாய் நாம் மிளிர எம்மை வழிப்படுத்தி
நீதியாய் நாம் வாழ நீதிக்கதைகளைக் கூறி
அன்பு மழை பொழியும் தாத்தாவிற்கு
அன்புமுத்தங்களுடன்
பிறந்தநாள் வாழ்த்துக்கள்
வாழ்த்துவோர்:
பேரப்பிள்ளைகள்
ரிசாந், மதுசன், பிரடிஷ்கா, மேகா, டனிஸ், மிருணா, றஜீனா, ஜஸ்விகா, லித்திகா, றுஸ்மிகா.
சேதுவாசம்,
தொட்டிலடி, சங்கானை.
(46790)(2.3.6)




முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
18.04.2014




இமையாணன் கிழக்கைச் சேர்ந்த
திரு. திருமதி சுரேந்திரன் சுகுணா
தம்பதியரின் தலைப்புதல்வி
கிருஷ்திகா (ஹிமானி, பப்ளிமா, அம்மு)
இன்று (18.04.2014) வெள்ளிக்கிழமை
தனது முதலாவது பிறந்த நாளை அப்பா, அம்மா, பெரியண்ணா, சின்னண்ணா, அம்மம்மா குடும்பத்தினர், அப்பம்மா குடும்பத்தினர், அண்ணா, அக்காமார் மற்றும் எல்லோருடனும் கிருஷ்திகை இல்லத்தில் வெகு விமரிசையாகக்கொண்டாடுகிறார்.
இவர் இறைவன் அருளால் எல்லா செல்வங்களுடனும் பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
என்றும் அன்புடன்
தாத்தா, மாமா, அன்ரா.




வல்வை சிவ ஆறுமுகத்தின்
ஓராண்டு நினைவுநாளில்
சந்நிதியான் கூட்டுப் பிரார்த்தனை
மலர் வெளியீடு
வல்வை சிவ ஆறுமுகம் அவர்களால் தொகுக்கப்பட்ட இம் மலர் அவரின் விருப்பப்படி அவர் வேலவன் பாதமடைந்த ஓராண்டு நினைவு நாளான எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (22.04.2014) ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வெளியிடப்படவிருக்கின்றது. அன்று காலை விசேட அபிஷேகங்களும் எம் பெருமானுக்கு சண்முக அர்ச்சனையும் நடைபெற்ற பின் முற்பகல் 11 மணியளவில் இம் மலர் வெளியீடு நடைபெற இருக்கின்றது. இவ்வைபவத்தைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளதால் இவற்றில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.
உங்கள் நல்வரவை நாடிநிற்கும் குடும்பத்தினர்.

# இணையத்தின் ஊடாக மருந்துகளை வாங்காதீர்


## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப்.18
இணையத்தின் ஊடாக மருந்துப்பொருள்களை கொள்வனவு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் ஹேமந்த பெனரகம தெரிவித்ததாவது:-

தற்போது நாட்டில் பலர் இணையத்தின் ஊடாக மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்கின்றனர். ஆனால் அவர்கள் ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இணையத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்படும் மருந்துப் பொருள்கள் உரிய தரத்தைக் கொண்டிருப்பதில்லை.

இணையத்தின் மூலம் மருந்துகள் பெறப்படும் போது அங்கு வைத்திய ஆலோசனைகள் பெறப்படுவது குறைவாகவுள்ளது. வைத்தியர்களின் பரிந்துரையின்றி பயன் படுத்தும் மருந்துப் பொருள்கள் உடலுக்கு தீங்கை ஏற்படுத்தும்-என்றார். (ச-10)



மலேசியாவில் நடைபெறும் பாதுகாப்பு சேவைகள் தொடர்பான ஆசிய கண்காட்சி மற்றும் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அந்த நாட்டு பிரதமர் டத்தோ நஜீப் அப்துல் ரஸாக்கைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# புனித ஹஜ் யாத்திரைக்கு இம்முறையும் கட்டுப்பாடு

## 2,240 பேருக்கே அனுமதி

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா செல்வதற்கு இந்த முறை இலங்கையிலிருந்து 2,240 பேருக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்வதற்காக 7,500 இற்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருப்பதாக தெரிவித்த திணைக்கள பணிப்பாளர் எம். எச். எம். ஸமீல், அதில் தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

புனித மக்காவை அண்மித்த பிரதேசங்களில் விஸ்தரிப்பு பணிகள் இடம்பெற்று வருவதால் ஹஜ் யாத்திரிகர்களின் தொகை கடந்த சில வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த வருடமும் 2,240 பேருக்கே ஒதுக்கீடு வழங்கப்பட்டது என்று அவர் கூறினார்.

ஏற்கெனவே 7,500 பேர் விண்ணப்பித்துள்ளதால் அதில் முன்னுரிமை அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர் என்று அவர் தெரிவித்தார்.

முதற் தடவையாக ஹஜ் கடமைக்குச் செல்பவர்களுக்கு இந்த முன்னுரிமை வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# தேர்தல் குறித்து இரகசியப் பேச்சு

## பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் சோபித தேரர் ஆராய்வு

கொழும்பு,ஏப்.18
இலங்கையில் அடுத்ததாக இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியினரால் நிறுத்தப்படவுள்ள பொது வேட்பாளரொருவர் சம்பந்தமாக, கோட்டே நாக விகாரையின் தலைமைத் தேரரான மாதுலுவாவே சோபிததேரர் அரச தரப்பில் அங்கத்துவம் வகித்துவரும் சிறுபான்மைக் கட்சிகள் சில வற்றுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தியிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அரசு விரைவிலேயே ஜனாதிபதித் தேர்தலொன்றை நடத்தக் கூடுமென்பதால் அதற்கான ஆயத்தங்களும் தென்படுவதால் அதை எதிர் கொள்வதற்கு முன்னதாகவே பொது வேட்பாளர் பற்றித் தீர்மானித்து ஆயத்தமாக வேண்டியிருப்பதாக அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. அரசஅமைச்சர்கள் சிலரும் தேர்தல் குறித்து சோபித தேரரரைச் சந்தித்துக் கலந் துரையாடியிருப்பதாகவும் அந்தத் தகவல் மார்க்கங்கள் தெரிவித்துள்ளன.



சோபிததேரர்

அத்துடன் இந்தச் சந்திப்புக்களில் பேசப்பட்டவிடயங்கள் தற்போது அரசின் உயர் மட்டங்களுக்கு எட்டியிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. (ச-22)

# இரு குழுக்களுக்கு இடையில் மோதல்; அறுவர் காயம்

கொழும்பு,ஏப்.18
மின்னேரியா பொலிஸ் பிரிவில் பாசியாவெவ பகுதியில் இடம்பெற்ற மோதலில் அறுவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.-

நேற்றுமுன்தினம் மாலை இரு குழுக்களுக்கு இடையில் மோதல் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதல் சம்பவம் எதற்காக நடைபெற்றது என்று இதுவரை கண்டறியப் படவில்லை என்றும்-சம்பவத்தில் அறுவர் வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகி பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சம்பவம் தொடர்பில் இதுவரையில் எவரும் கைது செய்யப் படவில்லை என்றும் பொலி ஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மின்னேரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01.08.1945
மறைவு
29.04.2013

திருமதி கமலாதேவி
துரைராஜசிங்கம்
(துரைசிங்கம்)
திதி:சங்கடஹர சதுர்த்தி (18.04.2014)

ஆண்டு ஒன்று ஆனதுவே
ஆறவில்லை வலி இன்னும்
மீண்டும் ஒரு பொழுது எம்முன்னே
தோன்றாயோ
முற்றத்திருத்தி முழு நிலவை
வரவழைத்து
பால்கலந்த தித்திக்கும் உணவூட்டி
விட்டவளே
வட்டமாய் இருத்தி வான் நிலவின்
பேரொளியில்
வடை சுட்டகதை எனப்பல
கதைகள் சொன்னவளே
பள்ளிக்கு நாம் போக
பாதிவழி வருபவளே
இன்று பார் எம்மைப்
புகழ்கின்றது
பார்ப்பதற்கு நீங்கள்
இல்லை
காலத்தை வெல்வதற்கு
யாருக்குத்தான் முடியும்
தாயே நீங்கள் சாந்தி பெற
வேண்டுகின்றோம்.



(#13360)(12.3.6)

கலாசாலை வீதி, திருநெல்வேலி.
குடும்பத்தினர்.



31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
23.03.1927
மறைவு
21.03.2014

அமரர் Dr.தம்பிமுத்து
தனபாலரத்தினம்
[அன்பு மெடிக்கல் கிளினிக் -
அன்பு வைத்தியர்]

85/7. A.V றோட், கொழும்புத்துறையை
நிரந்தர வசிப்பிடமாகவும், 25/15,
அருளம்பலம் வீதியைத் தற்காலிக
வசிப்பிடமாகவும் கொண்ட
Dr.தம்பிமுத்து தனபாலரத்தினம்
அவர்கள் கடந்த 21.03.2014 காலமானார்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்
நாளை மறுதினம் (20.04.2014) ஞாயிற்றுக்கிழமை
நடைபெற உள்ளதால் தாங்களும் வருகை தந்து, அதனைத் தொடர்ந்து
இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(46617)(12.3.6)

25/15, அருளம்பலம் வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சோனியாவே கவனம்!

இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காப்பதற்காக ஈழத் தமிழர்கள் லட்சம் பேர் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தார்கள்; இறுதிப் போர் நடந்தபோது மட்டும் 40,000க்கும் குறையாதவர்கள் இவ்வாறு இந்தியாவுக்காக உயிர்த் தியாகம் செய்தார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது.

இந்தியாவின் மொழி வழி மாநிலங்கள் பிரிந்து சென்று தனித் தனி நாடுகள் ஆகிவிடாது இருப்பதற்காக சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழ்ப் போராளிகள் உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள்.

இவை எல்லாம் வெறும் பிதற்றல்கள் அல்ல. இந்தியாவை ஆளும் காங்கிரஸ் கட்சியை ஆளும் தலைவி சோனியா காந்தி தமிழ் நாட்டிலே சொல்லியிருக்கும் தர்க்க நியாயத்தின் அடிப்படையில் பார்த்தால் மேற்கூறப்பட்ட ஒவ்வொன்றும்கூட உண்மையானவைதான்.

"இலங்கைத் தமிழர்களை ஒருபோதும் காங்கிரஸ் கட்சி கைவிடாது. இலங்கைத் தமிழர்களுக்காகக் காங்கிரஸ் கட்சி எதுவுமே செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றன அரசியல் கட்சிகள். இலங்கைத் தமிழர்களுக்காக உன்னதமான தலைவர் ராஜீவ் காந்தி குருதி கொட்டியதை மறக்க முடியுமா? அதைவிடவும் என்ன தியாகம் செய்ய முடியும்?" என்று அவர் கேட்டதைப் பார்க்கும்போது, "இந்தியாவின் ஒருமைப்பாடு சிதைந்து அந்த நாடு துண்டு துண்டாகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் இலங்கையில் ஒரு போர் நடத்தப்பட்டு, அதில் ஆயிரம் ஆயிரம் மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள்" என்ற கூறுவதில் எந்தத் தவறும் இருக்க முடியாது.

சோனியாவுக்கு ராஜீவ் காந்தியின் அரசியல் வரலாறு தெரிந்த அளவுக்கு, இந்திரா காந்தியின் அரசியல் வரலாறும், அவர் காலத்து காங்கிரஸ் கட்சியின் வரலாறும் தெரிந்திருக்க நியாயம் இல்லைத்தான்.

ஈழத்திலே அகிம்சை வழிப் போராட்டங்கள் சேடம் இழுக்கத் தொடங்கி, வன்முறை மீது இளைஞர்கள் ஆர்வம் கொள்ளத் தொடங்கிய காலத்தில், அதை ஊதிப் பெருப்பித்து பெருந் தீயாக்கியது காங்கிரஸ் கட்சிதான். அந்தத் தீ ஈழத் தமிழர்கள் குளிர்காய்வதற்காக மூட்டப்பட்ட தீயல்ல; அது இந்தியர்களின் நலன்களைக் காப்பதற்காக மூட்டப்பட்ட காட்டுத் தீ.

காங்கிரஸ்தான் அந்தக் காட்டுத் தீயை மூட்டியது என்றபோதும், காங்கிரஸுக்குள் கட்டுக்கடங்காமல் அந்தத் தீ முழாசி எரிந்தபோது, அவசர அவசரமாக அதனை அணைக்க இந்திய அமைதிப் படையினர் எனும் கொடூரர்களை ஈழத் தமிழ் மண்ணுக்கு அனுப்பி வைத்ததும் காங்கிரஸ் அரசுதான்.

ஈழத் தமிழர்கள் நிராகரித்து ஒதுக்கிய இந்திய – இலங்கை ஒப்பந்தத்தைச் செய்ததும் காங்கிரஸ் அரசுதான், ஈழத் தமிழர் நலன் பேணுவதாகச் சொல்லிக்கொண்ட அந்த ஒப்பந்தத்தில் ஈழத் தமிழர்களுக்காகக் கையெழுத்திட்டுக் கொண்டதும் காங்கிரஸ் அரசுதான்.

இலங்கை அமைதிப் படையினரைக் கொண்டு நூற்றுக்கணக்கில் உயிர்களைக் காவு கொண்டதும், சொத்தழிவுகளை ஏற்படுத்தியதும், பெண்களை மானபங்கப் படுத்தி வன்புணர்ந்ததும், எல்லாமும் காங்கிரஸ் அரசு தான்.

ஆயுதப் போராட்டம் விரிந்து பரந்தபோது அது தன் களத்தில், தளத்தில் விரலுக்கு ஏற்ற வீக்கமாக அன்றி விரலே ஏற்காத வீக்கமாக மாறிப்போனதற்குக் காரணமும் காங்கிரஸ் அரசு எல்லா ஆயுத இயக்கங்களையும் அழைத்து இந்தியாவில் வைத்து ஆயுதப் பயிற்சிகளையும் கொடுத்து ஆயுதங்களையும் கொடுத்தமைதான்.

இறுதிப் போரிலே இலங்கைப் படைகளுக்கு புலிகளின் ஆயுதக் கப்பல்கள் குறித்த தகவல்களைக் கொடுத்தது, விமானங்களின் பறப்பைக் கண்டறியும் ராடர்களைக் கொடுத்தது (நேரடியாகப் படையினரை அனுப்பியதாகவும் குற்றச்சாட்டுண்டு) உளவுத் தகவல்கள், செய்மதி ஒளிப்பட உதவிகள் வழங்கியது என்று எல்லாவற்றையும் செய்து பல ஆயிரம் மக்கள் கொல்லப்படுவதை ஊக்குவித்து, வேடிக்கை பார்த்ததும் காங்கிரஸ் கட்சிதான்.

இவற்றை எல்லாம் மறந்துவிட்டு; அல்லது வசதியாக மறைத்துவிட்டு ஈழத் தமிழர்களுக்குக் காங்கிரஸ் கட்சி எதையும் செய்யவில்லை என்று உண்மையில் தமிழகக் கட்சித் தலைவர்களில் எவராவது கூறியிருப்பராயின் சோனியாவின் கோபம் நியாயமானதுதான். இத்தனைக்கும் மேலாகவா அவரது கட்சி ஈழத் தமிழர்களுக்கு எதையாவது செய்துவிடப்போகிறது?!

அம்மணி! தேர்தல் பரப்புரைக்காக வெறுமனே இப்படிப் பொய் கூறும் உங்கள் கயமையை எப்படி துன்பம் சுமந்த ஈழத் தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியும்? செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தம் செய்ய வேண்டிய இந்தத் தருணத்தில்கூட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில், நகராக் கல் நந்தியாக அமர்ந்து இருந்துகொண்டு காங்கிரஸ் கட்சி ஈழத் தமிழர்களுக்கு செய்த தியாகம் என்று ராஜீவ் காந்தியின் குருதியைத் தூக்கிக் காட்டியது வெட்கம்கெட்ட செயல். அப்படிப் பார்த்தால் ஈழத் தமிழர்களிடமும் தூக்கிக் காட்டுவதற்கு ஆயிரம் ஆயிரம் பேரின் – தலைவர்கள் உட்பட – குருதி இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

கட்டுரை

# கச்சதீவும் அது எதிர்நோக்கும் சவால்களும்

கந்தப்பு பரமேஸ்வரன்,

சர்வதேச ரீதியாக கடல் வளங்களைப் பயன்படுத்துவதும், உரிமை கொண்டாடுவதும் தொடர்பான கடற் சட்டங்கள் தீர்மானங்கள் சம வாயங்களாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் நிர்ணயிக்கப்பட்டு வருவதுடன், நாடுகளுக்கிடையிலான கடற்பரப்பு, ஆதிக்க எல்லைகள் தொடர்பாகவும், தெளிவான கடற் பரப்பு ஆதிக்க எல்லைகள் தொடர்பாகவும் தெளிவான வரையறைகள் குறிப்பிடப் பட்டுள்ளது. இன்று நாடுகளைச் சூழவுள்ள கடற்பரப்பு ஆதிக்கம் 200 மைல்கள் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடலினதும், கடலடியினது வளங்கள் அனைத்தும் அந்த நாடுகளுக்கு உரித்துடையவை எனவும் கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக பல நாடுகள், முன்னர் யாருக்கும் உரிமையற்றதாகக் கருதப்பட்ட கடற்பரப்புகளைத் தமக்கு சொந்த மாக்கிக் கொண்டுள்ளன. வேறு சில நாடுகள் தமது ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த கடற்பரப்புகளை இழக்கவும் நேரிட்டது. குறிப்பாக சீனா, வியட்நாமுக்கிடையிலான ஸ்பாட்லீ தீவு விடயம், முன்னாள் சோவியத் ஒன்றியம் - ஜப்பானுக்கிடையிலான குறைல்தீவு விடயம் ஐஸ்லாந்து - ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான கடல் வலய விஸ்தரிப்புத் தொடர்பான முரண்பாடு போன்றதொரு பிரச்சினையே இலங்கை இந்தியாவுக்கிடையிலான கச்சதீவுப் பிரச்சினையுமாகும்.

### கச்சதீவின் அமைவிடம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்கில் அமைந்துள்ள சப்ததீவுகள் எனப்படுகின்ற பிரதான ஏழு தீவுகளுடன், பாலைதீவு, இரணைதீவு, கக்கிரதீவு என்பவற்றையும், கச்சதீவையும் உள்ளடக்கி பதினொரு தீவுகள் அமைந்துள்ளன. இவற்றுள் இரணைதீவு தவிர்ந்த கச்சதீவு; பாலைதீவு, கக்கிர தீவு ஆகிய மூன்றும் மக்கள் எவரும் வாழாத வெறும் தீவுகளாகக் காணப்படுகின்ற போதிலும், கச்சதீவு சமூக பொருளாதார ரீதியில் இலங்கை இந்திய நாடுகளுக்கிடையில் முக்கியத்துவம் கொண்டதாகக் காணப்படுகின்றது. கச்சதீவானது வட அகலாங்கு 9-25, கிழக்கு நெட்டாங்கு 79-30' ஆகியவை சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. நெடுந்தீவுக்கு தென் மேற்கே ஏறக்குறைய 14.4 கிலோமீற்றர் தொலைவிலும், இலங்கையையும் இந்தியாவையும் ஊடறுத்துச் செல்லும் ஒடுங்கிய பாக்கு நீரிணையின் மையப் பகுதியில் அமைந்துள்ள கச்சதீவின் சராசரி நீளம் 1.6 கிலோ மீற்றர். அகலம் சராசரியாக 275 மீற்றராகும். இதன் பரப்பளவு 82 ஹெக்ரெயர்களாகும். இந்தத் தீவின் புவியியல் சார் தரைத் தோற்ற அமைப்பை நோக்கும் போது வறள் வலயத்துக்குரிய முட் புதர்கள் மற்றும் சிறிய புற்றரைகளும் கடற்கரையோரத் தாவரங்களுமே இங்கு காணப்படுகின்றன.

### சமூக பொருளாதார முக்கியத்துவம்

புவியியல் சார் அமைவிடம் காரணமாகவும், சமுத்திரவியற் காரணங்களினாலும் நீண்டகால வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக கச்சதீவு திகழ்வதோடு, மீன்பிடித் தொழிலுக்கான அமைவிடமாகவும் முத்துக் குளித்தல், சங்கு சேகரித்தல், கடலட்டை சேகரித்தல் என் பவற்றுடன் இறால் உற்பத்தி மிகச் சிறப்பாக நடைபெறும் இடமாகவும் காணப்படுவதால் இது "இறால் வங்கி" எனவும் அழைக்கப்படுகிறது. இதனால் தமிழ் நாட்டின் தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 101 கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களும் இலங்கையின் வட பகுதியாகிய மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களும் இந்தத் தீவுப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பண்பாட்டியல் ரீதியாக இங்கு மக்களின் வாழ்விடங்கள் இல்லாத போதிலும் சமய வழிபாட்டு ரீதியான முக்கியத்துவம் காணப்படு கிறது. 1913 இல் றோமன் கத்தோலிக்க சமயத்தவரது வழிபாட்டுக்கென புதிய அந்தோனியார் ஆலயம் அமைக்கப்பட்டது. தற்போது அந்த ஆலய நிர்வாகம் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயரின் ஆளுகைக்குட்பட்ட நெடுந்தீவு கோயில் பங்கின் கீழ் வருகிறது.

இங்கு நடைபெறும் வருடாந்த உற்சவ திருவிழாவுக்கு இலங்கையைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி தமிழ் நாட்டைச் சேர்ந்த யாத்திரிகர்களும் வருகை தருவது வழக்கம். சமய நோக்கம் மட்டுமல்லாது பண்டமாற்று வியாபார நோக்கத்துக்கான வளம்மிக்க பிரதேசமாக கச்சதீவு விளங்குகிறது.

இத்தகைய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கச்சதீவின் உரிமை தொடர்பாக இலங்கை இந்திய ஆகிய இரு நாடுகளும் கால னித்துவ அரசுகளின் ஆளுகைக்குட்பட்டிருந்த காலத்திலிருந்து பிரச்சினை தோற்றம் பெற்றது. இரண்டு நாடுகளின் ஆட்சியாளர்களால் காலத்துக்குக் காலம் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவதும் பின்னர் அவை மீறப்படுவதுமான சம்ப வங்களே அதிகம் காணப்பட்டது. எனி னும் 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி இருநாடுகளுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட ஸ்ரீமாவோ சாஸ்திரிய ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் பாரம்பரிய நீர்ப் பரப்புப் பகுதிகளில் ஒன்றான ஆதாம் பாலத்தில் இருந்து பாக்கு நீரிணை வரையுள்ள பகுதிக்கு கடல் எல்லை நிர்ணயிக்கப்பட்டது. கச்சதீவு இலங் கைக்குரிய தீவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இரு நாடுகளுக்கிடையில் நிலவிய சர்ச்சைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

எனினும் இந்த ஒப்பந்தத்தின் 5 ஆவது, 6 ஆவது சரத்துக்கள் இந்திய மீனவர்கள் பாரம் பரியமாக அனுபவித்து வந்த உரிமைகளை அனுபவிக்க வழி செய்கின்றது. சரத்து 5 இன் பிரகாரம் இந்திய மீனவர்களும், யாத்திரிகர்களும் இது வரைகாலமும் பயன்படுத்தியது போல் கச்சதீவுக்கு செல்லும் உரிமை பெறுவதோடு, அனுபவித்துக் கொள்ளவும் உரிமை கொண்டவர்கள். இந்த நோக்கங்களுக்காக பிரயாண ஆவணங்களோ விசாக்களோ இலங்கையிலிருந்து பெறவேண்டும் என இலங்கை அரசு நிபந்தனை விதிக்க முடியாது.

சரத்து 6 இன் பிரகாரம் இலங்கையினதும் இந்தியாவினதும் மீனவர் படகுகள் மீன்பிடியில் ஈடுபடமுடியும் எனக் கூறப்பட்டது. இவ் ஒப்பந்தத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கையின் எல்லைப் பகுதியில் வந்தமையினால் இலங்கைத் தரப்புக்கு மகிழ்ச்சியையும் அதேவேளை தமிழ் நாட்டினதும் அகில இந்திய ரீதியிலும் கண்டனங்கள், ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத்தொடர்ந்து 1976ஆம் ஆண்டு உடன்படிக்கையின் பிரகாரம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள முழுக்கடல் எல்லையை நிர்ணயித்து இரு நாடுகளும் தத்தமது பிரதேசங்களில் முழு இறை மையைப் பிரயோகிப்பது எனவும் ஒரு நாட்டின் மீன்பிடிக் கலன்களும் மீனவர் களும் அடுத்த நாட்டின் கடற்பிர தேசத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவ தில்லை எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்விரு ஒப்பந்தங்களைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் பிரச்சினை காரணமாக தமிழ்ப் போராளிக் குழுக்களின் உறவு தமிழ் நாட்டுடன் உருவாகியதைத் தொடர்ந்து பிரதான கடல் வழிப்போக்குவரத்துப் பாதையாக இதனைப் பயன்படுத்தத் தொடங்கினர். இதனால் இலங்கை இந்திய கடற்படையினரின் கண்காணிப்புப் பணியில் பல நூறு கலன்கள் தினமும் ஈடுபட்ட நிலையில் மீனவர் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருந்த துடன் மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் இரு அரச படைகளாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தற்போது 2009ஆம் ஆண்டு உள்நாட்டு போர் இலங்கையில் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து இருநாட்டு மீனவர்களும் இப்பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக தினமும் நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் இயந்திர இழுவை வலைகளைப் பயன்படுத்தி அத்து மீறி மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருவதால் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்படுவதும் தாக்குதலுக்குள்ளாக்கப்படுகின்ற நிலைமையும் மேலோங்கிக் காணப்படுவதோடு இலங்கை மீனவர்களை இந்திய கடற்படையினர் கைது செய் யும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இந்தியாவின் தமிழ்நாட் டின் முக்கிய கட்சிகளான அ.தி.மு.க, தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், தமிழ் தேசிய இயக்கம் உட்பட சகல கட்சிகளும் இலங்கையிட மிருந்து மீண்டும் கச்சதீவை மீட்டுத்தர வேண்டும் என குரல் எழுப்பி வருகின்றன.

### கச்சதீவின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள்

◆ இலங்கை, இந்திய அரசுகள் ஐக்கிய நாடுகள் சபை, சார்க் அமைப்பு, அணிசேரா நாடுகளின் அமைப்பு ஆகிய சர்வதேச ரீதியான அமைப்புக்களில் அங்கத்துவம் கொண்டிருப்பதுடன் அணிசேரா நாடுகளின் தலைமைப் பதவியை இலங்கை கொண்டுள்ளது. எனவே இந்த அமைப்புக்களின் உதவியுடன் இப்பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வு, எட்டப்படுதல் அவசியமாகும்.

◆ தற்போது இலங்கை மீனவர்கள் 25 HP இயந்திர இழுவைப்படகுகள் மூலமும் இந்திய மீனவர்கள் 125 HP இயந்திர இழுவைப் படகுகள் மூலமும் கச்சதீவை அண்டிய பகுதி களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் இந்திய மீனவர் இழுவைப்படகுகள் இலங்கையின் வடபகுதியின் கடல் வளங்களை சூறையாடும் நிலை காணப்படுகின்றது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு இருநாட்டு அரசுகளும் பொருத்தமான மீன்பிடிக் கொள்கைகளை வகுத்து செயற்படுத்த வேண்டும்.

◆ தற்போது இரு நாட்டுத் தரப்புக்களுக்கிடையே நடைபெற்று வருகின்ற பேச்சுவார்த்தை குழுவில் பொருத்தமான முடிவுகளை எடுத்துச் செயற்படுத்தக்கூடிய பிரதிநிதிகள் உள்ளடக்கப் படவேண்டும். எடுக்கப்படும் தீர்மானங்கள் சட்ட வரையறைக்குள் உள்வாங்கப்பட்டு அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்யவேண்டும். இதன் மூலம் இருநாட்டு மீனவர்களின் அநாவசிய உயிரிழப்பு, உடைமையிழப்பு முரண்பாடுகள் நீக்கப்பட்டு சமூக பொருளாதார வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித தீவாக கச்சதீவு பாதுகாக்கப்படும்.

**ஒருவேளை தீர்மானம் நிறைவேறாமல் போயிருந்தால் நிலைமை எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டிருக்கும்? அவ்வாறு தோல்வியுற்றிருக்குமானால் நிச்சயமாக அது ஒரு பெரும் வெற்றி விழாவாகவே கொண்டாடப்பட்டிருக்கும். அதை வைத்தே இன்னும் ஒரு தேர்தலை நடத்தி முடித்திருப்பார்கள்.**

## கோடூர குற்றங்களைப் புரிந்துவிட்டு

# உள்நாட்டு விவகாரம் என்று எந்த நாடும் பேசக்கூடாது

## ஐ.நா.செயலாளர் பான்கீ-மூன்

ரம்யன்

ஐ நா.மனித உரிமைகள் சபையில் அமெரிக்க முன்னெடுப்பில் நிறை வேற்றப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இலங்கை அரசுத் தலைவர்கள் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ- வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் முதலியவர்கள் மட்டுமல்ல அரசில் அங்கம் வகிக்கும் அத்தனை கட்சித் தலைவர்களும் அடியோடு நிராகரித்து விட்டார்கள். ஆனால் அரசுக்கு வெளியில் இருந்து குறிப்பாக ஐ.தே.க.மற்றும் ஜே.வி.பி. போன்றவை அரசின் இந்த முடிவு புத்திசாலித்தன மானதாகத் தெரியவில்லை என்பதாக எச்சரிக்கும் தொனியில் கருத்து வெளியிட்டுள்ளன. உலக விவகாரங்களில் அனுபவமும் அக்கறையும்கொண்ட வேறு சில அறிஞர்களும் இதேவிதமான கருத்துக்களையே வெளி யிட்டுள்ளார்கள்.

மனித உரிமைகள் சபையில் உறுப்புரி மையை வைத்துக் கொண்டு, அந்த நிறு வனத்தில் நாட்டின் சார்பில் நிரந்தரப் பிரதிநிதிகளையும் அமர்த்தி நிகழ்வுகளில் பங்களிப்புகளைச் செய்து கொண்டு . இந்த ஆண்டில் மட்டுமன்றி கடந்த இரண்டு ஆண்டு களிலும் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை எதிர்க்க உயர்மட்டக் குழுக்களை அனுப்பி வீராவேசமாகவும், காரசாரமாகவும் வாதப் பிரதிவாதங்களை நடத்தியுள்ளநிலையில், தீர்மானம்நிறைவேறிய தன் பின்னர் அதனை அடியோடு நிராகரித்தி ருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. தீர்மானம் மனிதஉரிமைகள் சபையில் விவாதத்திற்கு எடுக்கப் படுவதற்கு முன்னரும் அந்தத் தீர்மானத்தை தோல்வியடையச்செய்வதற் காக உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் உயர் மட்டதலைவர்களைஅனுப்பி பேரம் பேசுவதில் அல்லது தீர்மானத்தைகைவிடச்செய் வதற்கு அரசு பெரும் முயற்சிகளை எடுத்தி ருந்தது. தீர்மானம் நிறைவேறியதன் பின்னர் எதிர்த்து வாக்களித்த நாடுகளுக்கும் கடந்த முறை களைப் போலன்றி இந்த முறை வாக்களிக்காமல் ஒதுங்கிக் கொண்ட இந்தியா போன்ற வைக்கும் இலங்கை சார்பில் நன்றிகளை அமோகமாக அனுப்பி வைத்தி ருந்தார் இலங்கைத் தலைவர்.

இவ்வளவும் நடந்து முடிந்ததன் பின்னர் தீர்மானத்தை நிராகரிப்பதோ அல்லது தீர்மான வலியுறுத்தல்களை நிறைவேற்ற முடியா தென்றோ வாதிடுவது எந்த வகையில் பொருத்த மாகும் என்ற கேள்வி எழுகிறது.

அதைவிட, எழும் இன்னொரு கேள்வி என்ன வென்றால், ஒரு வேளை தீர்மானம் நிறை வேறாமல் போயிருக்குமானால் நிலைமை எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டிருக்கும் என்பதா கும். அவ்வாறு தோல்வியுற்றிருக்குமானால் நிச்சயமாக அது பெரும் வெற்றி விழாவாகவே கொண்டாடப்பட்டிருக்கும். அதை வைத்தே இன்னும் ஒரு தேர்தலை நடத்தி முடித்தி ருப்பார் கள் அரசு தரப்பினர்.

ஜெனீவாவில் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர் மானத்தின்படி மனித உரிமைகள் ஆணையாளரின் பணிமனைதனக்கு வழங்கப்பட்டுள்ள ஆணைகளை நிறைவேற்றுவதற்குவரும்மே மாதம் அளவில் அல்லது ஜூன் மாதம் தனது பணிகளை ஆரம்பிக்கக் கூடும் என்று செய்திகள் கூறுகின் றன. ஆனால் ஆணையாளர் நவிப்பிள்ளையோ அவரது நாயின் வால் தானும் இலங்கைக்கு வரவிடப் போவதில்லையென்று அடித்துக் கூறி வருகிறார்கள் இலங்கைத் தலைவர்கள்.

நவிப்பிள்ளையை சில அரசுத் தரப்பு ஊடகங்கள் ஆங்கிலக் கதைகளில் வரும் சூனியக்காரி போல் சித்திரிக்கின்றன. நவிப் பிள்ளை வரும் ஓகஸ்ட் மாத மளவில் ஓய்வு பெறவிருப்ப தால் அதற்கு முன்னதாகவே அவர் விடு முறை யில் செல்வார் என்று தெரிகிறது. அதனால் தீர்மானத்தின் அறிவுறுத்தல்களை நிறைவேற் றுவது அவருக்குப் பின்னர் அந்தப் பதவியில் அமர விருப்பவ ரின் பொறுப்பாகவே இருக்கும்.

இலங்கை தொடர்பாக தமக்கு ஆலோசனை கூறுவதற்கென ஐ.நா.செயலாளர் நாயகம் பான்கீ- மூனால் நியமிக்கப்பட்டிருந்த மூவ ரடங்கிய நிபுணர் குழுவின் தலைவராக பணி யாற்றிய தருஸ்மன் புதிய மனித உரிமை ஆணையாளராக நியமிக்கப்படலாம் என்று ஏற்கெனவே செய்திகள் கசிந்துள்ளன.

இலங்கையில் நடந்த போரின்போது 40 ஆயிரம் பேர் வரை பொது மக்கள் கொல் லப்பட் டார்கள் என்ற விவரத்தை இந்த நிபு ணர் குழு வினர் தான் தமது அறிக் கையில் வெளியிட்டி ருந்தார்கள். அந்த அறிக்கை யையும் இலங்கை அரசு முற்றுமுழுதாக நிராகரித்தி ருந்தது.

தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதில்லை. தீர் மானத்தின்படி ஆய்வு நடத்தவரும் மனித உரிமை பணிமனை அதிகாரிகளை இலங் கைக்குள் கால் வைக்கவும் அனுமதிக்கப் போவதில்லையென்று அரசு அறிவித்துள்ள நிலையில் மனித உரிமைகள் சபையினர் தமது கடமைகளை எவ்வாறு நிறைவேற்று வார்கள் என்பது புரியாமல் இருந்தாலும் அவ்வாறான ஒரு நிலையில் இலங்கைக்கு வெளியில் இருந்தே ஆய்வுகளையும் விசார ணைகளையும் நடத்துவார்கள்- நடத்த முடியும் என்ற வகையில் ஐ.நா.வட்டாரங்களில் இருந்தே தகவல்கள் கசிந்துள்ளன.

நிபுணர் குழுவில் உறுப்பினராக இருந்தவரான யஸ்மின் சூகா அண்மையில் வெளியிட்டிருந்த ஓர் அறிக்கையில் மனித உரிமைகள் சபையு டன் இலங்கை ஒத்துழைக்காமல் போவது கடும் விளைவுகளை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டி ருந்தார். அப்படியான ஒரு நிலையில் இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுவதும் சாத்தியமே என்று அவர் கோடிகாட்டியிருந்ததை அரசு கவனத்தில் கொண்டதாகத் தெரிய வில்லை. அதற்கு மேலாக ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ-மூன் மிகத் தெளிவாக ஒரு கருத்தை இலங்கை தொடர்பாக இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்.

ருவாண்டா இனக் கொலைகள் தொடர்பான நினைவு நிகழ்வொன்றில் பேசிய பான்கீ-மூன் பாதுகாத்தலுக்கான பொறுப்பை சர்வதேச சமூகம் இப்பொழுது அங்கீகரித்துள்ளது. கொடூரமான குற்றங்களைப் புரிந்துவிட்டு அவை சர்வதேசம் அக்கறை கொள்ளத் தேவையற்ற உள்நாட்டு விவ காரம் என்று அரசுகள் இனி மேலும் கூறிக்கொண்டி ருக்க முடியாது என்று தெளிவுபடுத்தியுள் ளார். பலஎண்ணிக்கையான நாடு களும் பிராந் திய நிறுவனங்களும் இனக் கொலைகளைத் தவிர்ப்பதற்கான பொறிமுறை களை உருவாக்கி வருகின்றன. குழப்பங்கள் நிகழும் இடங்க ளுக்கு ஐ.நாவும் அதன் பங்காளி அமைப்புக ளும் அடிக்கடி மனித உரிமை கண்காணிப் பாளர்களை நியமித்து வருகின்றன. இதன் கருத்து அரசுகளை யும் அரசு சாரா நிறு வனங்களையும் உலகம் கவனித் துக் கொண் டிருக்கிறது என்பதாகும் என்றார் அவர்.



பான்கீ-மூன் இலங்கை யில் போர் முடிவுற்ற காலத் தையடுத்து இலங்கை வந்து இலங் கையின் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இங்குள்ள இனப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக கூட்டறிக்கை ஒன்றிலும் கைச் சாத்திட்டவர். அவருக்கு இங்குள்ள நிலைமை கள் நன்றாகவே தெரிந்திருக்க வேண்டும். அவர் இலங்கை பற்றிக் குறிப்பிடுகையில்;

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு போர் முடி வுற்ற போது பல பத்தாயிரக் கணக்கான வர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். அந்தக் கட்டத்தில் ஐ.நாவால் முறையாகப் பேசவோ .செயற்படவோ முடியாமற் போயிற்று என்று குறிப்பிட்டுள்ள அவர் இப்பொழுது இந்தச் சம்பவங்களில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களையடுத்து முக்கியமான அடிகளை எடுத்து வைத்து ஐ.நா.செயற்படுகின்றது. தண்டனையில் இருந்து தப்பிக் கொள்வதற்கு எதிராகச் செயற்பட நாம் இப்போது ஒற்றுமைப் பட் டுள்ளோம். அந்த வகையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள் ளது. ருவாண்டாவுக்கான சர்வதேச குற்றவி யல் நடுவர் மன்றம் உட்பட சர்வதேச மற்றும் ஐ.நா. அனுசரணையுடனான நடுவர் மன் றங்கள் பொறுப்புக் கூறலை முன்னெ டுத்து வருகின் றன. அடிப்படை சர்வதேச நியமங்களை அனுசரிக்கத் தவறுகிறவர்கள் மீது முனைப் பான தாக்கங்களை ஏற்ப டுத்து பவையாக வும் இருக்கின்றன. இவ்வாறு ஒரு குறிப்பிடக் கூடிய நிகழ்வாக முன்னாள் அரசுத் தலைவர் ஒருவர் போர்க்குற்றம் புரிந்தார் என்ற வகையில் குற்றவாளியாகக் காணப் பட்டுள்ளார்.

இவ்வாறு பான்கீ-மூன் தெரிவித்துள்ளமை ருவாண்டாவின் நிலைப்பாட்டை வைத்து போர்க் குற்றங்கள் புரிந்துள்ள நாடுகளுக்கு பான்கீ-மூன் எச்சரிக்கை ஒன்றை விடுத் துள்ளார் என்று எடுத்துக் கொள்வதானால் அதில் இலங்கையும் அடங்கும் என்று கூறத் தேவையில்லை. இந்த நிலையில் ஜெனீவா தீர்மானத்தை அடியோடு நிரா கரிக்கும் முடிவை அரசு மறு ஆய்வு செய்வது வரவேற்கத்தக்கது.

---

## தவக்காலச் சிந்தனை

## மனிதருக்காக இறைமகன் பலியான மீட்பின் நாள்

புனித வெள்ளி

உங்களை மீட்க ஒரு மீட்பரை அனுப்புவேன் என்று இறைவன் மனிதனோடு செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைய இயேசு பிறந்து கல்வாரி உச்சியிலே மூன்று ஆணிகளில் மும் மணிநேரம் தொங்கி தம்மையே சிலுவையில் பலியாக்கி எமக்கு விடுதலை தந்த தியாகத்தின் நாளே புனித வெள்ளியாகும். பொய்க் குற்றச்சாட்டுகளும் அதிகார வெறிகளும் பொய்ச்சாட்சிகளும் உண் மையை மௌனிக்க வைத்து அரங்கேற்றிய நாடகத்தில் நீதி ஜெயித்த விடுதலையின் நாளாகும்.

நாம் தலை நிமிர்ந்து இறையரசின் பங்காளராக வேண்டும் என்பதற்காக தம் திருத்தலை கவிழ்ந்து இயேசு மரணித்த தூய நாள் இது. பாஸ்கா செம்மறியான கிறிஸ்து பலியிடப்பட்ட சிலுவையைப் புனித சின்னமாக போற்றி வணங்கத் தொடங்கிய மகிமையின் நாள் இது.

கல்வாரிப் பாதையின் சம்பவங்கள் பல்வேறு முகங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன முப்பது காசுக்காக மாசற்ற இரத்தத்தை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தான் யூதாஸ். பணத் துக்காக, பதவிக்காக தப்பேதும் செய்யாதோரை திட்டமிட்டுக் காட்டிக்கொடுத்து சுகம் தேடும் நவீன யூதாஸு கள் எம்மிடையே இல்லையா? பிலாத்து இந்தப் பழி என்மீது இல்லையென்று கைகழுவி மரணத் தீர்ப்பிட்டு யூதர்களிடம் ஒப்படைத்தான் இயேசுவை. அவனுக்கு அப்படித் தான் நேர வேண்டும். இவனுக்கு இது போதாது... நீ தான் குற்றவாளி... என்று தீர விசாரியாது தீர்ப்பிடும் பிலாத்துக்கள் இன்று இல்லையா? சிரசில் முள்முடி வைத்து அடித்தனர். அவதூறு வீண்பழிகளைச் சுமத்தி சொல் அம்புகளால் பிறரைத் துளைக்கும் பேர் வழிகள் எத்தனை பேர் உள்ளனர். தமது பாவங்களை சிலுவையாக்கி இயேசுவின் தோள் மீது சுமத்தினர். தமது குற்றங்கள், தவறுகள், சுமைகளை பிறர்மீது சுமத்தி நிரபராதி வேஷம் போடுவோர் சமூகத்தில் உலா வரவில்லையா?

அன்று மீட்பரை சிலுவையில் அறைந்துகொல்ல வேண்டும் என்ற கூக்குரல் ஒலித்தது. இன்று நீதிக்கும், உரிமைக்கும், ஒற்றுமைக்கும், இன மத இணக்கத்துக்கும் எதிராக கோஷங்கள் எழுப்பப் படவில்லையா? இயேசுவின் ஆடைகளைக் களைந்து அவமானப்படுத்தினர். வயது வித்தியாசமற்ற துஷ்பிரயோகங்கள் வசை மொழிகள் பொய்ப்பரப்புரைகளால் கற்பு, கௌர வத்தை களைந்து அவமானப்படுத்தும் நிலைகள் எத்தனை? மூவுலகாளும் இறைமகனை மூன்று ஆணிகளால் அறைந்தனர். இறைவனின் சாயலாக மனிதனை குண்டுகளால் துளைத்து அழித்துக் கொண்டிருக்கிறது உலகம். "இறைமகனென்றால் சிலுவையிலிருந்து இறங்கி வா" என்றனர் யூதர்கள். நாம் குற்றவாளிக் கூண்டில் அயலானை ஏற்றவில்லையா? இயேசுவின் இறந்த உடலின் விலாவைக் குத்தித் திறந்தனர். இன்று ஒருவர் இறந்த பின்னர் அவரது பழைய வாழ்வை அலசி ஆராய்ந்து தூற்றும் மனப்பாங்கு நீள்கிறது.

இவ்வாறாக நாம் செயற்படும்போது இயேசுவின் அவமானப்பாடுகளையும், சிலுவை மரணத்தின் கொடுமையையும் மேன்மேலும் அதிகரிப்பதாகவே அமையும். மாறாக கல்வாரிப் பயணத்தில் தடம்பதித்த பல நற்செயல்களை அடியொற்றி வாழ முற்படுவோம். கைது செய்ய வந்தவரின் காது இராயப்பரால் வெட்டப்பட்ட போது அதை மீண்டும் இயேசு பொருத்தியது - பகைவரிடத்திலும் அன்பு காட்டும் செயல். சீரேன் ஊர் சீமோன் சிலுவை சுமக்க உதவியமை பிறர் துன்பத்தில் பங்குகொண்டு உதவும் செயலாகும்.

ஜெருசலேம் மகளிருக்கு இயேசு ஆறுதல் கூறியது எம் துன்பம் தாங்கி பிறர் துயர் துடைக்கும் பண்பாகிறது. திருமுகத்தை வெரோணிக்கா துடைத்த போது துணியில் இயேசுவின் முகம் பதிந்தமை செய்நன்றிக்கு பிரதியுபகாரம் செய்தலாகும். " பிதாவே இவர்கள் அறியாது செய் கிறார்கள் இவர்களை மன்னியும்" என்றமை எதிரியை மன்னித்து அவருக்காக இறை வேண்டல் புரியும் மனப் பக்குவம் 'முற்றும் முடிந்தது' என்று ஆவியை இறைதந்தையிடம் ஒப்படைத்தது. இறைதிட்டத்தின் கருவிகளாக கடமை பொறுப்புணர்வுடன் செயலாற்ற எம்மை அழைக்கிறது. நல்லதும் கெட்டதும் நடைபெற்ற சிலுவைப் பாதையானது துன்பத்தினூடாகவே மகிழ்ச்சி யை யும், விடுதலை வாழ்வையும் அடைய முடியும் என்பதை உணர்த்துகிறது. எமக்காக கிறிஸ்து தன்னுயிரை உவந்தளித்த இந்த நாளில் மனிதத்துக்கு எதிரான செயற் பாடுகளைக் களைந்து இறை விழுமியத்தின் பாதையிலே பயணிப்போம். எமது பாவங்களை மூன்று ஆணிகளுக்குள் அடக்கி விட்டு புதிய மானுடமாக கிறிஸ்துவோடு உயிர்ப்போம்.

*எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** புதியவர்களின் நட்பால் உற்சாகமடைவீர்கள். பழைய பிரச்சினைகளை தீர்ப்பீர்கள். எதிர்பாராத பயணம் உண்டு. வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எதிலும் முன்யோசனையுடன் செயற்படப் பாருங்கள்.



**இடபம்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.



**மிதுனம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்திலுள்ளவர்களிடம் மனம் விட்டுப்பேசுவீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**கடகம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மிகுதிகளை வாங்குவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**சிங்கம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். உறவினர்களால் மனநிம்மதி கிடைக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரச கரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.



**கன்னி:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.



**துலாம்:** முன்கோபத்தை குறையுங்கள். திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்வார்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக்கொள்வது நல்லது.



**விருச்சிகம்:** குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவது நல்லது. வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். வியாபாரத்தில் அவசர முடிவுகள் வேண்டாம். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். எதிலும் கவனமுடன் செயற்படப் பாருங்கள்.



**தனுசு:** நட்பு வட்டாரம் விரிவடையும். உறவினர்களின் வருகையுண்டு. பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.



**மகரம்:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி உண்டாகும்.



**கும்பம்:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வழியில் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.



**மீனம்:** மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப்போனாலும். எதிர்பாராத ஒரு வேலை முடிவுக்கு வரும். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை ஓரளவு குறையும்.

## நாளை

**சித்திரை-06 சனிக்கிழமை | 19.04.2014**

திதி: சதுர்த்தி மு.ப.09.32 வரை
நட்சத்திரம்: கேட்டை
மு.இ.09.27 வரை

சுபநேரம்: 03.02-04.32 வரை
இராகுகாலம்:.09.02-10.32 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



## இந்து நாகரிகம்

ஆபராஹவுஸில், சனிக்கிழமை இரவு போற்றுவதற்குரிய இந்துத் துறவி செய்த சொற்பொழிவு மிகவும் நன்றாக இருந்தது. அவர் ஒப்பியல் மொழி நூலின் (Comparative Philology) மூலமாக ஆரியர்களுக்கும் நவீன உலகில் உள்ள அவரது வழி முறையினருக்கும் உள்ள உறவை ஒப்புநோக்கு மொழி மூலம் நிலை நாட்ட விரும்பினார். மக்களில் முக்கால் பகுதியினரை அடிமைத் தனத்தில் வைத்திருக்கும் இந்தியாவின் ஜாதி முறைமையைப் பொறுமையுடன் ஆதரித்துப் பேசினார். பல நூற்றாண்டுகளாக உலகில் சில நாடுகள் எரி நட்சத்திரம் போல வானத்தில் தோன்றி, உடனே மறைந்ததை இன்றைய இந்தியா கண்டது என்று பெருமைப்பட்டுக் கொண்டார். மக்களைப் போலவே அவரும் கடந்த காலத்தை விரும்புகின்றார். அவர் தமக்கென வாழாமல், இறைவனுக்காக வாழ்கிறார். சொற்பொழிவில் விளக்கமாகக் கூறப்படாவிட்டாலும் அவரது நாட்டில் பிச்சைக்காரர்களுக்கும் யாத்திரிகர்களுக்கும் நன்கொடை தருவதுண்டு. உணவு தயாரானதும் வழிப் போக்கனுக்கு அளிப்பதற்காகக் காத்திருப்பார்கள். பிறகு விலங்கு களுக்கும், அதன் பிறகு வேலைக்காரர் களுக்கும் உணவளித்துவிட்டு, குடும்பத் தலைவன் உண்பான்; கடைசியில் தான் குடும்பப் பெண் உண்பாள். பத்து வயதான சிறுவர்களை குருமார்கள் அழைத்துச் சென்று தங்களிடமே பத்து அல்லது இருபது ஆண்டுகள் வைத்துக் கொண்டு கற்பிப்பார்கள். கற்ற பிறகு அவர்கள் குலத் தொழிலை மேற் கொள்ள அனுப்பப்படுவார்கள்; சிலர் உபதேசித்தும், பிரார்த்தித்தும் முடிவின்றி அலைந்து திரிந்து தங்களுக்குக் கிடைத்த உணவை உண்டு உடையை உடுத்தி, பணத்தை ஒரு போதும் தொடாமலேயே வாழ்வார்கள். விவேகானந்தர் பின்னால் கூறப்பட்ட தரத்தைச் சேர்ந்தவர். முதுமையை நெருங்கிக் கொண்டு இருப்பவர்கள் உலகிலிருந்து விலகி, கற்பதற்கும் பிரார்த்தனைக்கும் உரிய காலம் முடிந்த பிறகு, தாங்கள் தூய்மை ஆகி விட்டதாக எண்ணினால், முன் வந்து உபதேசங்களைப் பரப்புவதில் முனைவார்கள். அவர், அறிவு வளர்ச்சிக்கு ஓய்வு தேவை என்றார். மேலும், கொலம்பஸ் கண்டறிந்த காட்டுத் தன்மையிலிருந்த இந்தியர்களுக்குக் கல்வியறிவு அளிக்காததற்காக அமெரிக்கர்களை இகழ்ந்தார். இதில் அவர் இங்குள்ள சூழ்நிலையைப் பற்றிய தமது அறிவுக் குறைவை வெளிப்படுத்திக் கொண்டார். அவரது சொற்பொழிவு வருந்தத்தக்க விதத்தில் மிகச் சுருக்கமாக இருந்தது; அவர் கூறியதை விட முக்கியமான பல செய்திகள் கூறாமலே விடப்பட்டுள்ளன.

# செயற்கைக் கல்லீரலை உருவாக்க இந்திய விஞ்ஞானிகள் முயற்சி

சிறுநீரக நோயாளிகளிக்கு அவர்களின் சிறுநீரகத்தை சுத்திகரிப்பதன் மூலம் இடைக்கால நிவாரணம் கிடைக்கச் செய்யப்படுகிறது.

இதேபோல் புதுடில்லியில் உள்ள கல்லீரல் மற்றும் பித்த நாளம் அறிவியல் நிறுவனம் கல்லீரல் செயலிழப்பு நோயாளிகளுக்கு இதே முறையில் ஓர் இடைக்கால நிவாரணம் அளித்து வருகின்றது.

அதுமட்டுமன்றி, இதே முறையைப் பயன்படுத்தி கல்லீரலின் பணிகள் அனைத்தையும் செய்யும்படியான ஒரு செயற்கைக் கல்லீரலையும் உருவாக்க அவர்கள் முயன்று வருகின்றனர்.

டயாலிசிஸ் முறையில் இரத்தத்தில் உள்ள அசுத்தங்கள் மட்டுமே நீக்கப்பட முடியும். ஆனால் கல்லீரலின் செயற்பாடோ இரத்தத்தில் குளுக்கோசின் அளவைப் பராமரிப்பது, கொழுப்பின் அளவைக் கண்காணிக்கும் பித்த அமிலங்களைச் செயற்கை முறையில் இணைப்பது, இரத்த உறைவுக்குத் தேவையான புரதங்களை உருவாக்குவது போன்று பல வகைப்பட்டதாகும். எனவே கல்லீரலின் அனைத்துப் பணிகளையும் செய்யும் வகையில் ஒரு மாற்று உறுப்பைத் தயாரிப்பதே நோயாளிகளுக்கு நிவாரணத்தை அளிக்கும் செயலாக இருக்கும் என்று இந்த நிலையத்தின் இயக்குநர் மருத்துவர் எஸ்.கே.சரின் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக இதில் ஈடுபட்டு வரும்போதும் சிறிதளவு முன்னேற்றத்தையே காண முடிந்துள்ளது என்று கூறும் அவர் உலகளவில் பல முயற்சிகள் நடைபெற்றுவரும்போதும் இன்னமும் பெரிய திருப்புமுனை ஏற்படவில்லை என்று குறிப்பிடுகின்றார். ஐ. ஐ.டி. கான்பூர் ஆராய்ச்சியாளர்களும் இதன் ஒரு பிரிவில் பணிபுரிந்து வருவதாக சரின் கூறினார்.

ஆண்டுதோறும் இந்தியாவில் கல்லீரல் செயலிழப்பினால் ஒரு லட்சம் பேர் இறக்கின்றனர். இதற்கான கொடையாளிகளும் குறைவாக இருக்கும் நிலையில் குறைந்தபட்சம் 1000 பேராவது இந்த சுத்திகரிப்பு முறையில் இடைக்கால நிவாரணம் பெறுகின்றனர் என்று மருத்துவத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

# சுடோக்கு

## எண் விளையாட்டு


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | | | | | 9 | 4 | 7 |
| | 7 | | 1 | 4 | 5 | 2 | | |
| 3 | 4 | | 7 | | 6 | | | |
| | 6 | 1 | | | | | | |
| 4 | | | 6 | | 8 | | | 5 |
| | | | | | | 4 | 3 | |
| | | | 3 | | 9 | | 7 | 8 |
| | | 7 | 4 | 1 | 2 | | 5 | |
| 9 | 3 | 5 | | | | | 2 | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 7 | 3 | 8 | 6 | 2 | 9 | 1 |
| 3 | 6 | 2 | 1 | 5 | 9 | 7 | 8 | 4 |
| 9 | 8 | 1 | 7 | 2 | 4 | 3 | 6 | 5 |
| 2 | 3 | 4 | 9 | 6 | 7 | 5 | 1 | 8 |
| 1 | 5 | 9 | 2 | 3 | 8 | 6 | 4 | 7 |
| 6 | 7 | 8 | 4 | 1 | 5 | 9 | 2 | 3 |
| 4 | 1 | 5 | 6 | 9 | 3 | 8 | 7 | 2 |
| 8 | 2 | 6 | 5 | 7 | 1 | 4 | 3 | 9 |
| 7 | 9 | 3 | 8 | 4 | 2 | 1 | 5 | 6 |


# கார்ட்டூன் கதாபாத்திரங்களை வடிவமைக்க உதவும் மென்பொருள்




நீங்கள் விரும்பும் கார்ட்டூன் கதாபாத்திரங்களை சுயமாகவும், இலகுவாகவும் வடிவமைத்துக்கொள்ள MomentCam எனும் மென்பொருள் பெரிதும் உதவிகரமாக இருக்கின்றது.

அன்ரோயிட் மற்றும் ஐ.எஸ்.ஓ.சாதனங்களில் பயன்படுத்தக்கூடிய இந்தமென்பொருளின் உதவியுடன் புகைப்படங்களையும் கார்ட்டூன் வடிவத்துக்கு மாற்றிக் கொள்ளும் வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

மேலும் இந்த மென்பொருள் 52.8MB கோப்பு அளவுடையதாகக் காணப்படுவதுடன், கார்ட்டூன் உருவங்களுக்கு அனிமேஷன் கொடுக்கும் வசதியையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உடலியல் இயக்கங்களை ஆராயும் புதிய இலத்திரனியல் சிப் உருவாக்கம்

தோலினுள் பொருத்தி உடலியல் இயக்கங்களை ஆராயக்கூடிய புதிய இலத்திரனியல் சிப் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சிக்காகோவில் அமைந்துள்ள North western பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த John A. Rogers என்பவரது தலைமையில் இயங்கும் குழு ஒன்றே இந்த சிப் ஐ உருவாக்கி யுள்ளது.

பிளாஸ்ரிக், சிலிக்கன் என்பவற்றினை ஒன்றாக இணைத்து உருவாக்கப்பட்டுள்ள இந்த சிப் உடலினுள் அசைந்து செல்லக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

# Titan Aerospace நிறுவனத்தை வாங்குவதில் ஆர்வம் காட்டும் கூகுள்




சோலர் படலத்தில் இயங்கக்கூடிய சிறிய ரக விமானங்களை Titan Aerospace என்ற நிறுவனம் வடிவமைத்து வருகின்றது.

இந்நிறுவனத்தை பேஸ்புக் நிறுவனம் வாங்கவுள்ளதாக சில வாரங்களுக்கு முன்னர் செய்தி வெளியாகியிருந்தது.

இந்தநிலையில் கூகுள் நிறுவனமும் இந்த நிறுவனத்தை வாங்குவதற்கு ஆர்வமாக உள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகி யுள்ளன.

இதேவேளை பேஸ்புக் நிறுவனம் 60 மில்லியன் டொலர்கள் செலுத்தி இந்நிறுவனத்தை வாங்க முனைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த நிறுவனத்தை வாங்குவது தொடர்பில் கூகுள் எவ்விதமான உத்தியோகபூர்வ தகவல் களையும் இதுவரையில் வெளியிடவில்லை.



# நீண்ட காலத்தின் பின்னர் விற்பனைக்கு வந்த கூகுள் கிளாஸ்

தொழில்நுட்ப உலகில் புதிய புரட்சியை ஏற்படுத்திய கூகுள் கிளாஸ்தன்னகத்தேபல்வேறுதிறன்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

பார்க்கும் போது சாதாரணமான கண்ணாடியாகத் தோன்றினாலும், உலகைச்சுற்றி வர ஏதுவான வசதி பெற்றுள்ள இதில் எப்போது வேண்டுமானாலும் மின்னஞ்சல், டுவிட்டர் என அனைத்து இணையத்தளத்திலும் இணைந்திருக்க உதவியாக இணையத்துடன் இதன் வலப்பக்கம் சிறிய திரையையும் பெற்றுள்ளது.

எனினும் நீண்ட காலமாகப் பொது மக்களின் பாவனைக்காகவும், பொது நோக்கத்துக்காகவும் இந்தச் சாதனம் விற்பனை செய்யப்படவில்லை.

ஆனால் சில தினங்களுக்கு முன்னர் மட்டும் இச்சாதனம் பொது நோக்கத்துக்காகவும், பொதுமக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

இதன் விலையானது 1500 டொலர்களாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சுயமாகவே படமெடுக்கும் தொழில்நுட்பம் அறிமுகம்



தம்மைச் சுயமாகவே ஒவ்வொருவரும் புகைப்படம் எடுக்கக்கூடிய முகம் பார்க்கும் கண்ணாடிகளை iStrategy லேப் அறிமுகம் செய்துள்ளது.

SELFIE Mirror என்ற இத்தொழில்நுட்பமானது சுயமாகவே ஒருவரது முகத்தை அடையாளம் காணக்கூடியவாறும், அவரது சிரிப்பை அடையாளம் கண்டு புகைப்படம் எடுக்கக்கூடியவாறும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் உட்பகுதியினுள் Apple Mac Mini சாதனம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# விண்டோஸ் கைபேசி 8.1 இயங்குதளம் வெளியீடு



மைக்ரோசொப்ட்நிறுவனம்மொபைல் சாதனங்களுக்காக வடிவமைத்து வந்த விண்டோஸ் கைபேசி 8.1 இயங்குதளத்தை அறிமுகம் செய்துள்ளது.

விண்டோஸ் கைபேசி 8 இயங்குதளம் மொபைல் சாதன பாவனையாளர்களை வெகுவாகக் கவர்ந்துள்ள நிலையில் மேம்படுத்தப்பட்ட பயனர் இடைமுகம் மற்றும் சில புதிய வசதிகள் உள்ளடங்கலாக விண்டோஸ் கைபேசி 8.1 வெளியிடப்பட்டுள்ளது.

Action Center, Custom Lock Screen போன்ற புதிய வசதிகளை உள்ளடக்கிய இந்த இயங்குதளம் தொடர்பாகக் காணொலி வெளியிடப் பட்டுள்ளது.



## கல்வியியற் கல்லூரி தேசிய டிப்ளோமா இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்.18
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தற்போது உள்ளகப் பயிற்சியை மேற்கொண்டு வரும் முகிழ் நிலை ஆசிரியர்களுக்கான கற்பித்தலில் தேசிய டிப்ளோமாவுக்கான இறுதிப் பரீட்சை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 23 ஆம் திக்தி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகளை எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கல்லூரியின் பீடாதிபதியிடம் இருந்து பெற்றுக்கொள் ளு மாறும், எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் தொடக்கம் பரீட்சை இறுதி நாள் வரையான காலப் பகுதியில் கல்லூரியில் தங்குவதற்கான ஏற்பாடு களுடன் வருகை தருமாறும் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ)

## மீண்டும் தலைதூக்கியது நெடுந்தீவில் குதிரை கடத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.18
நீண்ட நாள்களின் பின்னர், நெடுந்தீவில் இருந்து குதிரைகளை இரகசியமாகக் கடத்திச் சென்று வெளியிடங்களில் விற்பனை செய்யும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கடத்தலில்ஈடுபட்ட இருவர் ஞாயிற்றுக் கிழமை பொலி ஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நெடுந்தீவு வரலாற்றில் குதிரைகள் ஒரு விசேட அடையாளம் என்பதால் அவற்றை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வது 1975 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து முழுமையாகத் தடை செய்யப்பட்டிருந்தது. அதன்பின்னர் குதிரைகளை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை இருந்த போதும் மேலிடத்தின் ஆதரவுடன் சில குதிரைகள் ஏற்கெனவே வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டதும் உண்டு. எனினும் கடந்த சில வருடங்களாகக் குதிரைகளைக் கடத்திச் செல் லும் சம்பவங்கள் இடம் பெற் றதாக இல்லை.

தற்போது மீண்டும் குதிரைகள் கடத்தல் இடம்பெறத் தொடங்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். (வ-7)

## இன்று மாலைப் பொழுதில் நல்லூரில் அருளுரை

யாழ்ப்பாணம்,ஏப்.18
நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ் வரன் மணி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணியிலிருந்து 7.30 மணி வரை 'குருதத்துவம்' என்ற கருப் பொருளிலான அருளு ரையும் 15 நிமிடங்களுக்கு அது தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கமளிப்பும் யாழ்ப்பாணம்சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார்பிரம்மச்சாரிஜாக்ரதசைதன்யா சுவாமிகளால் நடத்தப்படவுள்ளது. (ஓ)

## சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஏப்.18
2013 டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இந்தப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**கொடிகாமம் திருநாவுக்கரசு ம.க.**
பா.சர்மிளா-8ஏஎஸ், சி.சாதனா -8ஏஎஸ், ப.சுபேந்தி-7ஏசிஎஸ், வி.கார்த்திகாயினி- 6ஏ2பிசி, நா.மதிவேணி-6ஏ2பிசி, அ.அஜித்-6ஏபிசி, பா.கஜேந்தினி-3ஏபி3சி2எஸ்.

**ஒட்டுசுட்டான் ம.வி.**
ஸ்ரீவன் செலாதேவி- 5ஏ3பிஎஸ், ஆர்.யதுஷா-4ஏ3பிசி, ஏ.கதுஷன்-3ஏ4பிசி, எஸ்.யசிந்தன்-3ஏ3பி2சி, ஆர்.கிரிசா-3ஏபி3சி, எப்.அலக்ஸ்-3சி5எஸ், பி.அரவிந்-பி3சி4எஸ், என்.டிலக்ஸன்-3ஏ4சி2எஸ், உ.டினேஸ்-ஏபி3சி3எஸ், ஆர்.ஜத்மிகன்-ஏ3சி4எஸ், கே.யசிந்தன்-ஏபி6சி, பி.கம்சன்-ஏ5சி2எஸ், எஸ்.கனிஸ்ரன்- ஏசி4எஸ், எஸ்.கிரிசாந்தன்-பி3சி4எஸ், த.பிரதீபன்-பி.சி6எஸ், எஸ்.எம்.ஜனிதரன்-ஏபி5சி3எஸ், ஜே.சிவதர்சன்-3சி5எஸ், எஸ்.சிறிஜனார்த்தன்-ஏ3சி4எஸ், கே.உதயதர்மன்-ஏபி2சி3எஸ், பி.விதுசா-பி2சி5எஸ், ஏ.டெல்கி- பி3சி5எஸ், ஜே.எழிலருவி -2ஏ4சி2எஸ், ந.கஜனி-ஏ3சி3எஸ், ஆர்.கலையரசி-ஏபி2சி3எஸ், ந.கவிப்பிரியா- 2ஏ2பி2சி2எஸ், ஆர்.கார்த்திகா-ஏ.பி.சி.3எஸ், ஜி.நிரோசா- பி4சிஎஸ், ஆர்.மதிவதனி- 2ஏ2பி2சிஎஸ், என்.மதுஷா- ஏ2சி3எஸ், எஸ்.பிரியங்கா- ஏ3சி3எஸ், கே.சுகன்யா-ஏ2சி3எஸ், என்.சுபாஜினி- ஏ2 சி3எஸ், கே.தனுசியா- ஏபி4 சி2எஸ், ஆர்.விக்திகா- ஏ2பிசி 4எஸ்.

**புலோலி ம.வி**
ந.தினேஸ்- 6ஏ2பிசி, க.பிரகாசினி-4ஏ2பிசி2எஸ், ம.நூர்ஜிதா-4ஏ2பி2சிஎஸ், சா.றெக்சன்-3ஏ3பி2சிஎஸ், யோ.சுகைதன்-3ஏ2பி3சிஎஸ், யோ.சுதர்சன்-2ஏபி3சி3எஸ் ச. சாமினி-2ஏ3பி2சி2எஸ், த.குகாஜெனன்-ஏ4பி2 சி2எஸ், ச.சாளினி- 2ஏ2சி4எஸ், சா.பிரதீபன்-ஏபி4சி2எஸ், ம.வவிலரூபன்-ஏபி2சி5எஸ், செ.மிதுஷா-ஏபிசி5எஸ், க.கபீஷன்-ஏ4சி3எஸ், க.ரமணகரசர்மா-ஏ3சி5எஸ், நி.டிலக்ஷன்-ஏ3சி4எஸ், ம.பாபாகரன்-ஏ2சி5எஸ், சி.கிருஷிகேசன்-ஏ2சி4எஸ்.

**மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை**
ஆங்கில மொழி மூலம்
யோ.பிரசாந்தன்-8ஏபி, ஜெ.ஜெனார் தனன்-7ஏபிசி, தி.வோஜினி-6ஏபி2சி, அ.அகலஜன்-4ஏ4சிஎஸ், தே.தனுஜன்-3ஏபி3சி2எஸ், வி.துவாரகன்-4ஏ4பிஎஸ், அ.அனித்தா-ஏ4பிசி2எஸ், உ.பிரவீ[illegible] -ஏபி5சி2எஸ், ந.லக்சாயினி-2ஏ5சி2எஸ். (ஓ-9-14-500)


## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**செல்லத்துரை செல்வராசா**



தோற்றம்
02.03.1955

மறைவு
05.04.2014

கடந்த 05.04.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லத்துரை செல்வராசா அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.04.2014) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு சுப்பர்மடம் தெணியம் மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று, 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தும்பளை வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.
சுரேஷ் (மகன் -தவில்)
(43504)(5.6.3)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்
15
05
1947

விண்ணில்
20
03
2014

கடந்த 20.03.2014 வியாழக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்
**கணபதிப்பிள்ளை நடராஜா**
(கேசி)
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.04.2014)வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவிண்டில்,
கரணவாய் வடக்கு.
கரவெட்டி. (43503)(5.6.3)

மனைவி
077 987 1379



## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்
30.03.1955

மறைவு
28.04.2013

திதி: சித்திரைத் திங்கள் அபரபக்க திருதியை

அமரர்
**சுப்பிரமணியம் குணரத்தினம்**

தூர இடம் போனால் தேடிவந்து காண்போம்
பாரை விட்டுப் போனால்...............???

நிலாவரை (46856)(12.3.6) குடும்பத்தினர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**அப்பாப்பிள்ளை குருசாமி**
(தியாகராஜா)
(புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியா, மகாறம்பைக்குளம் மதுரை வீரனில் வசித்தவர்)



தோற்றம்
02.09.1927

மறைவு
19.03.2014

கடந்த (19.03.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்த அப்பாப்பிள்ளை குருசாமி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(18.04.2014) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.04,மதுரைவீரன்,
மகாறம்பைக்குளம், வவுனியா. (46852)(5.6.3)

பேரன் குகனேஸ்வரன்
(ஜேர்மனி)



## நீங்கா நினைவலைகள்

முதலாம் ஆண்டு



தாயின் மடியில்
09.03.1977

ஆண்டவன் அடியில்
29.04.2013

**அமரர் சி.சிவரூபன் (ரூபன்)**

உற்றவர் பெற்றோர் ஊரார் அனைவருக்கும்
பண்பான பிள்ளையாய் பாசமிக்க உறவினனாய்
நண்பர்கள் அனைவருக்கும் நெருங்கிய தோழனாயும்
அன்புப் பிள்ளைகளுக்கு ஆசை அப்பாவுமாய்
வாழ்ந்து முடித்துவிட்டாய்! இடை நடுவில் எமைப் பிரிந்த
உந்தன் நினைவுகளை என்றென்றும் இதயத்தில்
சுமந்திருப்போம். இது உறுதி

31 ஆம் நாள்



பிறப்பு
16.08.1926

இறப்பு
19.03.2014

**திருமதி தங்கம்மா தம்பையா**

எத்தனை காலந்தான் ஓடி மறைந்தாலும்
எங்களை வளர்த்தெடுத்தெடுத்து வாழ்வில் வளம் பெற வைத்திட்ட
உம் இழப்பெமக்குப் பேரிழப்பு, இது உண்மை.
பேரனின் மறைவின் வலி உமை உருக்கி வைத்ததுவே
உங்கள் ஆத்மா அரன் அடியில் சாந்திபெற
அவன் பாதம் பணிகின்றோம்

எமது குடும்பத்தின் ஒளி விளக்குகளாய் வாழ்ந்து எம்மையெல்லாம் மகிழ்வில் திளைக்க வைத்து எதிர்பாரா வேளையில் துன்பக் கடலில் மூழ்க வைத்து எமைப் பிரிந்த எங்கள் உயிரின் உயிராம் உறவுகளின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

உங்கள் நினைவுடன் வாழும் குடும்பத்தினர்.
(C/13649)(2.6.3)



## 31ஆம் நாள் நினைவு



தோற்றம்
26-11-1948

மறைவு
19-03-2014

**திருமதி இந்திராதேவி பரமராசா**

கனவாகிப் போனதெல்லாம் வெறும் உடலம்தான்
நினைவுகளில் வாழ்வாய் என்றும் நீங்களம்மா
மனவானில் வாழும் தெய்வமம்மா -நாம்
மலர் தூவி அஞ்சலித்தோம் அமைதி கொள்க!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பொற் தொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (A/13647)(5.6.3)

குடும்பத்தினர்.

# நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பு

*மத்திய வங்கி அறிக்கையில் தகவல்*

கொழும்பு.ஏப்.18
இலங்கையில் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
இலங்கையில் கடந்த வருடம் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.
தரம் 5 முதல் 9 ஆம் வகுப்பு வரை படித்தவர்கள் மற்றும் உயர்தரம் வரை மாத்திரம் படித்தவர்கள் மத்தியில் தொழில் வாய்ப்பின்மை அதிகரித்துள்ளது. எனினும் சாதாரண தரம் வரை படித்தவர்கள் மத்தியில் இந்தப் பிரச்சினை குறைந்து காணப்படுகிறது.
உயர்தரம் மற்றும் அதனையும் தாண்டி மேல் படிப்பு படித்தவர்கள் மத்தியில் காணப்படும் தொழில் வாய்ப்பின்மைப் பிரச்சினையானது மிகவும் பாரதூரமான பிரச்சினையாகும். அதனால் நாட்டின் உயர் கல்வியை இன்றைய தொழில் வர்த்தக சந்தைக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கவேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இறை வழிபாட்டில் வெற்றிலை

வெற்றிலையில் மகாலக்ஷ்மி ஆவாகணம் செய்வதாகக் கூறுவர். இருந்த போதும் வெற்றிலையின் மேற்புறத்தில் இலக்குமிதேவியும், மத்தியில் சரஸ்வதிதேவியும் காம்பில் மூதேவியும் இருப்பதாக ஓர் கருத்து உண்டு.
அறிவாற்றலையும், திறனையும் எமக்குத் தருபவர் புதன். புதனுக்குப் பிரியமான பொருள்களில் ஒன்று வெற்றிலையாகும். புதனின் அருட்கடாட்சம் எமக்குக் கிடைத்து அறிவாற்றலைப் பெருக்கிக் கொள்வதற்கு புதனுக்குப் பிரியமான வெற்றிலைக்கு நாம் மதிப்பளித்தல் வேண்டும்.
இறைவனுக்கு வெற்றிலை, பாக்கு நிவேதனம் செய்வதன் மூலம் தீமைகள் விலகி வாழ்வில் நன்மைகள் உண்டாகும் என்பது இந்துக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. அம்பாளுக்கு கருமை நிறங்கொண்ட வெற்றிலை மிகவும் பிரியமானது. எனவே இவ்வகையான வெற்றிலையை அம்பாளுக்கு நிவேதனம் செய்வதன் மூலம் அம்பாளிடமிருந்து இஷ்ட சித்திகளைப் பெறமுடியும்.
பொதுவாக இறைவனுக்கு நிவேதனம் செய்யும்போது வெற்றிலையுடன் சுண்ணாம்பு சேர்ப்பதில்லை. ஆனால் வட இந்தியாவில் அம்பிகைக்கு நிவேதனப் பொருளாக சுண்ணாம்பு வைத்த பீடாவும் வழங்கப்படுகிறது.

ஞானக்கதிர்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ருக்குமணிதேவி பாலராமன்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ருக்குமணிதேவி பாலராமன் நேற்று (17.04.2014) வியாழக் கிழமைகாலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலராமனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மாதவன் (Ecowawe, Colombo) சீராளன் (Peoples bank, Kaithady) ஆகியோரின் அன்புத் தாயும், பபிதாவின் (DFCC, Vardana Bank, Neliyady) அன்பு மாமியும், சறோஜினிதேவி, லீலாதேவி, காலஞ்சென்றவர்களான இசைஞானி, யோகாம்பிகை மற்றும் குமாரசாமி காலஞ்சென்றவர்களான போதராணி, கமலாதேவி மற்றும் போதரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், ஆலாலசுந்தரம் மற்றும் சுந்தரலிங்கம், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் குமுதினி, மகேந்திரன், பத்மநாதன், தணிகை, காலஞ்சென்றவர்களான தேவகி, பாலசுப்ரமணியம் மற்றும் குணவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.04.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.09.30 மணியளவில் தகனக் கிரியை களுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 923 7739

இல.556, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (46864)(12)(3.6)

## செல்லத்துரை அருமைநாயகம் (அரியம்)

(முன்னாள் ஊழியர் - கே.கே.எஸ். சிமெந்து கூட்டுத்தாபனம், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்)



வீரபத்திரர் கோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அருமைநாயகம் (அரியம்) நேற்று (17.04.2014) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - புஸ்பம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெகராஜலட்சுமியின் அன்புக் கணவரும், இரத்தினம், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, அன்னபாக்கியம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான பற்குணம் (ஓய்வுபெற்ற அதிபர்) - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், செல்வலட்சுமி, செல்லம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), செல்வமலர், செல்வராணி, செல்வநாயகம் (நிதி உதவியாளர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), செல்வேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும், முருகதாஸ் (வைத்திய கலாநிதி, கொறணை), முத்துநாயகம் (ஓய்வு பெற்ற கணக்காளர் S.L.S.T.E, கொழும்பு), சிவபாலரத்தினம் (முன்னாள் ஊழியர் தெ.ப. நோ.கூ.சங்கம்), சோமசேகரம் (முன்னாள் ஊழியர் மஸ்கன்ஸ் Ltd), நவரட்ணராஜா (ஓய்வுபெற்ற லிகிதர், பலாலி ஆசிரியர் கலாசாலை), திருமதி பரமேஸ்வரி (அதிபர், கைதடி குருசாமி வித்தியாலயம்), காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் ராஜன் (லண்டன்), விஜயலட்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியர், இளவாலை), இரட்ணலட்சுமி (லண்டன்), விஸ்வகுமார் (லண்டன்), ஈஸ்வரகுமார் (லண்டன்), ரட்ணகுமார் (லண்டன்), சத்தியலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராஜகுமார் (கனடா), ராஜமோகன் (சவுதி), இராஜரஜனி, பரமராஜா (கொழும்பு), பத்மராஜா (லண்டன்), கார்த்திகா (லண்டன்), சிவசுதன் (கொமர்ஷல் வங்கி, திருநெல்வேலி), சிவபரன் (NSB மானிப்பாய்), சிவகாந்தன் (நொக்கியா ஏஜன்ட்), கரிதாஸ் (ஏற்றுமதி இறக்குமதி ஸ்தாபனம், கொழும்பு), செந்தூரன் (கால் நடை வைத்திய நிலையம், திருநெல் வேலி) ஆகியோரின் அன்பு மாமனும், தாட்சாயினியின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நீதிமன்ற வீதி, மல்லாகம், பிரதேச சபைக்கு அருகிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
நீதிமன்ற வீதி, மல்லாகம். (C/13654) (2.3.6) குடும்பத்தினர்.

# சமூகவிரோதிகளை பாதுகாக்கிறது அரசு

*அர்ஜூன ரணதுங்க குற்றச்சாட்டு*



அர்ஜூன ரணதுங்க

கொழும்பு.ஏப்.18
சமூக விரோதிகளை அரசு பாதுகாத்து வருகிறது. நாட்டின் அரசியல்வாதிகள் பேசும் கீழ்த்தரமான பேச்சுக்களால் நாட்டுக்கும் நாட்டின் அரசியலுக்கும் சர்வதேசத்தில் பெரும் தலைகுனிவு ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்தார்.
களுத்துறை, அகலவத்தை பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறி னார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் உள்ள பல அரசியல்வாதிகளுக்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கு படிப்படியாகக் குறைவடைந்து வருகிறது.
மக்கள் நாளுக்கு நாள் அரசியல்வாதிகளை நிராகரித்து வருகின்றனர்: எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்: தகுதியானவர்கள் அரசியலுக்கு வராததே இதற்குக் காரணம்.
முன்னர் அரசியலுக்கு வந்தவர்கள் தம்முடைய சொந்தப் பணத்தைக் கூட சமூகத்தின் அபிவிருத்திக்காகச் செலவிட்டனர். அன்று பணமும், சொத்துக்களும் இல்லாதவர்கள் நாடாளுமன்றத்துக்கு வரும் சந்தர்ப்பம் இருந்தது.
நாட்டுக்கு சிறந்த சேவையை வழங்கக் கூடிய புத்திசாலிகளை மக்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்தனர்.
எனினும் இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.
அரச வேட்பாளராக ஒருவர் தேர்தலில் போட்டியிட வேண்டுமாயின் அவர் வன்முறையாளராகவும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவராகவும் வெட்கமும், அச்சமும் இன்றி சட்ட விரோதமாக பணத்தை உழைத்தவராகவும் இருக்க வேண்டும்.
இந்த தகுதிகள் இருந்தால் அரச வேட்பாளராக தேர்தலில் போட்டியிட முடியும். முட்டாள் அரசியல்வாதிகளை அரசு தொடர்ந்து பாதுகாத்து வருவதுடன் அவர்களது செயற்பாடுகளை ஆசிர்வதித்தும் வருகிறது- என்றார். (ச)

## ஞான வீரம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்.ஏப்.18
கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு 'ஞான வீரம்' நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கலந்து கொள்வார்.
விசேட விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், நல்லூர்பிரதேச சபைத்தலைவர் ப.வசந்தகுமார், யாழ்.வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

# மரண அறிவித்தல்

## அப்பாத்துரை இரத்தினசிங்கம்

(இளைப்பாறிய சாலை பரிசோதகர், இலங்கை போக்குவரத்துச்சபை)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை இரத்தினசிங்கம் 17.04.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - கண்மணி தம்பதியினரின் புதல்வனும், Dr.கனகசிங்கம் -கமலாசணி தம்பதியினரின் மருமகனும், லோகநாயகியின் (ஓய்வு பெற்ற நூலகர்) அன்புக் கணவரும், கௌசிகா(முகாமை உதவியாளர், காணி நிர்வாக திணைக்களம்), துஷீந்திரா(சிறுவர் நன்நடத்தை பராமரிப்புத்திணைக்களம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்றவர்களான தையல் நாயகி ஆறுமுகம், சின்னத்துரை, சதாசிவம், குணபதி, புண்ணியசிங்கம், இராஜேஸ்வரி மற்றும் குணநாயகி, சண்முகசுந்தரம், சண்முகநாதன், வரதலட்சுமி குலேந்திரன், பத்மேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கருணநாயகி விமலராசா, Dr.கமலநாயகி, வஸ்ரியாம்பிள்ளை, பரமானந்தம் ஆகியோரின் மைத்துனரும், ஹரிதாஸ், பிறேமதாஸ், குணதாஸ் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.04.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
9, புறாபிறுவ் ஒழுங்கை, அரியாலை. (46855) (4.6.3) குடும்பத்தினர்.

# குடும்பத் தொழிலாக அரசியலை மாற்ற அரசு முயற்சி

*மங்கள குற்றச்சாட்டு*

அரசு அரசியலை குடும்பத் தொழிலாக மேற்கொள்ள தயாராகி வருகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச அமைச்சர்கள் தமது பிள்ளைகள், மனைவிமார் உட்பட முழுக் குடும்பத்தையும் அரசியலுக்கு கொண்டு வர முயற்சித்து வருகின்றனர்.

எனது தந்தை ஓர் அரசியல்வாதியாக இருந்தாலும் அவர் காலமாகி 30 வருடங்களுக்கு பின்னரே நான் அரசியலுக்குவந்தேன். ஆனால் ராஜபக்ஷ அரசு, பெரியவர்கள் உயிருடன் இருக்கும் போதே சிறியவர்களை அரசியலுக்கு இழுத்து வருகின்றது. அரச தரப்பு அரசியல்வாதிகள் அரசியலைக் குடும்பத் தொழிலாகச் செய்ய முயற்சித்து வருகின்றனர்- என்றார். (ச)


## சீட்டிழுப்பு திகதி பிற்போடல்

யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தால் 16.04.2014இல் நடத்த இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 15.05.2014இல் நடைபெறும் என்பதை யாழ் மாவட்ட கூடைப் பந்தாட்ட சங்கம் சார்பாக தெரியப்படுத்துகின்றேன்.

*Secretary*
BASKETBALL ASSOCIATION
JAFFNA DISTRICT (46871) (7.6.3)

## காணி விற்பனைக்கு


கரந்தன் சந்திக்கருகில் 3½ பரப்பு வாழைத்தோட்டத்துடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 1102210

## விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட உயர்ரக பஞ்சமுக/ஆறுமுக உருத்திராட்சங்கள் விற்பனைக்குண்டு.
0094 777 785 782, 0094 722 785 782 (சி/13376) (7.6.3)
Certified by Rudraksha & Gem Testing Laboratory


# மரண அறிவித்தல்



## சின்னையா ஜெயரட்ணம்

துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா ஜெயரட்ணம் 15.04.2014 செவ்வாய்க்கிழமை பிற்பகல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா (களஞ்சிய காப்பாளர், நெற்சபை)- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஏரம்பமூர்த்தி (ஓவசியர்)- இளையதங்கம் தம்பதியரின் மருமகனும், தங்கராணியின் அன்புக் கணவரும், ஜெயகாந்தன், ஜெயந்தி, தமயந்தி (அமரர்), சிறீகாந்தன், சுகந்தி ஆகியோரின் பாசமிகு அப்பாவும், விஜிதா, தர்மசீலன், வாசுகி, செல்வகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், நிரோன், தேனுகா, நிலாஷா, அஷ்மிதா, அனிக்கா, அமிஷா, அஷ்மிகா, பிரசாலினி (அமரர்), விபுஷ்ணு, ஹம்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், மகாதேவி, குலதேவி, சிவதேவி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பி.ப ஒரு மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
46-3/1, I.B.C Road, Colombo 06
T.P No - 011 2361271, 077 7357443, 0718581850

## படு வேகமாக ஓடிய ஓட்டோ தடம் புரண்டது; ஒருவர் காயம்

தென்மராட்சி.ஏப்.18

வேகமாகச் செலுத்தப்பட்ட ஓட்டோவொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில் அதில் பயணித்த ஒருவர் காயங்களுக்கு உள்ளானார்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் பி.ப. 3 மணியளவில் மீசாலையில்இடம்பெற்றது. ஓட்டோ தடம்புரண்டு சிறிதுதூரம் இழுபட்டுச்சென்றதில் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த மீசாலை வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் கருணாகரன் (வயது-31) என்பவர் காயமடைந்தார். காயமடைந்தவர் வேறொரு வாகனத்தில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குகொண்டு வரப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-9)


## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல சைக்கிள் விற்பனை நிலையத்துக்கு பின்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

★கணக்காளர் ★விற்பனையாளர்

மாநகரசபை எல்லைக்குள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.
69, 115, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/13658) (4.6.3)

## வேலையாள் தேவை

யாழ்-கொழும்பு போக்குவரத்து சேவை நிலையம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் உடன்தேவை.

★கணக்காளர்
★சாரதி (AD சாரதி அனுமதிப்பத்திரம், 40 வயதுக்கு மேற்பட்டவர்)
★ உதவியாளர் (40 வயதுக்கு மேற்பட்டவர் )

முன் அனுபவம் விரும்பத்தக்கது.
சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.
(சி/13657) (4.6.3) 69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## உடனடி வேலை வாய்ப்பு

கணக்கியலில் பூரண அறிவும் (Stock Managing) ஓரளவு கணினி அனுபவமும் உள்ள பெண் பிள்ளைகளும், பலசரக்குப் பொருள்கள் பொதி செய்வதில் அனுபவம் நிறைந்த ஆண்களும் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

077 873 0114
திருநெல்வேலி (46875) (7.6.3)


## நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகள் முத்திரையிடல்


நல்லூர் பிரதேச எல்லைக்கு உட்பட்ட சகல வர்த்தக நிலையங்களினதும் நிறுவைகள், அளவைகள் கருவிகளுக்கு ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபை- நல்லூர் உப அலுவலகத்தில் வைத்து கீழ்வரும் திகதிகளில் முத்திரையிடும் பணி நடைபெறும்.

நேரம் :
காலை 9.00 - பிற்பகல் 4.00 மணி வரை.
21.04.2014, 22.04.2014, 24.04.2014
25.04.2014, 29.04.2014, 02.05.2014

தலைவர்,
நல்லூர் பிரதேச சபை. (சி/13659) (7.6.3)

## ஆறாத் துயரில் ஓராண்டு நினைவுகள்.....

நிற்சாமம் சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
### திருமதி தங்கேஸ்வரி தவச்செல்வன்



நெஞ்சம் கனக்கிறது விழிகள் சொரிகிறது
சொல்ல வார்த்தைகளே இல்லை அம்மா
தாங்க முடியாத சோகத்தை எமக்களித்து
எமைவிட்டு எங்கு சென்றுவிட்டீர்கள்?

ஆலமரமாய் நீங்கள் அரவணைத்தீர்கள்
விழுதுகளாய் நாம் இருந்தோம் அம்மா
காலமது செய்த கொடுமையிது
தனித்துவிட்டோம் நாம் இங்கே.

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன இங்கே
உங்கள் அன்பிற்கு யாரம்மா ஈடாகுவர்
நிரப்ப முடியாத வெற்றிடத்தை உருவாக்கி
எம்மை நிலைதடுமாற வைத்தீர்களே அம்மா.

அடுத்த பிறவியிலும் உங்களுக்கே
நாங்கள் பிள்ளைகளாகப் பிறக்க வேண்டும்
தெய்வமாகிவிட்ட நீங்கள் எங்களுக்கு
என்றென்றும் வழிகாட்ட வேண்டும் அம்மா.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

மண்ணில் 14.05.1966 — விண்ணில் 29.04.2013

நிற்சாமம், சங்கானை (46876)(5-6.3)

பாசமிகு குடும்பத்தினர்.

## 16ஆம் நாள் நன்றி நவிலலும் நினைவஞ்சலியும்



### அமரர் விஜயரட்ணம் இராஜேஸ்வரி

கடந்த 05.04.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த அமரர் விஜயரட்ணம் இராஜேஸ்வரி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [18.04.2014] வெள்ளிக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால், அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மோகன் கூல்பார்,
கண்டி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (13652)(12.3)(3.6)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல் செல்வம் எம்.பி வன்மையாகக் கண்டிப்பு

ஊடகவியலாளர் சிவஞானம் செல்வதீபன் மீது மேற்கொள் ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை தமிழ்த் தேசிய கூட் டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாக கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,ரெலோ இயக்கத் தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். ஊடகவியலாளர் சிவஞானம் செல்வதீபன் கடந்த திங்கட்கிழமை இரவு வடமராட்சியிலிருந்து சிறுப்பிட்டி யிலுள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது அவரைப்பின் தொடர்ந்து சென்ற இனம் தெரியாத ஆயுததாரிகள் அவர் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இரும்புக்கம்பிகளை பயன்படுத்தியே அவர் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் அவர் கடுங் காயங்களுக்கு உள்ளா கிய நிலையில் தற்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் இலங்கை அரசால் தொடர்ச்சியாக கட்ட விழ்த்து விடப்பட்டுள்ள அடக்கு முறைகளை கட் டுப்படுத்த சர்வதேச சமூகம் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எனவே செல்வதீபன் மீது மேற்கொள்ளப்பட் டுள்ள தாக்குதல் சம்பவத்துக்கு அரசு உரிய பதில் கூறவேண்டும். தமிழ் மக்களின் விடிவுக்காக ஊடகங்கள் மூலம் குரல் கொடுத்து வரும் செல்வ தீபன் போன்றோர் மீதான தாக்குதலையும், கைதுகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என்று அந்த அறிக் கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-56)

## தவறிவிட்டது

முகுந்தன் கொன்சிகா என்பவரது வாகன சாரதி அனுமதிப் பத்திரம், வங்கி அட்டைகள் என்பன யாழ்ப்பாணத்தில் இருந்து ஆறுகால் மடத்துக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அன்புடன் அறியத்தரவும். (16877) (10)

தொடர்பு: 077 240 5417, 077 156 7072

## மரண அறிவித்தல்

### ரூபரத்தினேஸ்வரி சிவயோகநாதன்



மாதகலைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட ரூபரத்தினேஸ்வரி சிவயோகநாதன் (13.02.2014) நெதர்லாந்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் இரத்தினசபாபதி (ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்) - சரஸ்வதி தம்பதியரின் அன்புமகளும் வரியப்புலம் சுன்னாகம் கயிலாய பிள்ளை - பகவதி தம்பதியரின் மருமகளும் நடராசா (ஓய்வு பெற்ற கிராம அலுவலரும் சமாதான நீதவானும்) புஸ்க்கலாதேவி தம்பதி யரின் மருமகளும் சிவயோகநாதனின் அன்பு மனைவியும் பரமேஸ்வரன் (ஜேர்மனி), விஜயேஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரன் (மாதகல்), கேதீஸ்வரி ஆகியோரின் சகோதரியும் விமலாதேவி, புஸ்க்கலாதேவி (லண்டன்), தங்கேஸ்வரி (பிரானஸ்), ஸ்ரீதரன், தனஞ்செயன் ஆகியோரின் மைத்துனியும் வசந்தராணி, சுலோசனா, மதியழகன், ஜெயக்குமார், கௌரீஸ்வரன், ஜெயமதி, சுஜாதா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறிவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
S.S. நடராசா (சமாதான நீதவான்)

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்
021 3214865

## திருப்பாடுகள் ஆராதனை

சுண்டுக்குழி திருமுழுக்கு யோவான் ஆல யத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு திருச் சிலு வைப்பாதையும் மாலை 4.30 மணி க்கு பெரிய வெள்ளிக் கிழமை யேசுக் கிறிஸ்துநாதரின் திருப் பாடுகள் ஆராதனை யும் நடைபெறும். நாளை சனிக்கிழமை திருவிழிப்பு ஆரா தனை நள்ளிரவு 11.30 மணிக்கும் உயிர்த்த ஞாயிறு திருப்பலி மறுநாள் காலை 6.00 மணிக் கும் நடைபெறும். (ஒ-51)

## வேறு வலயங்களுக்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் நிரந்தரமாகக் கடமையாற்றும் ஆசிரியர்களில் வேறு வலயங் களுக்கு (பிற வலயங்கள் மற்றும் மாவட்ட, மாகாணங்கள்) இட மாற்றம் பெற்றுச் செல்ல விரும்பும் ஆசிரியர்கள் தமது கோரிக்கை களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (ஓ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள் - 2011
### கலைமாணித் தேர்வு - I- 2011 (வெளிவாரி)

மேற்படி பரீட்சையை 05.05.2014 (திங்கட்கிழமை) தொடக்கம் 24.05.2014 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனு மதி அட்டைகளையும் 30.04.2014 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண் ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்,
17.04.2014

(C/13664) (10)

## 29ஆவது பிறந்தநாள் நினைவுகள்

### செல்வி வல்லிபுரநாதன் பிறிந்தாஜினி (பிறிந்தா)



மலர்வு
★ 18
★ 04
★ 1985

உதிர்வு
★ 02
★ 01
★ 2009

வெந்த மனங்களோடு ஐந்தாண்டு கழிந்தும் இன்னும்
எந்த வழியிலும் எம் உயிர்வலியோ ஆறவில்லை
சிந்தையெல்லாம் உன் நினைவைச் சுமந்து
நிதம் நின்றுமெங்கள்
சிந்து விழி ஈரமின்னும் சிறிதளவும் காயவில்லை
மங்கிவிடாப் புன்னகையோடு எம் மனத்தொளிரும் தாரகையே!
பொங்கிவரும் துயரமெங்கள் இருப்பை நிதம் எரிக்குதம்மா
நீயில்லா இடைவெளியைக் கடக்குமிந்தக்கொடும்பொழுதில்
உன் பிறந்தநாள் நினைவெம் நெஞ்சமதை நெருடுதம்மா!

(4344)(10)

மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி. குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் அப்பாக்குட்டி தெய்வேந்திரராசா

தோற்றம்:
29.04.1940

மறைவு:
28.04.2013

எங்கள் பெருமையெல்லாம் மனதார நேசித்து
மங்கா மனம் நிறைந்த எங்கள் குலவிளக்கே
எங்கள் இதயமெல்லாம் உங்கள் நினைவுகள்
சுடர் விட்டு ஒளிர்கின்றதே!
அன்பு காட்டி ஆறுதல் தந்த எம் தெய்வமே
எமை விட்டு எங்கு சென்றீரோ!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

டச்சு றோட், அளவெட்டி. (C/13662)(10) குடும்பத்தினர்.

## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்




Happy Birthday To You

லண்டன் (Tooting) ரூற்றிங் இல் வசிக்கும்
சதீஸ்வரன் - சுமித்திரா
தம்பதியரின் செல்வப்புதல்வன்

### சிவாத்மிகன்

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (18.04.2014) தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்.இவரை இணுவிலில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா கொழும்பில் வசிக்கும்அப்பம்மா, பெரியப்பா, மாமன்மார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் ஆகியோர் உடுவில் சித்தி விநாயகர் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

இணுவில், கிழக்கு சா. சிற்சபேசசர்மா (தாத்தா)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### இராமலிங்கம் பிரபாகரன்
(நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், கண்டாவளை)

தோற்றம் :
02.02.1978

மறைவு:
13.05.2009

ஆண்டுகள் ஐந்தல்ல எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உன் நினைவுகள் என்றும்
நிலைத்திருக்கும்

உன் நினைவில் என்றும்

(C/13661)(10)

தும்பளை மேற்கு, பருத்தித்துறை. மனைவி, மகள், பெற்றோர், சகோதரர்கள்.

## பருத்தித்துறை / தும்பளை
## நெல்லண்டை அம்மன் கோவில்
## தருமபரிபாலன சபையின் அறிவித்தல்



* விளக்கு வைப்பு : 25.04.2014 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.55 மணி
* வெளிமடை : 02.05.2014ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.
* விஷேட உற்சவகால கடைகளுக்கென நிலத்தைக் குத்தகைக்கு எடுக்க விரும்புவோர் 01.05.2014 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு சபை அலுவலகத்துக்கு நேரில் சமுகமளிக்கவும்.

(C/13665)(10)


சபா ரவீந்திரன்
தலைவர்.

இ.கணேசநாதன்
பொருளாளர்.

கா.புஸ்பராஜா
செயலாளர்.

# பொதுபல சேனாவை தடை செய்ய வேண்டும்

வாசுதேவ வேண்டுகோள்




கொழும்பு.ஏப்.18

பொதுபல சேனா அமைப்பை உடனடியாக அரசு தடை செய்ய வேண்டும் என்று சமூக ஒருமைப்பாடு மற்றும் தேசிய மொழிகள் தொடர்பான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிங்கள பௌத்தர்கள் என்ற போர்வையில் இயங்கும் பயங்கரவாத அமைப்பே பொதுபல சேனா என்று அவர் கூறினார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள பௌத்தர்களை பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் வெளிநாடுகளிடம் பணத்தை வாங்கிக் கொண்டு சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக பயங்கரவாதத்தை இந்த அமைப்பு கட்டவிழ்த்து விட்டுள்ளது.

தமக்கு அரசு தரப்பு ஆதரவு உள்ளதாக வெளிக்காட்டிக் கொண்டே அரசுக்கு எதிராக சதி செய்யும் நாடுகளிடம் பணத்தை வாங்கிக் கொண்டு சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுகின்றது. அதனால் சர்வதேச ரீதியில் அரசு நெருக்கடிகளை சந்திக்க நேரிடுகின்றது.

என்னைப்பொறுத்தவரைபொதுபல சேனா ஒரு பயங்கரவாத அமைப்பாகும். எனவே அதனை உடனடியாகத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.(ச)

# ஊடகவியலாளருக்குப் பாதுகாப்பற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கையும்

## நான்காவது இடத்தைப் பிடித்தது என்கிறது 'சிபிஜே'

கொழும்பு.ஏப்.18

ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்களுக்குத் தண்டனை விதிக்கப்படாத நாடுகளின் பட்டியலில், இலங்கை நான்காவது இடத்தை வகிக்கிறது என்று சிபிஜே என்று அழைக்கப்படும்நியுயோர்க்கை தளமாகக் கொண்ட ஊடக வியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்தப் பட்டியல் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் 100 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட போதும், அத்தகைய கொலைகளுக்கு காரணமானவர்கள் எவரையும் தண்டிக்க நடவடிக்கை எடுக்காத ஈராக், இந்தப்பட்டியலில் முதலிடத்தை வகிக்கிறது. இரண்டாவது இடத்தை சோமாலியாவும், மூன்றாவது இடத்தை பிலிப்பைன்ஸும் வகிக்கின்றன.

கடந்த பத்தாண்டுகளில் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ள போதிலும், அவர்களில் எவரொருவரின் உயிரிழப்புக்கும் காரணமானவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்காத இலங்கை, இந்தப் பட்டியலில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

ஊடகவியலாளர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்ததற்கு இந்த தண்டனை வழங்கப்படாதநிலையேகாரணம்என்று சிபிஜே தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பாக சிபிஜே தெரிவித்திருப்பதாவது:

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் போர் முடிவுக்கு வந்திருந்த போதிலும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாம் பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் பதவியில் இருந்த அரசுகளின் காலத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் கொலைகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கான அரசியல் ரீதியான விருப்பை வெளிப்படுத்தவில்லை.

> “ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் போர் முடிவுக்கு வந்திருந்த போதிலும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாம் பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் பதவியில் இருந்த அரசுகளின் காலத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் கொலைகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கான அரசியல் ரீதியான விருப்பை வெளிப்படுத்தவில்லை.

ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை மற்றும் இராணுவம்தொடர்பானசெய்தியை வெளியிட்டதற்காக கொல்லப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் உள்ளிட்ட பல கொலைகளுக்குப் பின்புலத்தில் இலங்கை அரசு மற்றும் இராணுவ அதிகாரிகளே இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

இலங்கையில் தண்டனை விலக்களிப்பே ஊடகவியலாளர்கள் புலம்பெயர்வதற்கான காரணம் - என்று சிபிஜேயின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

கடுமையான மோதல்கள் நடந்து வரும் சிரியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளும் பாகிஸ்தான், ரஷ்யா, நைஜீரியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளும் இலங்கைக்கு அடுத்தபடியாக முதல் 13 நாடுகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. (ச)

# குற்றச் செயல்களுக்கு அனுசரணை வழங்கும் வரை நல்லாட்சி இல்லை

## மக்களின் பண்புகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்கிறார் கரு ஜயசூரிய

குற்றச் செயல்களுக்கு அரச அனுசரணை வழங்கப்படும் வரையில் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த முடியாது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

எம்பிலிபிட்டியவில் நடைபெற்ற புத்தாண்டையொட்டி தலைக்கு எண்ணெய் வைக் கும் நிகழ்வு ஒன்றில்கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளால் மக்களால் தமிழ் - சிங்கள புத்தாண்டு மரபுகளை உரிய வகையில் பின்பற்ற முடியவில்லை. மக்களின் பண்புகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

சூதாட்டம், போதைப் பொருள் மதுபான பயன்பாட்டுக்கு அரசு அனுசரணை வழங்குவதை நிறுத்தி இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும்-என்றார். (ச)

# தனியார் பஸ் சேவையை புறக்கணிக்கும் பயணிகள் அதிகரிப்பு

கொழும்பு.ஏப்.18

ஒவ்வொரு மாதத்திலும் தனியார் பஸ் சேவையில் பயணங்களை மேற்கொள்ளும் 58 ஆயிரம் பேர் வரையிலான பயணிகள் இந்த பஸ் சேவையை நாடுவதைத் தவிர்த்து வருகின்றனர். இந்தத் தகவல் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் மேற்கொண்ட கணிப்பீடொன்றில் தெரியவந்துள்ளது.

பயணிகள் தனியார் பஸ் சேவையைத் தவிர்த்து வருவதால், எதிர்காலத்தில் தனியார் பஸ் தொழில்துறை சரிந்து விழக்கூடிய பிரச்சினையொன்றுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரும் என்று மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளொன்றில் தனியார் பஸ் சேவையில் 20 மில்லியன் ரூபா வரை இழப்பு ஏற்படுகிறது. அதனால் பஸ் உரிமையாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

இந்த நிலைப்பாடு குறித்து வடமேல் மாகாணப் பயண மார்க்கங்களின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் நயனஜித் உபேந்திர தெரிவித்ததாவது:-

பயணிகள், ஊழியர்கள் போன்றே பஸ் உரிமையாளர்களையும் காத்துக் கொள்ளுதல் என்பதே எமது கொள்கையாகும். நல்லொழுக்க சீலம், சட்டங்கள் கடைப்பிடிக்கப் படாமல் இந்தத் தொழிற்துறையைக் கட்டியெழுப்ப இயலாது. போதியளவிலான பரிசீலனைக் குழுக்கள் இல்லாததனால் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிகளை நடைமுறைப்படுத்துவதில் முடக்க நிலையே நிலவுகிறது.

சீருடை அணிதல், பயணிகளுக்கு ரிக்கெட் வழங்குதல், தொலைக் காட்சிப் பெட்டிகளை அகற்றுதல் போன்ற சட்டங்களைச் சீராக நடைமுறைப்படுத்த இயலாதுள்ளது - என்றார். (ச-22)

## மரண அறிவித்தல்

### சதாசிவக்குருக்கள் சிவசர்மா



கட்டுடையைப் பிறப்பிடமாகவும், அராலி மேற்கு நொச்சிக்காட்டுப்பிள்ளையார் கோயில் முன்னாள் ஆலயகுருவும், வட்டுக்கோட்டை தென்மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவக்குருக்கள் சிவசர்மா (17.04.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் சொர்ணாம்பிகை காலஞ்சென்ற பஞ்சாட்சரஐயர் மற்றும் த. சாம்பசிவஐயர் சு.சரஸ்வதிஅம்மா குமாரசாமிஐயர் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2014)வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### நாகரட்ணம் விக்னேஸ்வரன்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் விக்னேஸ்வரன் 16.04.2014 புதன் கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.04.2014) வியாழக்கிழமை மிருசுவிலில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/1, சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
கந்தப்பிள்ளை விசாகரட்ணம்
(சிறியதந்தை) (46878) (10)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

வீடு வாடகைக்குண்டு
யாழ்ப்பாணம் K.K.S. வீதி, மனோகரா சந்திக்கு அருகில் பழமை வாய்ந்த நாற்சாரம் வீடு நிறுவனங்களிற்கு அல்லது Office ஸ்ரோர் தேவைக்கு, வீட்டு தேவைக்கு கொடுக்கப்படும். தொடர்பு - 077 7035457


தேவை
றிபிள் நம்பர் பிளஸ்சர் பைக்
(சிவப்பு, கறுப்பு)
தொடர்பு - 077 0267619

தேவை
1) 20 அந்தர் தராசு
2) 30 கோஸ்பவர் மோட்டார்
3) அரிசி ஆலை தளபாடங்கள் என்பன தேவைப்படுகின்றன.
உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
T.P: 077 7722215, 021 2225688

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு திருநீலகண்டன்

(முன்னாள் பதுளை வர்த்தகர்)



காரைநகர் ஆயிலியைப் பிறப்பிடமாகவும், எண்ணாங்குப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு திருநீலக்கண்டன் நேற்று (17.04.2014) வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் (குட்டி) அன்புக் கணவரும், தவராசா (அமெரிக்கா), சிவரூபன் (T.S.K Traders-வவுனியா), தர்சினி (வவுனியா), குமுதினி (நெதர்லாண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சினி (அமெரிக்கா), சிவரூபி (வவுனியா), காந்திநாதன் (விற்பனை பிரதிநிதி-களனி கேபில்), சிறிதரன் (நெதர்லேண்ட்) ஆகியோரின் அன்பு மாமனும், அபிராமி, குமரன், விபுசனா, லக்சனா, டிலக்ஷனா, திவ்யன், டினோயா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் சரஸ்வதி, மாணிக்கம், சபாரட்ணம், விஜயலக்சுமி, சுந்தரலிங்கம், சிவஞானம், கணேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, வரதராசா (ஒப்பிலா), இரத்தினசபாபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், இல. 113/26, சிவன்கோயில் வீதி, உக்குளாங்குளம் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (19.04.2014) சனிக்கிழமை காரைநகர் அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0777 585918
077 8752491 (43256) (10)

தகவல்: குடும்பத்தினர்.

# ஈழத்தமிழரும் குர்திஸ்தான் மக்களும் நீதி வேண்டி இணைந்து போராட்டம்

நீதி வேண்டி ஈழத்தமிழர்களும் குர்திஸ்தான் மக்களும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதலைக்காகப் போராடி வரும் ஈழத்தமிழர்களைப் போலவே, குர்திஸ்தான் மக்களும், அவர்களது தாய் மண்ணிலும் புலத்திலும் எதிரிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

ஈழத்தமிழ் மக்களின் செயற்பாட்டாளர்களான பருதி, நாதன், கஜன் போன்றவர்கள் எவ்வாறு பிரான்ஸ் மண்ணில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார்களோ, அதனைப் போலவே குர்திஸ் இன மூன்று பெண் அரசியல் போராளிகள் சக்கின், ரேஜ்பின், லைல்லா என்போர், 2012 ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதிபிரான்ஸ்மண்ணில்வைத்துப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

பிரான்சின் பாதுகாப்புத் துறைக்கும் சட்டத்துறைக்கும் சவால் விடும் வகையில் எல்லை தாண்டிய அரசபயங்கரவாதமாக இந்தப் படுகொலைகள் அமைந்திருக்கின்றன. உயிர்ப் பாதுகாப்புத் தஞ்சம் கோரி வாழ்கின்ற மக்களின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட தமிழ் மற்றும் குர்திஸ்தான் மக்கள் செயற்பாட்டாளர்கட்கு நீதி வேண்டி, கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி குர்திஸ்தான் கலாசார மையத்தில் இருந்து புறப்பட்ட பேரணி, குர்திஸ்தான் போராளிகள் படுகொலை செய்யப்பட்ட 147 Rue La Fayette இடத்தில் நிறைவு பெற்றது.

இந்தப் பேரணியில் ஈழத்தமிழர்களும் குர்திஸ்தான் மக்களும் இணைந்து கலந்து கொண்டது மட்டுமன்றி உலகில் ஒடுக்கப்பட்டுவரும் விடுதலைக்காகப் போராடும் அனைத்து மக்களுடனும் ஒன்றிணைந்து எதிர் காலத்தில் போராடுவது என்றும் உறுதி எடுக்கப்பட்டது.


பேரணியில் ஈடுபட்டோர்.

அதன் தொடர்ச்சியாக Invalides என்னும் இடத்தில் இடம்பெற்ற ஒன்று கூடலிலும் ஈழத்தமிழர்களும் குர்திஸ்தான் மக்களும் ஒன்றிணைந்து பங்கேற்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இன்ரபோல்

முன்னறிவிப்பு களைப் பிறப்பித்துள்ளனர்.

போர் முடிவடைந்த பின்னர் கைது செய்யப்பட்ட 100க்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர். குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க ஆதாரம் இல்லாததால் சிலரை நாங்கள் விடுதலை செய்துள்ளோம். ஏனையோர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மீண்டும் ஒரு போர் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே நாம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்" - என்று தெரிவித்தார். (ந-5)

### இந்திய

மதி செய்யக்கூடியதாக மீன்பிடியை வளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். தி.மு.கவும், அ.தி.மு.கவும் ஆட்சியில் இருந்து கொண்டு மாறி மாறி குற்றஞ்சாட்டிக்கொண்டே இருக்கின்றன. தமிழகத்தில் மீனவர்களது பிரச்சினை அவர்களது வாழ்வாதாரத்தையும் பாதித்துள்ளது என்று ஆட்சியில் இருப்பவர்கள் ஏன் நினைக்கவில்லை. மத்திய அரசின் பலவீனத்தை ஏனைய நாடுகளும் சாதகமாகப்பயன்படுத்திக் கொண்டு மீனவர்களுக்கு எதிராகத் துன்புறுத்தல்களை செய்கின்றன. இதனை உடனடியாக நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" - என்று தெரிவித்துள்ளார். (ந-14)

### தெரிவுக்குழு

தைப் பிரதிபலித்திருந்தார்.

இவ்விரு அமைச்சர்களின் கருத்துகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் ஊடகப் பேச்சாளரும் பேச்சுக் குழுவின் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"சர்வதேச அனுசரணையுடன் அரசுடன் பேசுவதற்கு நாம் எப்போதும் தயாராக இருக்கின்றோம். ஆனால் அரசு நியமித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நாம் ஒருபோதும் பங்கேற்கமாட்டோம். தெரிவுக்குழுவின் ஊடாகவே தீர்வு என கூளுரைக்கும் அரசு அதை தென்னாபிரிக்க அரசிடம் திட்டவட்டமாகக் கூறியிருக்கலாமே? தென்னாபிரிக்கா அரசு தெரிவித்த கருத்துகளுக்கு ஒப்புக்கொண்டுவிட்டு இங்கு வந்து வீரவசனம் பேசுவது நாகரிகமற்ற செயல். தமிழர்களை ஏமாற்றுவது போன்று சர்வதேச சமூகத்தையும் இலங்கை அரசு ஏமாற்ற முயற்சிப்பது நாட்டுக்கே பாதகம் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்"- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-சி)

### ஐ.தே.கவினர்

கூறப்படுகின்றது.

அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விமான நிலையம் மற்றும் துறைமுகம் என்பவற்றைப் பார்வையிடுவதற்காக ஐ.தே.கவின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் நேற்று மாலை அங்கு சென்றனர். அஜித் சி.பெரேரா, அஜித் பிரசன்ன, நளின் பண்டார, இரான் விக்கிரமரட்ண, ஆர்.யோகராஜன் ஆகியோரே அந்தக் குழுவில் இருந்தனர்.

விமான நிலையம் மற்றும் துறைமுகத்தைப் பார்வையிடுவது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முற்கூட்டியே அறிவித்துவிட்டு துறைமுகத்துக்கும் விமான நிலையத்துக்கும் சென்ற இந்தக் குழுவினர் இரண்டு இடத்திலும் அவற்றைப் பார்வையிட்டுவிட்டு வெளியே வர முற்பட்ட சமயமே இந்த அட்டூழியம் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன்,

"பொலிஸ் அத்தியட்சகரும், தலைமையக இன்ஸ்பெக்டரும் அவர்களுடன் நின்ற பத்து தொடக்கம் பதினைந்து பொலிஸாரும் கைகட்டிப் பார்த்திருக்க, அம்பாந்தோட்டை நகரபிதாவுடன் வந்திருந்த ஒரு கும்பலே அட்டகாசம் புரிந்தது. நகரபிதா பொலிஸார் முன்னிலையிலேயே ஒரு பிஸ்டலைக் கைகளில் வைத்துக் கொண்டு குண்டர் போல எங்களை மிரட்டிக் கலைத்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊரில் அவரது அணியினரின் விருந்தோம்பல் இதுதான் போலும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

### நாய்களுக்கு

பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்போது மாநகர சபை உறுப்பினர், "ஏற்கனவே சபை கூட்டத்தில் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி செயலகத்துக்கு கடிதம் எழுதுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அது தொடர்பில் இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குருநகர் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. எனவே இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் அலுவலகத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் "குடாநாட்டில் உள்ள நாய்களின் தொகை விவரம் எடுக்கப்பட்ட போது வீடுகளில் 4 ஆயிரத்து 350 நாய்களும், நோய்த்தாக்கம் உள்ள கட்டாக்காலி நாய்கள் 7 ஆயிரத்து 500 இருப்பதும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே இருக்கக் கூடிய நாய்களுக்கு கருத்தடை செய்வதற்காக விசேடகுழு வொன்று கொழும்பில் இருந்து வரவுள்ளது. ஒவ்வொரு நாய்க்கும் 2 ஆயிரத்து 500 ரூபா செலவு செய்யப் படவுள்ளது. அதற்கான நிதி வெளியில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. அந்தந்த நகர சபைகள் ஊடாக நாய்களுக்கு கருத்தடை ஊசி போடப்படும் இதற்கான நடவடிக்கைகள் அடுத்த மாதம் அளவில் மேற்கொள்ளப்படும்"- என்று தெரிவித்தார். (ந-14)

### துன்பங்கள்

யில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறும்போது,

"நான் வந்ததன் முக்கிய நோக்கம் யாழ்ப்பாணத்தில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். சூரிய சக்தி மூலம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தினால் இங்குள்ள மக்கள் அனைவருக்கும் சமமான அபிவிருத்தி கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. நான் இங்குதான் படித்தேன். அந்த அடிப்படையை வைத்துத்தான் என்னால் இன்று இவ்வளவும் செய்யக் கூடியதாக இருந்தது. அதே அடிப்படையில் இங்குள்ளவர்களுக்கு ஒரு வர்த்தக ரீதியான வழிகாட்டலை ஏற்படுத்திக் கொடுத்தால் இங்குள்ளவர்களின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும்.

30 வருட காலமாக இங்குள்ள மக்கள் பல துன்பங்களை அனுபவித்துள்ளார்கள். ஆனால் அவற்றையெல்லாம் கடந்து எங்களால் முடியும் என்ற நம்பிக்கையோடு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். 32 வருடங்களின் பின்னர் நான் இங்கு வந்திருக்கிறேன். பல இடங்களுக்கும் சென்று பல மக்களை சந்தித்தேன். மக்கள் 'எம்மால் முடியும்' என்ற வைராக்கியத்தோடு பேசுவதை பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. மக்கள் ஒரு தீர்மானத்தோடு வாழ்கிறார்கள். 'இதுவரை பட்ட துன்பத்தை விட இனி மேலா துன்பம் வந்துவிடப் போகின்றது' என்ற மனநிலையில் உள்ளார்கள். இந்த மன நிலையில் வாழ்ந்த பிள்ளைகளை வழிகாட்டி அவர்களுக்கான பாதையை கண்டுபிடித்து அதில் அவர்களிற்கான அறிவுறுத்தலை வழங்கி முன்னேற வைத்தால் நிச்சயம் பொருளாதார நிலை பலமடையும். சிங்கப்பூர், தென் கொரியா போன்ற நாடுகளை விட இலங்கை பொருளாதாரத்தில் தரமான, பலமான நிலைக்கு வரமுடியும்.

சூரிய சக்தி தயாரிப்புக்கள் ஒவ்வொரு வருடமும் இருமடங்கு அதிகரிப்பைக் காட்டி வந்தன. ஆனால் இப்போது மிகவும் குறைவாக உள்ளது. இந்நிலையில் எம்மவர்களை சரியான வழியில் இயங்க வைத்து இயந்திரம் பொருத்துவது முதல் அனைத்திலும் பயிற்சி வழங்க வேண்டும். இதன் மூலம் நாங்கள் எமக்கான இடத்தினை பற்றிப் பிடிக்கலாம்.

ஏன் என்றால் இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உள்ளது. இங்கிருந்து இந்தியா, ஆபிரிக்கா, அரபு நாடுகள், சீனா போன்ற நாடுகளுக்குச் சென்று சேவையை வழங்கிவிட்டு வரலாம். எந்த ஒரு நிறுவனமும் ஒரே இடத்தில் பராமரிப்புக்குத் தேவையான அனைத்தையும் வைத்திருந்தால் தேவையான நேரத்தில் உடனடியாக ஒவ்வொரு இடத்திற்கும் ஆள்களை அனுப்பி அதை சரி செய்ய முடியும்.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை இங்குள்ளவர்களை அத்துறையில் பயிற்றுவித்து சேவைகளை வழங்கி வந்தால் நிச்சயம் தரமான பொருளாதார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டில் இருந்து இங்குள்ள நிலைமை பற்றி எதுவும் கூறமுடியாது. நான் யாழ்ப்பாணத்தில் பல தரப்பட்ட மக்களுடன் பேசியிருந்தேன். இங்குள்ள மக்கள் தம்மால் முடியும் என்ற நம்பிக்கையோடு வாழ்கிறார்கள். இந்த நிலையில்தான் அவர்களுக்கு சரியான வழிகாட்டல் அவசியமாகின்றது. இதற்காகத்தான் நிபுணர்கள் இங்கு வந்திருக்கிறார்கள்.

என் வெற்றிக்கு காரணம் 'சிவலிங்கம் மாஸ்ரரின் மகனால் முடியும்' என்ற நம்பிக்கை. உங்களால் முடியும் என்ற வசனம் ஒருவனை உயர்த்தும். முடியாது என்ற வார்த்தையை இயலுமான வரை கைவிடுங்கள். விழாமல் வெற்றி கிடைக்காது. விழுந்தால் எழுந்து மண்ணைத் தட்டிவிட்டு மீண்டும் நடக்க ஆரம்பியுங்கள்.

நாம் பிள்ளைகளுக்கு பணத்துக்காக வேலை செய்ய சொல்லிக் கொடுக்க வேண்டும். காசு இல்லை என்றால் பொருளாதாரம் இல்லை. பொருளாதாரம் இல்லை என்றால் ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியாது. எப்பவும் வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்கள் இருக்கும். ஆனால் நீங்கள் பயன்படுத்த தவறுகிறீர்கள். சரியாக குறித்த சந்தர்ப்பங்களை கண்டுபிடித்து அதை பயன்படுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு உற்சாகம் கொடுக்கவேண்டும். அப்போது அவர்கள் வெற்றி பெறுவார்கள். எல்லோராலும் முடியும் என்பதை மனதில் வைத்து பயணிக்க வேண்டும்"- என்று தெரிவித்தார். (ந-10)

### வட மாகாண

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட, ஈ.பி.டி.பியின் முன்னாள் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், வடக்கு மாகாணசபையின் உறுப்பினராகவும் எதிர்கட்சித் தலைவராகவும் தெரிவாகியிருந்தார்.

இதன் பின்னர் அந்தக் கட்சியைச் சேர்ந்த நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளரை சுட்டுக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து ஈ.பி.டி.பியிலிருந்து கமலேந்திரனை நீக்குவதாக அந்தக் கட்சி அறிவித்தது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் அவரை கட்சியை விட்டு நீக்கியது.

இதனால் கமலேந்திரன் மாகாணசபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்திருந்தது. அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட ஈ.பி.டி.பி கட்சியைத் சேர்ந்த சி.தவராசாவை, அந்த வெற்றிடத்துக்கு நியமிப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் தேர்தல் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தியதற்கு அமைய, வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

கமலேந்திரனின் வெற்றிடத்துக்கு சி.தவராசா நியமிக்கப்பட்டுள்ள போதும் அவரை, எதிர்கட்சித் தலைவராக நியமிப்பது தொடர்பில் எந்தவொரு அறிவித்தலும் வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்துக்குத் தெரியப் படுத்தப் படவில்லை.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட இ.அங்கஜன் விருப்பு வாக்குளில் இரண்டாம் இடத்தையும், சி.தவராசா மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

### சரணடைந்த

நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"போரின் இறுதிக் கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் சரணடைந்தும், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டும் இருந்தனர். இவ்வாறு 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் வரையில் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப் பட்டிருந்தனர்.

அவர்களில் 60 பேர் தவிர்ந்த ஏனையோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்போது புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட்டு வரும் 60 போராளிகளும் விரைவில் சமூகத்துடன் இணைக்கப்படுவர்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஒரே இரவில் ஏற்படுத்த முடியாது. நாம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளைச் செய்துள்ளோம். நாம் செய்த இந்த நடவடிக்கைகள் அமெரிக்காவின் கண்களுக்கு மாத்திரம் தெரியவில்லை."- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

### இறுதிப்

சட்டவாளர் சங்க செயலாளர், சட்டத்தரணி ராம்சங்கர் தாக்கல் செய்த இந்தப் பொது நலன் மனுவை விசாரித்த நீதிபதிகள், மனுதாரரின் கோரிக்கை நீதிமன்ற வரம்புக்குள் வராது என்று கூறி மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

இலங்கைப் படைகளுக்கு உதவியாக இந்தியப் படைகளும் போரில் பங்கெடுத்தன என்றும் இந்திய நாடாளுமன்றத்துக்கோ அல்லது இந்திய குடியரசுத் தலைவருக்கோ தெரியாமல் இது நடைபெற்றது என்றும் தெரிவித்து இது குறித்து உயர் நீதிமன்ற மேற்பார்வையில் விசாரணை நடத்த வேண்டும் என்று கோரியே இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (ந-5)

# காலிறுதிக்கு முன்னேறியது வதிரி பொம்மர்ஸ் அணி

யாழ்ப்பாணம், ஏப்.18

இறுதி வரை பரபரப்பாக இடம் பெற்ற ஆட்டத்தில் இறுதி நேர அதிரடி ஆட்டத்தின் மூலம் 2:0 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிக்கு முன்னேறியது வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.



பரபரப்பான ஆட்டத்தில் ஒரு காட்சி

இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும், திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டம் ஆரம்பமானதிலிருந்து இறுதி வரை கடும் பரபரப்பாக இடம்பெற்ற இவ்வாட்டத்தில் இரு அணியினரினதும் ஆக்கிரோஷமான விளையாட்டினால் பந்து அங்குமிங்கும் தடுமாறிக்கொண்டிருந்தது. இரு அணி வீரர்களுக்கும் கோல் போடுவதற்கான பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அவை வீணடிக்கப்பட்டன.

இதனால் இரு அணியினரும் கோல் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் விறுவிறுப்படைய இருஅணி வீரர்களும் கோல் ஒன்றைப் பெறுவதற்கு கடும் முயற்சி எடுத்தனர். ஆனால் ஆட்டம் நிறைவடைவதற்கு 3 நிமிடங்கள் இருக்கும் வரை இரு அணியினராலும் கோல் எதனையும் போட முடியவில்லை.

ஆனாலும் பொம்மர்ஸ் அணியினர் கோல் அடிக்காமல் வெளியேற மாட்டோம் என்று விடாப்பிடியாக இருந்தனர். இந்தச் சூழ்நிலையில் ஆட்டம் நிறைவடைய 2 நிமிடங்கள் இருக்கும் போது வைகுந்தநாதன் கோல் போட உசார் அடைந்த பொர்ம்மர்ஸ் அணியினர் மீண்டும் இறுதி நிமிடத்தில் சாரங்கன் மேலும் ஒரு கோல் போட 2:0 என்ற அடிப்படையில் பொம்மர்ஸ் அணி வென்று காலிறுதிக்கு முன்னேறியது. (த-400)

## வென்றது நவஜீவன்ஸ்

யாழ்ப்பாணம், ஏப். 18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதி யுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வீண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 4 கோல்களைப் பெற்றதால் ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தன. (த-23)

## யுனிபைட் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 18

வவுனியா உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

அதில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண் சையின் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யுனிபைட் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். பல் கலைக்கழக விளையாட்டு அவையும் கிரிக்கெட் அணியும் இணைந்து நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை யாழ் .பல் கலைக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## கிரிக்கெட் போட்டிகள்

வடமராட்சி, ஏப்.18

மந்திகை செல்வி வாகன சுத்திகரிப்பு நிலையத்தின் ஆதரவுடன் புலோலி இளைஞர்கள் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான 11 பேர் பங்கு பற்றும் 12 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணி முதல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

ஆட்டங்கள் யாவும் அல்வாய் மைக்கல் வளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும். பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்கள் போட்டி ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளன. போட்டி நிரல் இறுதியாக்கப் பட்டு போட்டிகள் நடைபெறும். (வ-173)

* * *

யாழ்ப்பாணம், ஏப். 18

வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகம் நாகமணி வேலாயுதம் ஞாபகார்த்தமாக நடத்தும் 8பேர் பங்கு பற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நாளை சனிக்கிழமை வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி சுற்றுப் போட்டித் தொடரில் பங்குபற்றவுள்ள விளையாட்டுக்கழகங்கள் போட்டிக்குழுவினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளன. (த-23)

## அனைத்துப் பிரிவுகளிலும் கிளி.ம.வி சம்பியன்

மாங்குளம், ஏப்.18

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே சதுரங்கப் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டன. இதில் அனைத்து வயது பிரிவிலும் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி சம்பியனாகி சாதனை படைத்துள்ளது. இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு:-

15வயது ஆண்கள் பிரிவில் முதலாம்இடம் -கிளிநொச்சி மகா வித்தியாலயம், இரண் டாம் இடம்- வட்டக்கச்சி மகா வித்தியாலயம், மூன்றாம் இடம் -உருத்திரபுரம் மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

15வயது பெண்கள் பிரிவில் முதலாம்இடம்- கிளிநொச்சி மகா வித்தியாலயம், இரண்டாம் இடம்- உருத்திரபுரம் மகா வித்தியாலயம், மூன்றாம்இடம்- தர்மபுரம் மத்திய கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

19வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடம்- கிளிநொச்சி மகா வித்தியாலயம், இரண்டாம் இடம் -வட்டக்கச்சி மகா வித்தியாலயம், மூன்றாம் இடம்- முருகானாந்தா மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

19வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடம் -கிளிநொச்சி மகா வித்தியாலயம், இரண்டாம் இடம்- உருத்திரபுரம் மகா வித்தியாலயம், மூன்றாம் இடம் இராமநாதபுரம் மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (த-422)



தீவக வலய மட்டத்தில் 19 வயதுப் பிரிவுப் பெண்கள் அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட போட்டிகளில் முதலாம் இடத்தை புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலய அணி பெற்றுக் கொண்டது. கடந்த இரண்டு வருடங்களாக இந்த அணி முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைத்து வருகின்றது. (ற-7)

## மட்டுவில் வளர்மதி அணி கிரிக்கெட்டில் சம்பியன்

தென்மராட்சி, ஏப்.18

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக கிரிக்கெட் அணியின் உதயனின் அபார துடுப்பாட்டம் கேதீஸ், அமல் ஆகியோரின் பந்து வீச்சு ஆகியவற்றினால் கைதடி நவசக்தி கிரிக்கெட் அணியை 72 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியனாகியது மட்டுவில் வளர்மதி கிரிக்கெட் அணி.

சித்திரைப் புத்தாண்டையொட்டி சாவ கச்சேரி நகர சபையினரும் சாவகச்சேரி பொலிஸாரும் இணைந்து நடத்திய புத்தாண்டு விளையாட்டு விழாவின் கிரிக்கெட் இறுதிப் போட்டி சாவகச்சேரி நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வளர்மதி அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. நிர்ணயிக்கப்பட்ட 12 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இறுதி இரு பந்து பரிமாற்றங்களில் அணி வீரர் உதயன் 8 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 28 ஓட்டங்களையும் மறு முனையில் நின்ற சுஜீபன் நான்கு பந்துகளில் ஒரு ஆறு ஒரு நான்கு ஓட்டங்கள்உட்பட 25ஓட்டங்களையும் ஆட்ட மிழக்காமல் பெற்றனர். பந்து வீச்சில் டெனிஸ் 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.



105 ஓட்டங்களை இமாலய வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கைதடி நவசக்தி அணி 7 இலக்குளை இழந்து 32 ஓட்டங்களை பெற்று 72 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஒரு கட் டத்தில் 10 பந்து பரிமாற்றங் களில் ஐந்து இலக்குகளை இழந்து வெறும் 20 ஓட்டங்கள் பெற்று பரிதாபமான நிலையில் காணப்பட்டது. அணி வீரன் டெனிஸ் அதிக பட்சமாக 7 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத் தார். பந்து வீச்சில் வளர்மதி அணியின் கேதீஸ், அமல் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் பானு ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (த-9)

## கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று



யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இதில் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து அச்சுவேலி மத்திய கல்லூரி மோதவுள்ளது.

2ஆவது அரையிறுதியாட்டத்தில் புத்தூர் சேமஸ்கந்தக் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டிஅமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி மோதவுள்ளது.

15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியை எதிர்த்து அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலய அணி மோதவுள்ளது.

2ஆவது அரையிறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி அணியை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலய அணி மோதவுள்ளது.

17வயதுப்பிரிவு ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதவுள்ளது.

19 வயதுப்பிரிவு பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதவுள்ளது.

2ஆவது அரையிறுதியாட்டத்தில் வட்டு. இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி மோதவுள்ளது.

15வயதுப்பிரிவு பெண்களுக்கான முதலாவது அரையிறுதியாட்டத்தில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி அணி மோதவுள்ளது.

2ஆவது அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை சென்.தோமஸ் றோ.க.த. பாடசாலை அணி மோதவுள்ளது.

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் நடராஜா வித்தியாலய அணியை எதிர்த்து அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணி மோதவுள்ளன.

2ஆவது அரையிறுதி யாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. (த-23)

# அரையிறுதிதான் இலக்கு



ஏழாவது பிரிமியர் லீக் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறுவதே சென்னை அணியின் இலக்கு. என்று அணித் தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.


ஏழாவது பிரிமியர் லீக் தொடரின் முதற்கட்ட ஆட்டங்கள் ஐக்கிய அரபு எமிரேட்டில் நடக்கிறது. இதில் இடம் பெற்றுள்ள டோனி தலைமையிலான சென்னை அணி, தனது முதல் ஆட்டத்தில் பஞ்சாப் அணியை அபுதாபியில் இன்று எதிர்கொள்கிறது.

இந்தத் தொடர் குறித்து டோனி கூறியதாவது: ஏழாவது பிரிமியர் லீக் தொடரில், தட்பவெப்பநிலை முக்கிய பங்குவகிக்கும். ஐக்கிய அரபு எமிரேட்சில் நிலவும் வானிலைக்கேற்ப, வீரர்கள் தங்களை விரைவில் மாற்றிக் கொள்ளும் பட்சத்தில் போட்டியில் சாதிக்கலாம். இந்தியாவில் மும்பை, சென்னை, கொல்கத்தாவில் வெப்பம் மற்றும் ஈரப்பதன் நிறைந்ததாக இருக்கும். ஆனால் டில்லியில் மிகவும் வறண்ட வானிலை காணப்படும். இதேபோலதான் ஐக்கிய அரபு எமிரேட்டிலும் இருக்கும். வீரர்கள் கடுமையான சவாலை சந்திக்க வேண்டும். போட்டி தொடங்கிவிட்டால் இது குறித்து கவலைப்படத் தேவையில்லை.

கிண்ணத்தை வெல்வது குறித்து சிந்திக்கவில்லை. முதலில் எந்த ஒரு அணியையும் குறைத்து மதிப்பிடாமல், தொடக்கத்தில் இருந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியை தக்கவைக்க வேண்டும். குறைந்தபட்சம் அரையிறுதி வரை முன்னேற வேண்டும் என்பதே முதல் இலக்கு.

முதலாவது பிரிமியர் தொடரில் விளையாடிய நிறைய வீரர்கள் தற்போதும் எங்கள் அணியில் இருப்பது பலம். கடந்த தொடர்களில் செய்த தவறுகளை திருத்திக் கொண்டு, சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்போம் - என்றார். (5)

# அனுஷ்காவை மனைவியாகத் தேர்வு செய்தார் ஹோக்லி



ஐ.பி.எல். கிரிக்கெட் விருந்தில் நடிகர் ஷாருக்கான் நடத்திய சுயம்வரம் நிகழ்ச்சியில் நடிகை அனுஷ்கா ஷர்மாவை மனைவியாக தேர்வு செய்து விராட் ஹோக்லி பரபரப்பை ஏற்படுத்தினார்.

**ஐ.பி.எல். விருந்து**

7 ஆவது ஐ.பி.ல். கிரிக்கெட்டையொட்டி தொடக்க விழாவுக்கு பதிலாக இந்த முறை பிரமாண்டமான விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. அபுதாபில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் நடந்த விருந்து கொண்டாட்டத்தில் 8 அணிகளின் தலைவர்களும் மேடையில் தோன்றி வழக்கம் போல் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இதைத் தொடர்ந்து கண்கவர் நடனமும் அரங்கேறியது. ஹிந்தி நடிகை தீபிகா படுகோனே தான் நடித்த பல்வேறு படங்களில் இடம் பெற்ற பாடல்களுக்கு கலக்கலாக நடனமாடி உற்சாகப் படுத்தினார். நடிகர் ஷாருக்கானும் குதூகலப் படுத்த தவறவில்லை. சென்னை எக்ஸ்பிரஸ் என்ற ஹிந்தி படத்தில் இருந்து பிரபலமான லுங்கி நடனத்தை ஆடி அதிர வைத்தார். ராஜஸ்தான் ரோயல்ஸ் அணித் தலைவர் ஷேன் வொட்சன் கிற்றார் வாசித்தபடி பாட்டு பாடினார். சென்னை அணித் தலைவர் டோனி, ஷாருக்கானுடன் இணைந்து கலகலப் பூட்டினார்.

**சுவாரஸ்யமான சுயம்வரம்**

கண்களுக்கு விருந்தளிக்கும் தடபுடலான நடனத்துக்கு மத்தியில் ஷாருக்கான் நடத்திய வித்தியாசமான சுயம்வரம் தான் எல்லோரையும் வெகுவாக கவர்ந்தது. ஷாருக்கான், இந்திய நட்சத்திர கிரிக்கெட் வீரரும், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைவருமான விராட் ஹோக்லியை மேடைக்கு அழைத்து சுயம்வரம் நிகழ்ச்சியை நடத்தினார்.

அப்போது சமூக வலைதளங்கள் மூலம் விராட் ஹோக்லிக்கு, வந்த ஏராளமான காதல் அழைப்புகளில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 8 பெண்களின் புகைப்படங்களை ஷாருக்கான் அவரிடம் காண்பித்தார். இவற்றில், உங்களுக்கு பிடித்தமான மங்கையை வாழ்க்கை துணைவியாக தேர்வு செய்யும்படி ஷாருக்கான் ஹோக்லியிடம் கூறினார்.

**ஹோக்லியின் காதல் தேவதை**

இதையடுத்து ஹோக்லி என்ன செய்யப்போகிறார் என்ற ஆவல் எகிற, அவரோ சிறிதும் தயக்கமின்றி ஹிந்தி நடிகை அனுஷ்கா ஷர்மாவின் படத்தை தேர்வு செய்தார். அந்த புகைப்படம் அவரது கழுத்தில் அணிவிக்கப்பட, அரங்கமே ஒரு கணம் ஆர்ப்பரித்தது. ஆனால் அது பற்றி அவர் எதுவும் பேசவில்லை.

மொடலிங் துறையின் மூலம் ஹிந்தி சினிமா துறைக்குள் நுழைந்த 25 வயதான அனுஷ்கா ஷர்மாவும், விராட் ஹோக்லியும் காதலிப்பதாகவும், அவர்கள் இருவரும் நியூசிலாந்து, இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கு சென்று உல்லாசமாக வலம் வந்ததாகவும் தகவல்கள் பரவின. இப்படி இவர்களிடையே காதல் தீ பற்றி விட்டதாக கூறப்பட்டு வந்த நிலையில் ஹோக்லி, வேடிக்கையான சுயம்வர நிகழ்ச்சியில் அனுஷ்கா ஷர்மாவை தனது வருங்கால துணைவியாக பகிரங்கமாக வெளிப்படுத்தியது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அனுஷ்கா ஷர்மாவை காதலிக்கிறேன் என்பதை இதன் மூலம் அவர் ஒப்புக் கொண்டு விட்டாரா? அல்லது அது வெறும் ஜொலிக்கு மட்டும் தானா? என்பதை காலம் தான் பதில் சொல்லும். (5)




## இன்றைய ஐ.பி.எல் ஆட்டங்கள்

மூன்றாவது ஆட்டம்
சென்னை எதிர் பஞ்சாப் பி.ப 3 மணி

நான்காவது ஆட்டம்
ஹைதரபாத் எதிர் ராஜஸ்தான் பி.ப 7 மணி

# மணமகளுடன் ஓட்டம் பிடித்த உமர் அக்மல்



திருமண விதிகளை மீறிய பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் உமர் அக்மல், பொலிஸாரின் விசாரணைக்கு பயந்து, மணமகளுடன் ஓட்டம் பிடித்தார்.

பாகிஸ்தான் அணியின் இளம் வீரர் உமர் அக்மல் (வயது-23). பல்வேறு சர்ச்சைகளில் சிக்குவது தான் இவரது வேலை. போக்குவரத்து விதிகளை மதிக்காமல் சென்று, பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டு, மன்னிப்பு கேட்ட பின் விடுவிக்கப்பட்டார்.

தற்போது மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார். உமர் அக்மல் திருமண நிகழ்ச்சிகள், லாகூரின் வெளிப்பகுதியில் உள்ள நண்பரின் பண்ணை வீட்டில் நடந்தது.

இந்த நிகழ்ச்சிகள் இரவு 10.00 மணிக்கு மேல் தொடரக் கூடாது என்ற விதி உள்ளது. ஆனால், இரவு வெகுநேரமாக நடந்துள்ளது. இதுதொடர்பாக உள்ளூர் மக்கள் மற்றும் ஊடகங்களிடம் உமர் அக்மல் உள்ளிட்டோர் தவறாக நடந்து கொண்டனர்.

தவிர, விருந்தில் ஏதாவது ஒரு வகை உணவுக்கு மட்டுமே அனுமதி என்ற நிலையில், வித விதமான உணவுகள் பரிமாறப்பட்டன. இதையடுத்து, பொலிஸ் நிலையத்தில் உமர் அக்மல் மீது வழக்குப் பதியப்பட்டது.

இதுகுறித்து, இவரது சகோதரர்கள் கம்ரான் அக்மல், அத்னன் அக்மல் மற்றும் உறவினர்களிடம் பொலிஸார் விசாரித்துக் கொண்டிருந்தனர். அதேநேரம், உமர் அக்மல், மணமகளுடன் அந்த இடத்தில் இருந்து தப்பித்துவிட்டார்.

இவரது இருப்பிடத்தை அறிந்த பொலிஸார், கைது செய்ய வரும் விவரம் அறிந்ததும், நடு இரவில் அடையாளம் தெரியாத இடத்துக்கு சென்று விட்டார்.

இது தொடர்பாக உணவு தயாரிப்பாளர், பண்ணை வீடு உரிமையாளர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். (5)

# பெங்களூர் அபார வெற்றி



டெல்லி டேர்டெவில்ஸ் அணியை 8 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி பெருவெற்றி பெற்றது பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்அணி. 7 ஆவது ஐ.பி.எல். 20 /20 கிரிக்கெட் தொடரின் முதல் கட்ட ஆட்டங்கள் ஐக்கிய அரபு எமி ரேட்ஸில் நடைபெற்று வருகிறது. சார்ஜாவில் நேற்று நடைபெற்ற 2ஆவது லீக் ஆட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி, பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியை எதிர் கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி பந்து வீச முடிவு செய்தது. இதனால் முதலில் துடுப் பெடுத்தாடிய டெல்லி அணியின் தொடக்க வீரர் களாக அகர்வால், முரளி விஜய் களமிறங்கினர். அகர்வால் 6 ஓட் டங்கள் எடுத்த நிலையில் ஸ்டார்க் கிடம் இலக்கை இழந்தார். பின்னர் களமிறங்கிய தினேஷ் கார்த்திக் டக் அவுட் ஆக, அடுத்து வந்த மனோஜ் திவாரியும் 1 ஓட்டத்தில் ஆட்டமிழந்து ரசிர்களை ஏமாற்றினார்.

அதன்பின்னர் முரளியுடன் இணைந்த டுமினி அதிரடியாக ஆட அணியின் ஓட்ட எண்ணிக்கை சடுதியாக உயர்ந்தது. முரளி விஜய் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து பொறுப்புடன் ஆடிய டுமினி, 44 பந்துகளில் அரை சதம் கடந்தார். மறுமுனையில் ரோஸ் டெய்லரும் அதிரடியாக ஆடி அரை சதத்தை நெருங்கினார். இதனால் 20 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் டெல்லி அணி 4 இலக்குகள் இழப் பிற்கு 145 ஓட்டங்கள் எடுத்தது. டுமினி 67 ஓட்டங்களுடனும் (48 பந்துகள், 4 நான்கு 3 ஆறு), டெய்லர் 43 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக் காமல் களத்தில் இருந்தனர்.

பந்து வீச்சில் ஸ்டாத்க், மோர்கல், ஆரோன்,யுஷ்வேந்திர ஷஹால் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

இதையடுத்து 146 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பெங்களூர் அணி களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பார்த்தி பட்டேல், மட்டின்சன் இருவரும் களம் புகுந்தனர். இவர்களில் மட்டின்சன் 4 ஓட்டங்களுடன் வெளியேற களம் புகுந்த அணித் தலைவர் விராட் ஹோக்லி அதிரடி காட்டினார். அணி 62 ஓட்டங்கள் பெற்றிருந்த போது 37 ஓட்டங் களுடன் பட்டேல் வெளியேறினார். அடுத்து களமிறங்கிய யுவராஜ் எதிரணியின் பந்து வீச்சை துவம்சம் செய்தார் இந்த ஜோடி இறுதி வரை ஆட்டமிழக்காமல் அணியை வெற்றி வரை அழைத்துச் சென்றது. இறுதியில் 16.4 பந்துப் பரிமாற்றங் களில் 2 இலக்குகளை மட்டும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகளால் பெரு வெற்றி பெற்றது பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி. துடுப்பாட்டத்தில் யுவராஜ் சிங் ஆட்டமிழக்காது 28 பந்துகளில் 5 ஆறு ஓட்டங்கள் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 52 ஓட்டங்களையும் ஹோக்லி ஆட்டமிழக்காமல் 37 பந்துகளில் 48 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்து வீச்சில் முகமட் சமி, சர்மா ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சாஹால தெரிவு செய்யப்பட்டார். (400)





## ரோஹித் ஷர்மாவுக்கு புகழாரம்

இயல்பான அணித்தலைவர்களில் மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவர் ரோஹித் சர்மாவும் ஒருவர் என அந்த அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட் புகழாரம் சூட்டியுள்ளார்.

நேற்று முன் தினம் நடந்த ஐ.பி.எல் போட்டியில் மும்பை- கொல்கத்தா அணிகள் மோதின. இதில் 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணி அபார வெற்றி பெற்றது.

இதையடுத்து அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட் கூறியதாவது.

அணித்தலைவர் பதவிக்கு பொருந்தியவர்களில் ரோஹித்தும் ஒருவர். களத்தில் மிக முக்கியமான சூழலுக்கு ஏற்றவாறு முடிவெடுக்கும் அவருடைய உத்திகள் அபூர்வமான ஒன்றாகும்.

அணித்தலைவர் என்பவர் சிறப்பாக விளையாடுவது மட்டுமில்லாமல் முன்வரிசையில் நின்று அணியை வழி நடத்த வேண்டும்.

இந்நிலையில் ரோஹித் சர்மா தனது பணியை திறம்பட செய்கிறார், அவரைக் குறைத்து மதிப்பிடக்கூடாது என தான் கருதுவதாக தெரிவித்துள்ளார்.

## ஐ.பி.எல் விசாரணைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

இந்தியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டித் தொடரில் இடம்பெற்ற ஆட்டநிர்ணயச் சதிகளுடன், இந்திய கிரிக்கெட்டின் முன்னிலை அதிகாரி மற்றும் மற்றும் ஏனைய 12 தனி நபர்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு இந்திய உயர் நீதிமன் றம், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் பதவியில் என். சிறினிவாசனுக்கு பதிலாக இடைக் காலத் தலைவராகச் சுனில் கவாஸ்கர் நியமிக்கப்பட்டுள் ளார்.

சென்னை சுப்பர் கிங்கிஸின் உரிமை யாளரான சிறினிவாசனும், ஆட்ட நிர்ணயச் சதியுடன் தொடர்பு கொண் டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் அவருடன் மேலும் 12 அதிகாரிகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான குழு ஒன்றை நியமிக் குமாறு இந்திய உயர் நீதி மன்றம் உத் தரவிட்டுள்ளது. எவ்வாறாயினும் சிறினிவாசன் சர்வதேச கிரிக்கட் பேர வையின் தலைவராக தெரிவு செய்யப் பட்டுள்ளதுடன், அவர் எதிர்வரு[illegible] ஜூலை மாதம் தமது பதவியை ஏற[illegible] வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)


### கோழிக்குஞ்சு விற்பனை

தென்பகுதியில் அரச திட்டங்களின் விநியோகஸ்தரான Lanka Farm இன்
கோழிக்குஞ்சு - 75/= வாத்து குஞ்சு - 150/=
தொடர்பு - 077 7531344, 077 4669669

### சவூதி அரேபியாவில் சாரதிகளுக்கான உடனடி பயணம்

பிறந்திருக்கும் சித்திரை புது வருடத்திரல் இலவசமான பயணமொன்றினை மேற்கொள்ள தயாரகுங்கள்.
சவூதிஅரேபியாவில் Balathiya Driver 40 பேர் உடன் தேவை. (வயது 21 - 40 வரை) சம்பளம் 1000+ OT இலவசமாக பயணம் இரண்டே வாரத்துள் பயணமாகலாம் Srilanka Driving Light Vechile Licenese போதுமானது தங்குமிடம், மருத்துவம் என்பன இலவசம் உங்கள் விண்ணங்கள் நாளை 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் Green Grass Hotel இல் காலை 9 மணி முதல் பி.ப. 1 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
உடன் தொடர்புகளுக்கு: Lanka Voice 077 0584658 Lanka Voice Jaffna Branch No. 077 9527575

### உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்
**CIMA-UK CCNA COMPUTER ENGINEERING-USA**

உயர்ந்த சம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள கற்கைநெறிகள். G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுதிகதி 20 April. பல்கலைக்கழக மாணவர்கள், அரச தனியார் ஊழியர்களும் விண்ணப்பிக்கமுடியும். பிரிவு 1:Sat:9 AM(19 April) பிரிவு 2: Sunday Only 9AM (வெளிமாவட்ட மாணவர்கள். தொழில் புரிவோருக்கானது)
மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)
புலமைப்பரிசிலிற்கு: Type <COURSE><Name>&send to772395895

### NAC மானிப்பாய்

A/L 2016
கலைப்பிரிவு
தமிழ் - T.S.நகன்
வரலாறு - S.பிரபா
அரசியல் - N.பாபு
நாடகம் - L.S.கசன்
இந்து.நாக- N.T.நரன்
புவியியல்
- பிரபல ஆசிரியர்
ஆரம்பம்:
19.04.2014
சனி 10 a.m

### விற்பனையாகின்றன


சுமநல
திணைக்களத்தின்
எழுது விளைஞர்
போட்டிப்பரீட்சை
வழிகாட்டி (300/=)
தொகுப்பு
த. தவசேகர்
பூபாலசிங்கம்,அன்னை, ஸ்ரீலங்கா, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, கஜன், கவிதா,சோதி புத்தகசாலைகளில்

### A/L 2014 வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான மாபெரும் முன்னோடிக் கருத்தரங்கு

வணிகக் கல்வி
திரு. S.K.பாலசபேஷ் (H.N.DIP.IN.ACC)
ஆரம்பம் - 18.04.2014
வெள்ளி - 2.00 மணி (நாளை)
கணக்கீடு
திரு.K.B..பாலகஜன் M.COM (ACC.SPL) B.COM (JAF) H.N.DIP.-IN.- ACC
ஆரம்பம் . 07.05.2014
புதன் -2.30 மணி.
* அனுமதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
* கருத்தரங்கு கையேடுகள் வழங்கப்படும்
இடம் - NEC யாழ்ப்பாணம் (மணிக்கூட்டு கோபுர வீதி) பெருமாள் கோவில்)

### SOLVE THE CROSSWORD

Full Name :..........
DOB :..........
Contact No :..........



HINTS
1.It is a machine
2.It works with a pointer
3.It helps in recording sound
4.It helps listen to the recorded sound
5.It is the brain of a computer
6.It prints on paper
7.It looks like a TV
8.It has many keys on it

Sperate the above "CROSSWORD" and paste in a post card and post to the bellow address
Programme Conditions : Age limit 4 to 12years
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna
Telephone : 021 222 4142
Grab your DISCOUNT for KiDS Programme

### உயர் கலைக் கல்லூரி

குளப்பிட்டிச் சந்தி கொக்குவில்

வர்த்தகப் பிரிவு
2016 A/L
பொருளியல் - ஜெயக்குமார்
கணக்கீடு - சுரேன்
வணிகக்கல்வி - ரிஷிகேசன்
ஆரம்பம் : 19.04.2014
சனி பிற்பகல் ஒரு மணி
கலைப் பிரிவு
வகுப்புகளும் நடைபெறுகின்றன.

### NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்
A/L 2016 கலை, வர்த்தக, தொழில்நுட்ப
புதிய பிரிவுகள் ஆரம்பம்
19.04.2014 சனி 9.00 மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.